www.tamilarangam.net

# களத்தில்

திருவள்ளுவர் ஆண்டு 2028 (03.06. 1998) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தித் தாள் (162) அன்பளிப்பு: 60 p

ஆக்கிரமிப்பாளர்களின் சுவடுகளை இந்த மண் ஒருபொழுதும் சுமந்துகொள்ளாது என்பதை, எதிரிக்கு நாம் நன்கு உணர்த்தி வருகின்றோம்.

- தமிழீழத் தேசியத் தலைவர்

# ஜயசிக்குறுவின் இருமுனை முன்னேற்றம் புலிகளால் முறியடிப்பு



பல்வேறு கோணமும் பார்வை செல்லும் -பகைவன் வரும்போது புலிகள் பாயும்

- ✷ 48மணிநேர கடுஞ்சண்டையில் 50 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர், பலர் காயம்
- ✷ கைப்பற்றப்பட்ட ஆயுதப்பட்டியல் விடுதலைப் புலிகளால் வெளியிடப்பட்டது
- ✷ தாயகம் காக்கும் கடமையில் 9 விடுதலைப் புலிகள் வீரச்சாவு

மாங்குளத்தைக் கைப்பற்றுவதற்கான இருமுனை நகர்வு ஒன்றை சிறீலங்காப் படைகள் மூன்று முறிப்பில் இருந்தும் அம்பகமத்தில் இருந்தும் 28.05.98 இல் ஆரம்பித்தன. வழமை போல் பாரிய ஆயத்தங்களுடனும் வான்படை, டாங்கிப்படை துணைகளுடனும் ஏனைய களங்களில் இருந்து நகர்த்தப்பட்ட பெருந் தொகையான ஆளணிகளுடனும் புறப்பட்ட சிறீலங்காப் படைகளை 48 மணி நேரக் கடுஞ் சண்டையின் பின் 50க்கு மேற்பட்ட இராணுவத் தினர்களையும் பெருந் தொகையான ஆயுதங்களையும்

தொடர்ச்சி 2 ம் பக்கம்...

## பொது மன்னிப்பின்கீழ் இணைந்த இராணுவத்தினன் தமிழீழத் தலைவரிடம் அபயம்

★ கிங்கொரகொடயில் விமானப்படையினன் - ★ சித்தாண்டியில் இராணுவத்தினன்

★ வவுனியாவில் பொலிஸ் ஊழியர்-

### சரணடைந்தோர் சண்டைக்கஞ்சி தற்கொலை

சந்திரிகா அரசாங்கம் பல முறை பொது மன்னிப்பு அளித்தும் - சிறீலங்கா படைகளிலிருந்து விலகி ஓடியவர்கள் படைகளுக்குத் திரும்ப மறுத்து வருவது உலகறிந்த விடயம். இறுதியாக 24.05.98 இல் மீண்டும் 16 மணிநேர கால அவகாசம் ஒன்றை சரணடைவதற்குக் கொடுத்த சிறீலங்கா அரசாங்கம் அதுவும் எதிர்பார்த்த பலனைக் கொடுக்காமை கண்டு தவித்துக் கொண்டிருக்கிறது. இது இவ்விதமிருக்க, கைது செய்யப்படுவார்கள்என்ற அச்சத்தின்

தொடர்ச்சி 2 ம் பக்கம்...

## தமிழ்த்தியாகி சிவகுமாரனின் 24வது நினைவு தினம்

சிறீலங்காவின் தமிழின அழிப்பு நடவடிக்கைகளை எதிர்த்துப் போராடி தன் இன்னுயிரையும் தமிழீழத் தேசிய இனத்திற்காய் தற்கொடையாக்கி தமிழீழ தேசிய விடுதலை உணர்வை வீறு கொண்டெழ வைத்த தமிழ்த் தியாகி சிவகுமாரனின் 24வது நினைவு தினம் 05.06.98ல் தமிழீழ மக்களால் நினைவு கூரப்படவுள்ளது. தியாகி சிவகுமாரனின் நினைவாக அவர்தாய் மண்ணாகிய உரும்பிராயில் நிறுவப்பட்டுள்ள தியாகி சிவகுமாரனின் உருவச் சிலை தமிழீழ மக்களின் வணக்கத்துக்குரிய தேசிய எழுச்சி சின்னமாக தமிழீழ மக்களால் போற்றப்பட்டு வருகிறது. இதனால் இவரின் உருவச்சிலை சிறீ லங்கா படையினரால் பலமுறை பல அவமதிப்புக்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. தற்பொழுது இவரின் நினைவுச்சிலை உள்ள உரும்பிராய் சந்தி சிறீலங்கா படைகளின் ஆக்கிரமிப்பு காவல் அரண்களில் ஒன்றாக உள்ள நிலையில் அந்த ஆக்கிரமிப்பு படைகளை விரட்டியடிப்பதற்கு உதவுவதே தியாகி சிவகுமாரனுக்கு உண்மையான அஞ்சலியாகும் என தமிழீழ நெஞ்சங்கள் தாயகத்திலும் புலம் பெயர் நாடுகளிலும் உறுதி எடுத்து நிற்கின்றனர்.

## யாழ் குடாநாட்டில் சிறிலங்காவின் இராணுவக் கொடுமைகள் தொடர்கதை

- ★ யாழ் வைத்தியசாலையில் மனநோயாளி சுடப்பட்டார்
- ★ நாலு மாணவர் உட்பட ஆறு பேரைக் காணவில்லை
- ★ பொழுது போக்கு உலாவரும் படையினரும் தாக்குகின்றனர்
- ★ ஆயுத முனையில் அனுதாபக் கையெழுத்து பெறப்படுகிறது

மே மாதம் 15ம் திகதி சிறீலங்கா இராணுவத்தினர் யாழ் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த மனநோயாளியான 35 வயது சித்திரவேலு சிவபாலன் மீது நடாத்திய துப்பாக்கிச் சூட்டினால் அவர் காயமுற்றுள்ளார். இம் மனநோயாளி நள்ளிரவு நேரத்தில், முதல் மாடியிலிருந்து கீழ் மாடிக்கு இறங்கி வர முற்பட்ட போதே இவரை சிறீலங்கா இராணுவம் சுட்டுக் காயப் படுத்தியதாகச் செய்திகள்

தொடர்ச்சி 2 ம் பக்கம்...

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மீனவர்களைக் கொன்றுவிட்டு புலிகளின் படகுகள் அழிப்பெனக் கதையளப்பு

கடந்த மாதம் 21ம் திகதி, முல்லைத்தீவு சிலாவத்தை நீரேரியில் வலைவீசி மீன் பிடித்துக் கொண்டிருந்த தமிழ் மீனவர்கள் மேல் சிறிலங்காவின் சிங்கள இனவெறி விமானப் படையினர் காலை 9 மணியளவில் வெறித்தனமான விமானத் தாக்குதல்களை நடாத்தியுள்ளனர். இக்கொடிய தாக்குதலில் 22 வயதுடைய பொன்னுத்துரை கருணாகரன் என்னும் தமிழ் மீனவர் உடல் சிதறி ஸ்தலத்திலேயே இனக் கொலையாகியுள்ளார். கந்தையா ராசரட்னம் என்ற மற்றொரு மீனவர் புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்படுகையில் காலமாகியுள்ளார். மேலும் பதினொரு அப்பாவி மீனவர்கள் இத்தாக்குதலில் காய மடைந்துள்ளனர். இவர்களில் கள்ளப்பாட்டைச் சேர்ந்த 32 வயது எஸ்.உதயகுமார், 35 வயதான சந்திரசேகரம், உடுப்புக் குளத்தைச் சேர்ந்த 21 வயதான கே. யோகேந்திரன் ஆகியோர் படுகாயமுற்றுள்ளனர். யோகேந்திரன் தனது வலது கையை முழங்கையுடன் இழந்துள்ளார். மீனவர்களின் படகுகள் வலைகளுடன் எரிந்து சாம்பலாகியுள்ளன.

இவ்வாறு தமது வயிற்றுப் பசி போக்க கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த அப்பாவி மீனவர்களை இனக்கொலைக்கும் இனத்துன்புறுத்தலுக்கும் உள்ளாக்கிய அரச பயங்கரவாத சிறிலங்காவின் பாது காப்பமைச்சகம், விடுதலைப் புலிகளின் படகுகள் மீது தாக்குதல் நடாத்தப்பட்டதாகவும் ஐந்து படகுகளையும் இருபது விடுதலைப் புலிகளையும் தாம் தாக்கி அழித்துவிட்டதாகவும் உண்மைக்கு மாறான தகவல்களை உலகுக்கு ஒலி-ஒளிபரப்புச் செய்து மகிழ்ந்துள்ளது. ★

## ஜயசுக்குறுவின் இருமுனை ....

இழந்த நிலையில் ஆரம்ப நிலைகளுக்கு பின்வாங்கச் செய்தனர்.

மூன்றுமுறிப்பில் இருந்து புறப்பட்ட சிங்களப் படையணி விடுதலைப் புலிகளின் எதிர்த் தாக்குதலுக்கு முகம் கொடுக்க முடியாமல் தமது ஆரம்ப நிலைக்கு உடனடியாகப் பின் வாங்கினர். அம்பகமத்தில் இருந்து புறப்பட்ட சிறீலங்காப் படையணி விடுதலைப் புலிகளின் எதிர்த் தாக்குதலினால் நிலைகுலைந்து இரு அணிகளாகப் பிளவுபட்ட நிலையில் பின்வாங்கிச் செல்கையில் ஓரணி தமிழீழ விடுதலைப் புலிகளினால் சுற்றிவளைக்கப்பட்டு தாக்கி அழிக்கும் நடவடிக்கைகளுக்கு ஆளாகினர். இதனால் இப்பகுதியில் 48 மணிநேரக் கடும் சமர் மூண்டது. 50க்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். தமிழீழ விடுதலைப் புலிகளினால் கண்டெடுக்கப்பட்ட 20 இராணுவத்தினரின் சடலங்களில் சிதைந்த நிலையில் காணப்பட்ட 11 சடலங்கள் சகல இராணுவ மரியாதைகளுடனும் தகனம் செய்யப்பட மிகுதி 9 சடலங்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் மூலம் சிறீலங்காப் படைகளிடம் கையளிக்கப்பட்டன. இத்தீரம் மிகு சமரில் விடுதலைப் புலிகள் தரப்பில் மேஜர் சுடர், மேஜர் புலியூர் மைந்தன், கப்டன் சபேசன், லெப்.வண்ணநிலவன் அல்லது வசி, கப்டன் இளங்குமரன், வீரவேங்கை நவஜோதி, வீரவேங்கை சீலன், வீரவேங்கை இன்பநேசன், வீரவேங்கை சுதா ஆகிய விடுதலைப் போராளிகள் வீரச்சாவெய்தினர்.

இத்தாக்குதல்களின் பொழுது ஏகே எல் எம் ஜி 2, ரி 56-2 ரைபிள்கள் 06, 60 மி. மீ மோட்டார் 01, 1 மி. மீ சன்னங்க்ள் 40,000 , ரி 56 மகசின்ஸ் 150, ஆர். பி. ஜி. செல்ஸ் 20, ஆர்.பி.ஜி புரப்பளர் 10, கிரனைட் 25, கிட் பாக் 50, நீர்க் கொள்கலங்கள் 100, சன்னம் துளைக்காத ஜக்கெட்டுக்கள் 20, பைனகுலர்ஸ் 01, ஏ. கே. 203 செல்ஸ் 10, குறைந்த அலைவரிசை சாதனம் 01, ஏ. கே. ஹொல்ஸ்டர் 35 ஆதியன கைப்பற்றப்பட்டதாக விடுதலைப் புலிகள் பட்டியல் வெளியிட்டுள்ளனர்.

காயப்பட்ட சிறீலங்கா இராணுவத்தினர் அநுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக செய்தி வெளியிட்ட கொழும்பு வட்டாரங்கள் விடுதலைப் புலிகளின் ஆட்டிலறி மற்றும் மோட்டார் தாக்குதல்கள் சிங்களப்படைக்குச் சிம்ம சொப்பனமாக இருப்பதாக தெரிவித்துள்ளன.

களமுனைக்கு மூன்று தொகுதி படையினரை அனுப்பி விட்டோம் பொது மன்னிப்பின் பொழுது மீண்டும் படைகளில் சேர்ந்தவர்களும் ஏற்கனவே கைது செய்யப்பட்டு தண்டனை அடைந்தவர்களும் அல்லைப்பிட்டி மண்கும்பான் மண்டை தீவு பகுதிகளில் இருந்து நகர்த்தப்பட்ட படையினரும் இதில் அடங்குவர் என்றெல்லாம் செய்திபரப்பிய சிறீலங்கா பிரதிபாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தை களமுனைக்குச் சென்று ஊக்குவித்தார் என்றெல்லாம் செய்திக்கு மேல் செய்தி வெளியிட்ட சிறீலங்கா ஜயசிக்குறுய் களத்தில் தனது படைகள் திணறுண்டு சிக்குண்டு சிதறி அழிந்த செய்திகளை மட்டும் வழமை போல் பெரும் இருட்டடிப்பு செய்துள்ளது. ★

## பொதுமன்னிப்பின் கீழ் இணைந்த......

பேரில் படைகளுக்குத் திரும்பியவர்களும் மனவிரக்தியுற்றவர்களாய் தற்கொலை மனோபாவத்துடன் காணப்படுவதை செய்திகள் எடுத்துக் காட்டிவருகின்றன.

முப்படைகளைச் சேர்ந்தவர்களுக்கிடையிலும் சண்டைக்கஞ்சி தற்கொலைகள் இடம் பெற்றுள்ளன. கிங்கொரகொட சிறீலங்கா விமானப்படை முகாமில் கைதாவதற்கு அஞ்சி பொது மன்னிப்பின் பொழுது சரணடைந்த விமானப் படையினனான குருணாகலையைச் சேர்ந்த கருணாரத்தினா 22.05.98 வெள்ளிக் கிழமை அன்று தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டுள்ளான்.

சிறீலங்கா இராணுவத்தினன் ஒருவன் சண்டைக்கு அஞ்சி சித்தாண்டியில் தற்கொலை செய்து கொண்ட செய்தி பழசாவதற்கு இடையில் வேறொரு இராணுவத்தினன் தனது இரு கால்களையும் ரயில் தண்டவாளத்தில் வைத்து துண்டித்து சண்டைக்குத் தப்பித்துக் கொண்ட பரிதாபச் செய்தி வெளியாகியது. இவைகள் – சிறீலங்கா இராணுவத்தினரிடை தலைதூக்கியுள்ள தற்கொலை மனோநிலைக்கு சில உதாரணங்களாக உள்ளன.

இந்த அச்ச மனோநிலை சிறீலங்காப் பொலிஸ் படையினனையும் விட்டு வைக்கவில்லை. வவுனியாவில் பந்துலு விஜயசிறி என்ற சிறீலங்காப் பொலிஸ் தான் பதுங்கி இருந்த பதுங்கு குழிக்குள்ளேயே தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டுள்ளான்.

இவ்வாறு சந்திரிகா அரசின் பலவந்தத்தின் பேரில் படைகளுக்குத் தள்ளப்பட்டு நின்று தவிக்கும் சிங்கள இளைஞர்கள் தற்கொலை மனோநிலைக்குத் தள்ளப்பட்டு வருவதைக் கண்ட ஜயசிக்குறுய் சிறீலங்கா இராணுவத்தினன் ஒருவன் தனது உயிரினைக் காப்பாற்றிக் கொள்ள தமிழீழ விடுதலைப் புலிகளிடம் தனது ஆயுதங்களுடன் சரணடைந்த சம்பவம் ஜயசிக்குறுய் களத்தில் இடம் பெற்றுள்ளது.

பொருளாதாரக் கஷ்டங்களினாலேயே தான் படையில் சேர்ந்ததாகவும் பின்னர் அதிலிருந்து தப்பியோடி தலைமறைவாக வாழ்ந்து கொண்டிருந்த வேளை சந்திரிகா அரசாங்கம் தன்னை மீண்டும் பிடித்து ஜயசிக்குறுய் யுத்த முனைக்கு அனுப்பி வைத்ததாக அச்சரணடைந்த இராணுவத்தினன் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் எடுத்துக் கூறியுள்ளான். இது விடயம் குறித்து , தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் அக்கறையுடன் விசாரித்ததுடன் அவரை அவரின் வீட்டுக்கு அனுப்பி வைப்பதென முடிவு செய்துள்ளார். இதனை அடுத்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் இவர் குறித்து தெரிவிக்கப்பட்டபோது, மேற்படி இராணுவத்தினனோடு நேரில் உரையாடியதை அடுத்து அவர் தொடர்பாக என்ன நடவடிக்கை எடுக்கலாம் எனச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஆலோசித்து வருவதாக வன்னிச் செய்திகள் தெரிவித்துள்ளன.

இது ஒருபுறமிருக்க, மட்டக்களப்பு பொலநறுவை எல்லைப் பகுதியில் – புனானைக் காட்டுப் பகுதியில் விடுதலைப் புலிகளைத் தாக்கவென பதுங்கியிருந்த சிங்கள இராணுவம் அதே நோக்குடன் பதுங்கிப்பதுங்கி வந்த சிங்கள இராணுவத்தின் மற்றொரு அணியை விடுதலைப் புலிகள் எனத் தவறுதலாகச் சுட்டதில் ஒரு சிங்கள இராணுவத்தினன் கொல்லப்பட்டுள்ளான். சிறீலங்கா இராணுவத்தின் அச்சப்பட்ட உளவியல் தன்மைக்கு இதுவும் மற்றொரு உதாரணமாகியுள்ளது. ★

## யாழ்குடாநாட்டில்.....

தெரிவிக்கின்றன.

இராணுவத்தினர் இவ் அப்பாவி மனநோயாளி மீது நடாத்திய துப்பாக்கிச் சூட்டு சத்தத்தினால் அச்சமுற்ற இரத்தவங்கி, பூதவுடல் வைக்கும் அறை ஆகியவற்றுக்கு முன் நின்ற இராணுவத்தினரும் கண்மூடித்தனமாக சுட ஆரம்பித்தனர் எனவும், இதனால் யாழ் வைத்தியசாலை நோயாளிகள் மனக்கிலேசமுற்று அங்கும் இங்கும் ஓடியதினால் சில மணி நேரங்களுக்கு பெரும் குழப்ப நிலையும் பதற்றமும் ஏற்பட்டதாக யாழ் வைத்தியசாலை வட்டாரச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும், மே மாதம் 20ம் திகதி நல்லூார் சாதனா பாடசாலையைச் சேர்ந்த நாலு மாணவர்கள் காணாமல் போயுள்ளனர். 17 வயதினரான எல். சுதர்சன், எல். பார்த்தீபன், எஸ். விவேக் ஆகியோரும் 14 வயது எஸ். சுகிர்தன் என்பவருமே காணாமல் போன மாணவர்களாவர். இவர்கள் ஈ. பி. டீ. பி யினரால் கடத்திச் செல்லப்பட்டதாக அஞ்சப்படுகிறது.

இதற்கிடை, இம்மாதம் 22ம் திகதி காலை பத்தரை மணியளவில் பருத்தித்துறையில் இருந்து உடுப்பிட்டி வழியாக யாழ்ப்பாணம் செல்லும் பஸ் வண்டியில் பயணம் செய்த இரு தமிழ் இளைஞர்கள் உடுப்பிட்டி இராணுவச் சோதனைச் சாவடியில் வைத்துக் சிறீலங்காப் படையினரால் கைதாக்கப் பட்டதாகவும் பின்னர் இவர்கள் காணாமல் போயுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இவர்கள் தொடர்பான தகவல்களைத் தரும்படி இவர்களது குடும்பத்தினர் சிறீலங்கா இராணுவ அதிகாரிகளை அணுகிய பொழுது, இவர்களைத் தாம் கைது செய்யவில்லை என மறுத்துள்ளமை இவர்களது குடும்பத்தினருக்கு பலத்த அச்சத்தை தோற்றுவித்துள்ளது. இதனால் இவர்களது நிலை குறித்து அறியத் தமக்கு உதவுமாறு இவர்களது குடும்பத்தினர் மனித உரிமை அமைப்புக்களை கேட்டுக் கொண்டுள்ளனர்.

இது ஒருபுறம் இருக்க யாழ்ப்பாணக் குடாநாட்டில் 22 வயதான குணம் ஆனந்தராசா என்பவரை பொழுது போக்காக தெருவில் உலாவப் புறப்பட்ட சங்கானையில் முகாமிட்டிருக்கும் சிறீலங்கா இராணுவத்தினர் நையப் புடைத்துள்ளனர். மிருகத்தனமான முறையில் தாக்கப்பட்ட ஆனந்தராசா யாழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதே சங்கானைப் பகுதியில் 19 வயதான முத்துத்தம்பி பீரீதா என்னும் தமிழ் இளம் பெண் அதிகாலை நேரத்தில் அணிந்திருந்த இரவு உடையினைக் கூட மாற்ற அனுமதி மறுக்கப்பட்ட நிலையில் சிறீலங்கா இராணுவத்தினரால் கைதாக்கி இழுத்துச் செல்லப்பட்டுள்ளார். இதனை தடுக்க முற்பட்ட இவரின் தந்தையையும் சிறீலங்கா இராணுவ மிருகங்கள் கடுமையாகத் தாக்கியதாகச் சங்கானைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும், யாழ் அரியாலைப் பகுதியில் சிங்கள இராணுவத்தினருடன் சேர்ந்து இயங்கும் புளட் குழுவைச் சேர்ந்த ஒருவனால் இம்மாதம் 22ம் திகதி சுடப்பட்ட 26 வயதுடைய கேதீஸ்வரன் கலைவாணி என்ற தமிழ்ப் பெண் யாழ் வைத்தியசாலையில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவர் தன்னைச் சுட்டவர்களைக் குறித்து முறைப்பாடு செய்த பொழுதிலும் எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என யாழ்ச் செய்திகள் சுட்டிக்காட்டியுள்ளன.

மேலும், வல்லிபுரம் சோதனைச் சாவடி– பருத்தித்துறையில் கொல்லப்பட்ட சிறீலங்கா பிரிகேடியர் லாறி விஜயரத்தினாவின் மரணத்திற்கு அனுதாபம் தெரிவிப்பதற்கு வைக்கப்பட்டுள்ள அனுதாபப் புத்தகத்தில் கையொப்பம் இடுமாறு இச்சோதனைச் சாவடியைத் தாண்டிச் செல்லும் அனைத்து தமிழ்ப் பொது மக்களும் ஆயுதமுனையில் கட்டாயப்படுத்தப்பட்டு வருகின்றனர் என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, யாழ் குடாநாட்டில் சுற்றி வளைப்புக்கள் என்னும் மக்கள் மீதான முற்றுகைகளும் தேடுதல் நடவடிக்கைகள் என்னும் இனஅழிப்பு வேட்டையாடல்களும் இம் மாதத்தில் என்றும் இல்லாத அளவுக்கு அதிகரித்துக் காணப் படுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. ★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# தகர்க்கப்படும்வரை தொடரும்

'ஜயசிக்குறுய்' நடவடிக்கையை சிறீலங்கா எப்பாடு பட்டாவது – எத்தனை இழப்புக்களைச் சந்தித்தாவது, நிறைவேற்றக் கங்கணம் கட்டி நிற்பதை, கடந்த வாரம் மாங்குளத்திற்கு தென் மேற்காக உள்ள மூன்றுமுறிப்பின் தென் புறத்திலிருந்தும்– மாங்குளத்திற்கு வடகிழக்காக உள்ள அம்பகமத்தின் மேற்கு புறத்திலிருந்தும்– சிறீலங்கா படைகள் மாங்குளத்தை நோக்கி முன்னேற எடுத்த பகீரத முயற்சிகள் தெளிவாக்கியுள்ளன.

பீரங்கிப் படைப்பிரிவு, டாங்கி எதிர்ப்பு விசேட அணி , விமான எதிர்ப்பு அணி, வேவுப்பிரிவு, கரும்புலி அணி ஆகிய பலம் பொருந்திய படைப்பிரிவுகளுடன் 'ஜயசிக்குறுய்' இன் முன்னேற்றத்தை தடுத்து நிற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளை எதிர்கொண்டு முன்னேறுவது என்பது மிக கடினமான செயல் என்பது சிறீலங்கா அரசாங்கத்திற்குத் தெரியாத ஒன்றல்ல. இதனால், பாதை திறப்பு என்பது இலகுவில் கைகூடக் கூடிய காரியமல்ல என்பதும் அத்தகைய ஒரு முயற்சிக்கு தான் செலுத்திக் கொண்டிருக்கும் கூலி மிகப் பெரிது என்பதும் சிறிலங்கா அரசாங்கத்திற்கு நன்கு தெளிவான ஒன்று.

ஆயினும், சிறீலங்கா மேலும் மேலும் படையணிகளைக் குவித்து 'ஜயசிக்குறுய்' நடவடிக்கையினைத் தொடர்வதற்கு திடசங்கற்பம் பூண்டு நிற்கிறது. இதற்காக, இம்முறை மண்டைதீவு, மண்கும்பான் பகுதிகள் உட்பட குடாநாட்டின் பல, சிறுசிறு இராணுவ முகாம்களை அவசரம் அவசரமாக மூடிவிட்டு படைகளினை எல்லாம் ஒன்று திரட்டி 'ஜயசிக்குறுய்' களத்தில் குவித்து எப்படியாவது மாங்குளம் சந்தியில் கால்பதிக்க கடும் முயற்சி செய்கிறது. வேறு விதமாக கூறுவதானால் சிங்கள இளைஞர்களை காவு கொடுத்தாவது எடுத்த காரியத்தை முடிக்க சந்திரிகா குடும்பம் யுத்தவெறி கொண்டு அவசரப்பட்டு நிற்கின்றது. இதற்குக் காரணம் சிறீலங்கா இராணுவ இயந்திரம் தமிழீழம் எங்கும் –தமிழீழ விடுதலைப் புலிகளால்– உடைத்தெறியப்பட்டு வருவதை சிங்கள இராணுவமே உணரத்தொடங்கி விட்டதால் சிங்கள இராணுவம் போராடுவதற்கான உளவியல் தன்மையை வேகமாக இழந்து வருவதை அவசரம் அவசரமாக தடுப்பதுவேயாகும்.

சிறீலங்கா இராணுவ இயந்திரம் தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுதிக்கு முன்னால் வேகமாக உருக்குலைந்து கொண்டு செல்கிறது. விடுதலைப் புலிகளை ஒரு எல்லைக்குள் கட்டுப்படுத்த முயற்சித்த சந்திரிகா அரசாங்கம் அதில் தனக்கேற்பட்ட தோல்வியினால் தமிழீழப் பிரதேசத்தில் மட்டுமல்ல முழுச் சிங்களப் பிரதேசங்களில் கூட புலிக் கிலி பிடித்துத் தவிக்கின்றது. யுத்தம், யுத்தத்தை நடத்துகின்றவர்களின் பிரதேசங்களுக்குள்ளே தள்ளுப்பட தள்ளுப்பட யுத்தத்தை நடாத்துகின்ற அரசாங்கத்திற்கு அதனது மக்களிடமிருந்து அழுத்தங்கள் வேகமாக அதிகரிப்பது உலக வழமை. இவ்வகையில் சிங்கள மக்களிடம் இருந்தும் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரும்படியான அழுத்தங்கள் சந்திரிகா அரசுக்கு அதிகரிப்பது இயல்பான ஒன்றே. அதனால் சந்திரிகா அரசுக்கு இந்த யுத்தத்தை நீண்ட நாட்களுக்கு தொடர முடியாது என்பது நன்கு தெளிவாகி விட்டது. அதனால், குறுகிய காலத்தில் சிங்களப் படைகளின் ஆளணிப் பலத்தைப் பெருக்கி தமிழர்களையும் தமிழர் தாயகத்தையும் அழித்தொழித்து இராணுவத் தீர்வால் தமிழர் தேசிய எதிர்ப்பை நசுக்கி, தான் விரும்பிய அரசியல் தீர்வுப் பொதியை வலிமையிழந்த தமிழர்களின் தலையில் கட்டியடித்து இலங்கைத்தீவு முழுவதையும் தனிச்சிங்கள நாடாக்கி விடலாம் என்பதே சந்திரிகா அரசாங்கத்தின் தவிப்பு. ஆனால், இது நடைமுறைச் சாத்தியமற்றது மட்டுமல்ல இரு தேச இனங்களுக்குமே பேரழிவுகளை விளைவிக்கும். பண்டாரநாயக்கா குடும்ப விளையாட்டு என்பது யுத்தத்தை நடத்துபவர்களின் பிரதேசங்களுக்குள்ளேயே யுத்தம் தள்ளப்படுவதிலிருந்து சிங்கள மக்களுக்கும் நன்கு புலனாகியுள்ளது. இதனால், சந்திரிகாவின் ஆளணித் திரட்டுக்கு சிங்கள மக்களிடம் ஆதரவு கிட்டவில்லை. இதனை ஈடு செய்ய படைகளை விட்டு விலகி ஓடியவர்களுக்கு ஒன்பது பொதுமன்னிப்புக் கொடுத்த உலகசாதனையை சந்திரிகா அரசாங்கம் சாதித்தும் கூட புலிகளைக் கண்ட அச்சத்தில் படைகளின் பக்கத்தில் தலைவைத்துப் படுக்ககூட அவர்கள் மறுத்து வருகின்றனர். கைதாக்கி 'ஜயசிக்குறுய்' களத்திற்கு தள்ளியவர்கள் கூட தற்கொலை மனோபாவத்துடனும் சரணடையும் நோக்குகளுடனும் செயற்படுவதை களச்செய்திகள் உலகுக்கு காட்டி நிற்கின்றது. இதனால், யாழ்குடா நாட்டு ஆக்கிரமிப்பில் உற்சாகம் அடைந்த படையினரை 'ஜயசிக்குறுய்' களத்திற்கு இடம்பெயர்ந்து அவசரம் அவசரமாக 'ஜயசிக்குறுய்' இனை மாங்குளம் மட்டுமாவது வழிநடத்த ரத்வத்தை படாதபாடு படுகின்றார். அதேவேளை, பள்ளிப் பிள்ளைகளை கட்டாய இராணுவ சேவை என்ற பெயரில் களமிறக்கி பலிகள் கொடுத்தாவது பாதை திறந்து தமது அரசியல் பாதை மூடப்பட்டு விட்டதை சமாளிக்க முயற்சிக்கின்றார். ஆனால், விடுதலைப் புலிகளின் முன்னரங்க அணிகளுக்கு பின்னிருந்தே தமது அணியினரின் இருப்புகளுக்கு சேதம் ஏதும் ஏற்படாதவாறு துல்லியமாக கணக்கீடு செய்து அப்பால் உள்ள சிறீலங்காவின் படையினர் மேல் சரமாரியான ஆட்டிலறி மோட்டார் தாக்குதல்களை நடாத்தும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பீரங்கி படையினர்க்கு முன்னால் பல ஆண்டுகள் பயிற்சி பெற்ற சிறீலங்கா இராணுவ விற்பன்னர்களாலேயே முன்னிற்க முடியாமல் உள்ள போது பயிற்சி படைகளை களத்திற்கு கொண்டு வருவது என்பது தற்கொலைக்கொப்பான செயலாக அமையும் என்பது மட்டுமல்ல விடுதலைப் புலிகளின் பெருவெற்றிக்கு வழிவகுக்கும் என இராணுவ ஆய்வாளர்கள் கருதுகின்றனர். பயிற்சி பெற்ற புதியவர்களை வேறு இடங்களில் காவலுக்கு நிறுத்தி விட்டு அனுபவம் மிக்கவர்களை 'ஜயசிக்குறுய்' க்கு இடம்பெயர்ப்பது என்பதும் யுத்தம் எல்லைக்கு கட்டுப்படாது விரிவு அடைந்த நிலையில் பேராபத்துக்களையே சிறீலங்காவுக்கு ஏற்படுத்தும் என்னும் அச்சம் இராணுவ ஆய்வாளர்களிடை தலைதூக்கியுள்ளது.

சுருக்கமாகக் கூறுவதானால் சிறீலங்கா இராணுவ இயந்திரம் ஈடுசெய்ய இயலாத அளவுக்கு பல கோணங்களில் விடுதலைப் புலிகளினால் தகர்க்கப்பட்டு விட்டது. அதனை முற்றாக அழிக்கும் வரை அதற்குப் புத்துயிர் கொடுப்பதற்கு சிறீலங்கா மீண்டும் மீண்டும் 'ஜயசிக்குறுய்' இனை தொடர முற்பட்டுக் கொண்டே இருக்கும். இவ்வாறு

மீளவும் சண்டையைத் தொடர்வது பாதை திறப்பதற்கு அல்ல. பாதை திறப்பென்ற பெயரில் தமிழ் மக்களையும் தமிழர் தாயகத்தையும் நாசமாக்குவதினால் படிப்படியாக தமிழீழத் தேசத்தை மீள விடுதலை செய்தல் என்ற எண்ணக் கருவையே அழித்தொழித்து விடலாம் என்னும் அரசியல் நோக்கேயாகும். இதனை புலம்பெயர் தமிழராகிய நாம் வெறுமனே பார்த்திருக்க முடியாது. தமிழீழ விடுதலைப் புலிகளினால் - சிறீலங்காவின் இராணுவ இயந்திரம் முற்றாக தகர்த்தெறியப்பட எம்மால் ஆன அனைத்தையும் உடனே செய்தல் வேண்டும். சிறீலங்கா இராணுவ இயந்திரம் நொறுக்கப்படும் வரை 'ஜயசிக்குறுய்' தொடர்ந்து கொண்டே இருக்கும்.

# வன்னிக்களத்தின் சவால்களும்

# பெண்கள் படையணிகளின் தீரமும்

ஜெயசிக்குறுய் நடவடிக்கையை எதிர்த்துப் போரில் ஈடுபடும் பெண்புலிகள் பல சிக்கலுக்கு மத்தியிலும் அவற்றுக்கு முகம் கொடுத்து சண்டை பிடித்து வருகிறார்கள். குடிநீர் நெருக்கடி, குளிப்பதற்கு நெருக்கடி, காலநிலை மாற்ற நெருக்கடி, உடல்நிலை நெருக்கடி எனப்பல சிக்கல்களையும் கடந்து அவர்கள் சிறீலங்காப் படைகளுக்கு எதிராகப் போரில் ஈடுபடுகின்றனர். நெடுங்கேணியிலிருந்தும் வவுனியா விலிருந்தும் இருமுனைகளில் ஜெயசிக் குறுய் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்தே பெண்கள் படையணிகள் இராணுவத்தை எதிர்த்துத் தாக்கும் நடவடிக்கையில் பங்கெடுத்து வரு கிறார்கள்.

இவ்வாறு தளபதி விதுஷா, தளபதி துர்க்கா ஆகியோர் ஜெயசிக்குறுய் சண்டையில் பெண்புலிகளின் பங்களிப்பு பற்றி குறிப்பிட்டனர். தளபதி துர்க்கா அவர்கள் இதுபற்றி மேலும் கூறியதாவது: 'ஜெயசிக்குறுய் நடவடிக்கைக்கு எதிரான பாதுகாப்புப் போரில் காடுகளில் நிலைகளை அமைக்கும்போது அங்கே எங்களுக்குப் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. குடிதண்ணீர் நெருக்கடி, குளிப்பதற்கு நெருக்கடி எனப் பல நெருக்கடிகள் உண்டு. மழை காலங்களில் அதற்குள் நின்று நனைந்து உடைமாற்ற இயலாமல் ஈரத்துடனேயே நிற்க வேண்டியிருக்கும். இதைவிட இயற்கையான உடல் பிரச்சினைகளுக்கும் முகங்கொடுக்க வேண்டியிருக்கும். இவற்றையெல்லாம் பெண்போராளிகள் இலகுவாகச் சமாளித்து சண்டை பிடிக்கிறார்கள். சண்டையும் அவர்களுக்கு இலகுவாகவே இருக்கின்றது.

**பெண்கள் படையணியின் வளர்ச்சிக்கு அதன் போரிடும் ஆற்றலுக்கு மன்னகுளம் சமரை உதாரணமாகக் கூறலாம். அமெரிக்க "கிறீன் பெரட்" விசேட பயிற்சியாளர்களால் பயிற்சி அளிக்கப்பட்டு, மிகவும் எதிர்பார்ப்புடன் களத்தில் இறக்கப்பட்ட சிங்கள கொமாண்டோப் படையணியை முற்றாகச் சிதறடித்து அச் சமரின் வெற்றிக்கு உயிர்நாடியாய் விளங்கியது பெண்கள் படையணி.**

முன்பு டாங்கிகள் எங்களுக்கு அச்சுறுத் தலான விடயம். எதிரியின் அந்தப் பலத்தை அழிப்பதற்காக எமது தலைவர் டாங்கி எதிர்ப்புப் பிரிவை உருவாக்கினார். இன்று டாங்கி எதிர்ப் பிரிவின் பெண்கள் அணி இலகுவாக டாங்கிளை அழிக்கின்றது.

என்றார் தளபதி துர்க்கா அவர்கள்.

தளபதி விதுஷா அவர்கள் இதுபற்றிக் குறிப்பிடுகையில்,

"பெண் போராளிகளின் போரிடும் வலுவுக்கு எடுத்துக்காட்டாக, 1997–12–04 அன்றைய மன்னகுளம் சண்டையைக் குறிப்பிடலாம். பெண்கள் படையணிகளின் வரலாற்றில் அது முக்கியத்துவம் வாய்ந்த சண்டை. அமெரிக்க இராணுவத்தினால் பயிற்றுவிக்கப்பட்ட சிறீலங்காவின் சிறப்புப் படையணிகள் இந்தச் சண்டையில் பங்குபற்றின. பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தவால் மிகுந்த எதிர்பார்ப்புடன் அந்தப் படையணிகள் களத்தில் இறக்கப்பட்டன. அன்றைய சண்டையில் அவரது எதிர்பார்ப்பு முற்றாக முறியடிக்கப்பட்டது. அவரது சிறப்புப் படையணிகளை சொற்ப போராளிகளே எதிர்த்துச் சண்டையிட்டனர். தம் இலக்கை அடையவென இராணுவம் கடுமையாக முயற்சித்தும் போராளிகள் அந்த இடத்தை விட்டுக் கொடுக்க வில்லை: இராணுவம் நகர முயற்சித்த திசைகளிலெல்லாம் போராளிகள் துரத்திக் கொண்டேயிருந்தார்கள். பெரும் அழிவை ஏற்படுத்தினார்கள். அந்தப் பெண் போராளிகள் நீண்டகால சண்டை அனுபவம் கொண்டவர்களல்ல. ஜெயசிக்குறுய் நடைபெற்றுக் கொண்டிருந்த காலப் பகுதியிலேயே போராட்டத்துடன் இணைந்து பயிற்சி எடுத்து களத்திற்கு வந்தவர்கள். அவர்கள் மிகத் திறமையாக சண்டையிட்டதற்காக தலைவரால் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டனர். என்று தெரிவித்தார்.

இன்றுவரை ஜெயசிக்குறுய் நடவடிக்கை க்கு எதிராக விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்டுவரும் பாதுகாப்புத் தாக்குதல்களிலும் ஊடறுப்புத் தாக்குதல்க ளிலும் தொடர்ந்தும் பெண்கள் படையணிகள் தம் சிறப்பான பணியை ஆற்றுகினறன.

www.tamilarangam.net



# தமிழ்ப் பிரதேசங்களில் சிங்கள மொழித் திணிப்பு
# சிங்களக் குடியேற்றங்கள் அதிகரிப்பு

ஆக்கிரமிக்கப்பட்ட தமிழீழப் பகுதிகளில் சிங்கள மொழியினைப் அறிமுகப்படுத்தி தமிழர்கள் எல்லோரையும் கட்டாயப்படுத்தி சிங்கள மொழி பேச வைப்பதற்கான செயற்திட்டமொன்றை, சிறிலங்கா அரசு ஆயுதமுனையில் நடைமுறைப்படுத்தத் தொடங்கியுள்ளது.

யாழ்க்குடா நாடெங்கும் அடையாளப் பலகைகள், வீதிகளின் பெயர்கள், பேரூந்து வண்டிகளின் சேருமிட அறிவிப்புக்கள் என எல்லாவற்றிலுமே சிங்களத்திற்கு முதன்மை கொடுக்கப்பட்டு சிங்கள எழுத்துக்கள் கொட்டை எழுத்தில் எழுதப்பட்டு, தமிழ் எழுத்துக்கள் சிறிய அளவில் மூலைகளில் பொறிக்கப்பட்டு வருவதைக் காணக் கூடியதாக உள்ளது. இலக்கண நெறிமுறைகளுடன் காலம் காலமாக செம்மையான முறையில் தமிழ் வளர்க்கப்பட்ட யாழ். மண்ணிலே தமிழ் அறிவிப்புக்கள் எழுத்துப் பிழைகளுடன் பொருள் விளங்க இயலாத நிலையில் பரிதாபமாக காட்சியளிக்கின்றன.

தென்தமிழீழத்தில் தொல்பெரும் தமிழ்க் கிராமங்களின் பெயர்கள் சிங்களப் பெயர்களால் மாற்றீடு செய்யப்பட்டு வருகின்றன. திருகோணமலையில் சீனன்குடாவுக்கு அண்மையில் உள்ள 'சின்னயாழ்ப்பாணம்' என்ற கிராமத்தை 'ஜெனசவியபுர' எனவும் நெடுங்குடா என்ற தமிழக் கிராமத்தை 'நாலந்தபுர' எனவும் பெயர் மாற்றம் செய்து சிங்களத்தை திணித்துள்ளது. முன்னர் வவுனியா மாவட்டத்தில் பெயர்மாற்றம் செய்தபோது, நடைபெற்ற நடவடிக்கைகள் இவ்விடங்களிலும் தற்போது நடைபெறுகின்றன. அதாவது, புதிய சிங்களப் பெயரில் முகவரியிடப்படாத கடிதங்கள் சிறிலங்கா தபால் திணைக்களத்தால் விநியோகம் செய்யப்படாது வீசப்பட்டு வருகின்றன.

மேலும் முது தமிழ் நகர் மூதூரில் நகர மத்தியில் சிறிலங்கா அரசு, திணைக்களங்களுக்குச் சொந்தமான காணிகளில் சிங்களக் குடியேற்றங்களை நடாத்தி திருகோணமலையின் சந்தைப் பகுதியை சிங்கள மயப் படுத்தியது போல் இப்பகுதியையும் முழுச் சிங்கள மயப்படுத்தி வருகிறது. இவ்வாறு குடியேற்றப்பட்ட 35 சிங்களக் குடும்பங்களுக்கு அக்காணிகளை நிரந்தரமாக கொடுக்கும் வேலைகளில் சந்திரிகா அரசு மும்முரமாக ஈடுபட்டு வருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. ஆயுத முனையில் இப்பகுதிகளில் குடியேற்றப்பட்டுள்ள மூதூரில் முன்னர் எப்பொழுதுமே வாழ்ந்திராத இச் சிங்களவர்கள் நகர மத்தியில் கொட்டில்கள் அமைத்து கசிப்பு விற்பது, ஆபாச தொலைக்காட்சி படங்கள் காட்டுவது, சுவிப் டிக்கற்றுக்கள் விற்பது, குதிரைப் பந்தய டிக்கற்றுக்கள் விற்பது போன்ற சமூக விரோத தொழில்களைப் பெருக்கி வருவதாகவும் அச் செய்திகள் சுட்டிக்காட்டியுள்ளன.

தென் தமிழ்ப் பிரதேசங்களான திருகோணமலை, மட்டக்களப்பு, மணலாறு பகுதிகள் சந்திரிகா அரசால் ஆயுதமயப்படுத்தப்பட்ட சிங்களக் குடியேற்றங்களால் மோசமான இனவிகிதாசார மாற்றங்களுக்கு உள்ளாகி வருவதாக புள்ளி விவரங்கள் எடுத்துக் காட்டுகின்றன. பொத்துவிலில் சிங்கபுர என்ற சிங்களக் கிராமம் ஒன்று ஆயுதமுனையில் சந்திரிகா அரசாங்கத்தால் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளது. ★

# சொந்த வீடுகளுக்குப் போக முடியாது கட்டாயத் தடுப்பு முகாமில் 5541 தமிழர் தவிப்பு

தாங்கள் வாழ்ந்த வீடுகளுக்குச் செல்ல முடியாதவாறு, 5541 தமிழீழ மக்கள், கட்டாயத் தடுப்பு முகாம்களில் பரிதாப வாழ்வு வாழும் நிலை சந்திரிகா அரசாங்கத்தால் உருவாக்கப்பட்டுள்ளது. வலிகாமம் கிழக்கு, வலிகாமம் வடக்குப் பகுதிகளைச் சேர்ந்த மக்களே இவ்வாறு பாதுகாப்பு காரணங்கள் என்ற போர்வையில் தங்களது வீடுகளுக்குச் செல்ல சிறீலங்கா இராணுவத்தால் அனுமதி மறுக்கப்பட்டு கட்டாய முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டு வதைக்கப்பட்டு வருகின்றவர்களாவர்.

கோப்பாயில் 194 குடும்பங்களைச் சேர்ந்த 734 பேர் 7 தடுப்பு முகாம்களிலும், சங்கானையில் 229 குடும்பங்களைச் சேர்ந்த 823 பேர் 13 தடுப்பு முகாம்களிலும், சண்டிலிப்பாயில் 221 குடும்பங்களைச் சேர்ந்த 784பேர் 9 தடுப்பு முகாம்களிலும், தெல்லிப்பளையில் 127 குடும்பங்களைச் சேர்ந்த 440 பேர் 3 தடுப்பு முகாம்களிலும், உடுவிலில் 241 குடும்பங்களைச் சேர்ந்த 907 பேர் 8 தடுப்பு முகாம்களிலும், பருத்தித்துறையில் 253 குடும்பங்களைச் சேர்ந்த 1081 பேர் 7 தடுப்பு முகாம்களிலும், யாழ்ப்பாணத்தில் 83 குடும்பங்களைச் சேர்ந்த 366 பேர் 2 தடுப்பு முகாம்களிலும், கரவெட்டியில் 18 குடும்பங்களைச் சேர்ந்த 70 பேரும் மருதங்கேணியில் 82 குடும்பங்களைச் சேர்ந்த 326 பேரும் ஆக மொத்தம் 5441 பேர் சிறீலங்கா இராணுவத்தால் தடுப்பு முகாங்களில் சொந்த வீடுகளுக்குப் போக விடாது தடுத்து வைக்கப்பட்டு மிக மோசமான வாழ்வினை அனுபவித்து வருவதாக அங்கிருந்து கிடைக்கும் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இவர்களில் சிலர், மாவிட்டபுரம் வருடாந்த உற்சவத்திற்கு சிறீலங்கா இராணுவத்தின் கெடுபிடிகளுக்கு நடுவே பஸ்ஸில் பயணம் செய்தபோதே தங்கள் வீடுகள் குண்டுகளால் இடியுண்டு தகர்ந்து கிடப்பதையும் மீதமுள்ள வீடுகளிலும் செடி கொடி வளர்ந்து மூடி ஒரே பற்றைக்காடுகளாக காட்சியளிப்பதையும் பார்த்து அறிந்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. ★

# இலண்டனில், சிறீலங்காவின் புதியமுறைப் பரப்புரை ஆரம்பம்

★ சிங்களவர்களைக் கொண்டு பேரணி நடாத்தி
★ இனவெறி கக்கும் கோரிக்கைகள் முன்வைப்பு
★ தமிழீழ மக்களை விடப் பாதிப்புறப்போவது புலம்பெயர் தமிழர்களே!

இலண்டனில், 17. 05. 98 அன்று சிறீலங்கா அரசினால் தூண்டிவிடப்பட்ட சிங்களவர்கள் பேரணி ஒன்றை நடாத்தி– புலம்பெயர் தமிழர்கள் பொருளாதார அகதிகளே அல்லாது இனங்காணக் கூடிய அச்சத்தால் அரசியல் தஞ்சம் கோரியவர்களல்ல எனவும் அவர்கள் அனுப்பும் பணத்தால் போராடும் தமிழீழ விடுதலைப் புலிகளைத் தடைசெய்ய வேண்டும் எனவும் பச்சை இனவெறிக் கோரிக்கைகளை எழுப்பியுள்ளனர்.

இதுவரை, தனது அமைச்சர்களையும் பாராளுமன்ற உறுப்பினர்களையும் லக்ஷ்மன் கதிர்காமர் தலைமையில் ஊர் ஊராக உலகெல்லாம், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் தமிழ் மக்களுக்கும் எதிரான உண்மைக்கு மாறான பரப்புரை செய்து வந்த சிறீலங்கா, அவை எதுவுமே உண்மைக்கு –நீதிக்கு முன்னால் எடுபடாத நிலையில், தற்பொழுது வெளிநாடுகளில் வாழும் சிங்களவர்களைக் கொண்டு பேரணிகள் நடாத்தி தமிழீழப் புலம் பெயர் மக்களுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் எதிரான உண்மைக்கு மாறான பிரச்சாரங்களைக் கட்டவிழ்த்து விடத் தொடங்கியுள்ளது.

இந்த ஊர்வலங்களின் உடனடி இலக்கு, புலம்பெயர் தமிழர்கள். புலம்பெயர் தமிழர்களின் நற்பெயருக்கு களங்கங்களை ஏற்படுத்தி, மேலும் அவர்கள் வாழும் ஊர்களில் உள்ள சர்வதேச மக்களுக்கும் அரசாங்கங்களுக்கும் வெறுப்பை ஏற்படுத்துவது. அரசாங்கங்கள் அளித்து வரும் புகலிடங்களையும் உதவிகளையும் நிறுத்தச்செய்து– புலம்பெயர் தமிழர்களின் நாளாந்த வாழ்வைச் சீரழிய வைப்பது. அத்துடன், சர்வதேச இனவெறி இயக்கங்களின் கவனத்தை தமிழர் பால் திருப்பி புலம் பெயர் தமிழர்களுக்குச் சிக்கல்கள் தோன்றச் செய்வது. மேலும், தாயகத்தில் தங்கள் கிட்டிய குடும்ப உறுப்பினர்கள் சிறீலங்கா அரசாங்கத்தின் கொடிய யுத்தவெறிக்கு இலக்காகி தங்கள் நாளாந்த வாழ்வையே நரகலோகமாக அனுபவித்து உணவு மருந்து கூட சிறீலங்காவால் தடுக்கப்பட்டு, சிறீலங்காவின் படை எடுப்புக்களால் படுக்க இடம் கூட இன்றி தவிக்கும் அவல நிலையை மாற்ற அம்மக்களுக்கு புலம்பெயர் தமிழ் மக்கள் செய்து வரும் ஆபத்து உதவிகளையும் போராட்டத்திற்கான நிதியெனக் கொச்சைப்படுத்தி துன்புறும் தமிழர்களுக்கு உடனுதவிகள் கிட்டாமல் தடுப்பது – ஆகிய பல தீய நோக்குளுடன் இச்சிங்களப் பேரணிகள் செயற்படத் தொடங்கியுள்ளன.

உண்மையில் பிரதிநிதித்துவ உரிமை மறுக்கப்பட்ட மக்களே உலகத் தலைநகர்களில் பேரணிகள் நடாத்தி தங்கள் இன்னல்களைத் தீர்க்க உதவும்படி உலகின் உதவியைக் கோருவது மரபு. ஆனால் பிரதிநிதித்துவ உரிமையுள்ள சிங்கள மக்களில் சிலர் பிரச்சினைகள் இருப்பின் தமது அரசாங்கப் பிரதிநிதிகளுடாக உலகுக்கு கொண்டு செல்லாது இத்தகைய பேரணிகள் நடாத்தி ஏன் தமக்குப் போக்குவரத்து கஷ்டங்களை உண்டாக்குகிறார்கள் என பல பிரித்தானிய மக்கள் முணுமுணுத்துள்ளதாகத் தெரிகிறது. அவர்களுக்கு எப்படித் தெரியும் சிறீலங்காவின் அரச பயங்கரவாதத்தை மறைக்க இப்படி கூலிக்கு ஒரு கூட்டம் மாரடித்த வரலாறு. எது எப்படியிருப்பினும் புலம்பெயர் தமிழர்களுக்கு இது ஒரு சிவப்பு விளக்கு. உடனடியாகப் புலம்பெயர் தமிழர்கள் தங்கள் அலட்சியங்களை விடுத்து ஓரணியாய் – தமிழீழ மக்கள் பெரும் அணியாய் திரண்டெழுந்து தமிழீழ மக்கள் உண்மை நிலைகளை உலகுக்கு எடுத்துக் கூறத் தயங்கினால் அதனால் பாதிப்புக்களை அடைய வேண்டிய பல சிக்கல்கள் அவர்களுக்குத் தோன்றலாம் என்னும் எச்சரிக்கையையே சிங்களப் பேரணி அதுவும் 7 மகாநாட்டிற்கு என பெர்மிங்காமில் முதலாம் உலகின் முக்கிய தலைவர்கள் திரண்டு இருந்த வேளையில் இலண்டனில் நடாத்தப்பட்டமை கூறாமல் கூறுகிறது. ★

**தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் எட்டாவது அனைத்துலக உதைபந்தாட்டப் போட்டி அன்று நடைபெற்ற 16 வயதிற்குட்பட்டோருக்கான உதைபந்தாட்டப் போட்டியில் புளூஸ் உதைபந்தாட்டக் கழகம் வெற்றிக்கிண்ணத்தை பெற்றுக்கொண்டது.**

*(சென்ற 'களத்தில்' செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட 16 வயதிற்குட்பட்டோருக்கான உதைபந்தாட்ட முடிவின் தரவுத் திருத்தம் இங்கு தரப்பபட்டுள்ளது)*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சகாப்தம் படைத்த ஸ்ராலின்கிராட் 6

உலகெங்குமிருந்து லட்சோபலட்சம் மக்கள் இங்கு வருகின்றனர்.

முக்கியமானதைப்பற்றி, நாட்டுப்பற்று, சோஷலிசத் தாயகத்தின் மீதான, சொந்தப் பூமியின் மீதான நேசம், கம்யூனிச இலட்சியங்களின் பாலான விசுவாசம், போர் வீரனை கட்சிக் கோட்பாடுகளின் அடிப்படையில் வளர்ப்பது ஆகியவற்றைப் பற்றி நான் இதுவரை கூறினேன். ஆனால், எதிரியை அடித்துத் துரத்தும் கலையை சண்டைகளின் போக்கில் நாங்கள் கற்காமலிருந்தால், எதிரியை விடக் குறைவான சக்தியை விரயப்படுத்தி அவர்களின் தாக்குதலைத் தாங்கி, அவர்களை நிறுத்தி, பின் மேற்கே துரத்தியடிக்க உதவிய திறமையைப் பெறாமலிருந்தால் மேற்கூறியவையெல்லாம் தம் பங்கை ஆற்றியிரா.

மிகக் கடினமான சூழ்நிலைகளையும் பொருட்படுத்தாமல் 62வது படையின் துருப்புகள் தேவையான போதெல்லாம் இடம் மாறின. இரவு நேரங்களில் பலவீனமான இடங்களை வலுப்படுத்தின. நேற்று இரவு இங்கே ஒன்றுமே அல்லது கிட்டத்தட்ட ஒன்றுமே இருக்கவில்லை. இன்று காலையோ இங்கே நிலையான, உறுதியான தற்காப்பு, ஏன் எதிர்த் தாக்குதல் கூட தயாராகியுள்ளதே என்று பாசிஸ்டுகள் ஒன்றும் புரியாமல் தவித்தனர்.

நகர சண்டையில் பாசிச ஜெனரல்கள், இராணுவ அதிகாரிகளின் செயல்தந்திரம் தோல்வியடைந்தது. தெருச் சண்டைகளில் அவர்களுடைய துருப்புகள் தம் வல்லமையை இழந்தன.



ஆயுத பலத்தில் குறிப்பாக, விமானங்களின் எண்ணிக்கையில் விஞ்சி நின்றதும் எதிரிக்கு நகர சண்டையில் பயன்தரவில்லை. விமானப்படை எல்லாவற்றையும் ஒழித்துக்கட்டி தரைப் படைகளுக்குப் பாதை சமைக்கும் என்ற கணிப்பு எடுபடவில்லை. எங்களுடைய தாக்குதல் குழுக்கள் எறிகுண்டை வீசும் தூரத்திற்கு எதிரியை நெருங்கியதால், பாசிச விமானிகள் குழம்பிப் போயினர்; தம் தரப்பினரைப் பாதிக்காமல் ருஷ்யர்கள் மீது மட்டும் குண்டு வீச முடியுமா என்று அவர்களால் தீர்மானிக்க முடியவில்லை. பல நேரங்களில் அவர்கள் எங்களுடைய தாக்குதல் குழுக்களைத் தாக்க முயன்ற போது, குண்டுகள் பாசிஸ்டுகளின் தலையில் விழுந்தன.

ஒரு உதாரணத்தைக் கூறுகிறேன். ஜெனரல் ஸ்மெஹத்வோரவ் டிவிஷன் இருந்த இடத்தில் எங்களுடைய காப்பகழிகள் பாசிஸ்டுகளின் காப்பகழிகளுக்கு வெகு அருகில் இருந்தன; அங்கே ஒரு இடிந்த வீடு நின்றது. அவ்வீட்டின் அருகே எறிகுண்டு சண்டை நடந்தது. உதவுவதற்காக வந்த பாசிச விமானங்கள் இரு தரப்பின் மீதும் குண்டு வீசத் துவங்கின. ஏனெனில், தம் தரப்பினர் எங்கேயுள்ளனர், ருஷ்யர்கள் எங்கே இருக்கின்றனர் என்று நிர்ணயிக்க எதிரியால் முடியவில்லை. குண்டு வீச்சிலிருந்து தப்பிக்க சோவியத் வீரர்கள், பாசிஸ்டுகள் இரு சாராருமே அவ்வீட்டின் நிலவறைக்கு ஓடினர். சுமார் 20 நிமிடங்கள் இரு தரப்பாரும் ஒருவருடன் ஒருவராகக் கலந்து, குண்டுகள், குண்டுச் சிதறல்களிலிருந்து தம்மைக் காப்பாற்றும் பொருட்டு தலைகளை மூடியபடி கிடந்தனர் குண்டு வீச்சு முடிந்ததும் யார் யாரை சிறை பிடித்தனர் என்பது தெளிவாகியது. நாங்கள் 17 பாசிஸ்டுகளை சிறை பிடித்தோம். ஒரே மாதிரியான செயல்தந்திரத்தை அல்லாமல், சண்டையின்போது உருவாக்கப்பட்ட செயல் தந்திரத்தை நாங்கள் பாசிஸ்டுகளுக்கு எதிராக வைத்து, அதை இடையறாமல் மேம்படுத்தினோம்.

வோல்கா கரையில் நான் கற்றுக் கொண்டதில் மிக முக்கிமானது என்னவெனில், ஒரே மாதிரியின் மீதான சகியாமையாகும். திட்டவட்டமான நிலவரத்தின் அடிப்படையில் நாங்கள் புதுப்புது சண்டை முறைகளைத் தேடிக் கொண்டே இருந்தோம்.

சோவியத் நாட்டின் சமாதான நகரங்களைப் போன்றே ஸ்ராலின்கிராடும் தற்காப்பிற்கோ, சுற்றி வளைக்கப்பட்ட நிலையில் நீண்ட காலப் போராட்டத்திற்கோ தயாராயில்லை. நகரத்தில் யாரும் எவ்வித தற்காப்பு அமைப்புகளை முன்கூட்டியே கட்டவில்லை. தெருச் சண்டைகள் மூண்டபோதுதான் அவற்றை ஏற்படுத்த நேரிட்டது. 62வது படை இயங்கிய சூழ்நிலைகளின் குறிப்பிடத்தக்க அம்சங்களில் இதுவும் ஒன்றாகும்.

தற்காப்பு மையங்கள்தான் – இவற்றில் ஆதாரத் தளங்கள் அடங்கியிருந்தன – படையின் தற்காப்பு நிலைகளின் அடிப்படையாக விளங்கின. நகர கட்டுமானங்கள், நன்கு உறுதியான கல், செங்கல் கட்டிடங்கள் இத்தகைய ஆதாரத் தளங்களாயிருந்தன. தற்காப்பிற்கு ஏற்றபடி மாற்றியமைக்கப்பட்ட இவை மற்ற வீடுகளுடன் மறைகுழிகள், தரையடி வழிகளால் இணைக்கப்பட்டிருந்தன. ஆதாரத் தளங்களுக்கு இடையிலிருந்த இடைவெளி பீரங்கிகளாலும் பொறியியல் தடை அமைப்புகளாலும் பாது காக்கப்பட்டன.

சாதாரணமாக, முக்கிய திசைகளிலிருந்த தனிப்பட்ட கட்டிடங்கள் அல்லது ஒருசில கட்டுமானங்களைச் சேர்த்து ஆதாரத்தளம் ஏற்படுத்தப்பட்டது. எரிந்து போன கல் கட்டுமானங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. தாக்குவதற்கு முன் எதிரி எரித்து புகையையும் நெருப்பையும் எழுப்பி பாதுகாவலர்களுக்கு இடையூறு விளைவிக்காமல் இருப்பதற்காக இப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டது. ஒவ்வொரு ஆதாரத்தளத்தின் அளவு, முக்கியத்துவத்திற்கேற்ப ஸ்குவாட், பிளாட்டூன், கம்பனி அல்லது சில நேரங்களில் பட்டாலியன் அதைப் பாதுகாத்தது. ஆதாரத் தளங்கள் வட்ட தற்காப்பிற்கு தயார்படுத்தப்பட்டன. எனவே, அவற்றால் பல நாட்களுக்கு சுயமாக சண்டையிட முடிந்தது.

பொதுவான பீரங்கிகள், தடைகள், பொதுநிர்வகிப்பு ஆகியவற்றால் ஒன்றிணைக்கப்பட்ட, வட்ட தற்காப்பிற்கு தயார்படுத்தப்பட்ட ஒரு சில ஆதாரத் தளங்கள் ஒன்று சேர்ந்து தற்காப்பு மையத்தை ஏற்படுத்தின.

வலுவான இரும்பு, மற்ற உலோக அமைப்புகள், நல்ல தரையடி வழிகள் ஆகியவற்றைக் கொண்ட தொழிற்சாலைகளின் பெரிய பிரிவுகள் நீண்ட கால, உறுதியான தற்காப்பை மேற்கொள்ள வாய்ப்பளித்தன.

தொழிற்சாலைகளின் பூமியடி அமைப்புகளாகிய கழிவு நீர்க் குழாய்கள், தகவல் தொடர்பு, தண்ணீர் குழாய்கள் போன்றவற்றை ஆரம்பத்தில் நாங்கள் குறைவாகத்தான் பயன்படுத்தினோம். ஏனெனில், அவற்றைப் பற்றி எங்களுக்கு அதிகம் தெரியாமலிருந்தது. ஆனால், சண்டைகளின் போது, தொழிற்சாலைகளின் நிர்வாகத்துடனும் வட்ட கட்சி கமிட்டிகளுடனும் நெருங்கிய தொடர்பேற்பட்டதும் இவற்றையெல்லாம் எதிரிக்கு எதிராக பயன்படுத்தலானோம்.

நகரத்தில் எதிரியின் நடமாட்டத்தைக் கடினமாக்கும் பொருட்டு தெருக்களிலும் சதுக்கங்களிலும் பல்வேறு தடைகளை எழுப்பினோம். இத்தடைகளை அணுகும் வழிகளையும், தடைகளையும், அருகிலிருந்த கட்டிடங்கள், சதுரங்க வடிவிலிருந்த விஷேட இடங்களிலிருந்து சகல வித ஆயுதங்களின் உதவியால் சுட்டுத் தள்ளினோம்.

ஆதாரத் தளம் அல்லது தற்காப்பு மையத்தில் இருந்த துருப்புகள் முப்படைகளையும் சேர்ந்தவர்களாயிருந்தனர். நெருப்புத் துப்பாக்கிகள்,



மார்ஷல் சுய்க்கோவ்

இயந்திப் பீரங்கிகள், டாங்கி எதிர்ப்புத் துப்பாக்கிகள், மார்டர் பீரங்கிகள், டாங்கிகள் ஆகியவை இவர்களுக்கு வழங்கப்பட்டன. மூடிய நிலைகளிலிருந்த பீரங்கிகள் இவர்களுக்கு ஆதரவாய் இயங்கின. இதுதவிர எரி பொருள் கலவை அடங்கிய பாட்டில்களையும் டாங்கி எதிர்ப்பு சண்டைகளின்

தொடரும்.....

## இராணுவத்தின் கைமீறிச் செல்லும்....

இன்று உள்ளது.

அதாவது, விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் சிறீலங்கா இராணுவத்தினால் எப்பொழுதுமே வெற்றிகொள்ள முடியாது என்பதை ஜெயசிக்குறு நடவடிக்கைக்கு எதிரான பதில் நடவடிக்கை மூலம் விடுதலைப் புலிகள் உணர்த்தி விட்டனர் என்பதை இராணுவ ஆய்வாளர்கள் வெளிப்படையாக ஒப்புக் கொண்டுள்ளனர். இனி ஜெயசிக்குறு நடவடிக்கை கிளிநொச்சியைச் சென்றடைவதன் மூலம் அரசாங்கம் முடித்துக் கொண்டாலும் கூட இந்நிலை மாற்றம் அடையப் போவதில்லை என அவர்கள் தெரிவிக்கின்றனர். ஒரு சமர்களிலுமே வெற்றி பெறாத விடுதலை இயக்கங்கள் கூட தமது விடுதலைப் போராட்டங்களை வெற்றி கொண்ட வரலாறுகள் உலகில் உண்டு. இந்நிலையில் பல சமர்களை வெற்றி கொண்டுள்ள, வெற்றி கொண்டுவரும் விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் தோற்கடிப்பதோ அன்றி இல்லாது ஒழித்து விடுவதோ சாத்திய மானதல்ல.

விடுதலைப் புலிகள் இன்று சிறீலங்கா அரசிற்கு எதிராக மேற்கொண்டுவரும் போரும் – போர் முறையும் ஓர் முழு அளவினதான போர் வடிவமே ஆகும். இந்த நிலையில், புலிகளின் போர் வெற்றிகளை மேலும் உறுதிப்படுத்தும் சக்தியாக அவர்களின் ஆளணி அதிகரிப்பானது இருக்க முடியும் என ஆய்வாளர்கள் மதிப்பீடு செய்கின்றனர். அதாவது, புலிகளின் ஆளணி பெரும் மரபுவழி இராணுவம் என்ற வடிவத்தை அதற்கு விரைவிலேயே கொடுத்துவிடும் என அவர்கள் கருதுகின்றனர்.

இந்த ரீதியில், விடுதலைப் புலிகளின் ஆளணிப் பெருக்கம் காணும்பட்சத்தில் விடுதலைப் புலிகளின் போரிடும் ஆற்றல் மட்டுமல்ல, புலிகள் இதுவரை கைக்கொண்ட போர் முறையில் இருந்து மாற்றங்கள் ஏற்படும் வாய்ப்பு உண்டு எனவும் அவர்கள் கருதுகின்றனர். அதாவது, புலிகள் மேற்கொள்ளும் ஊடறுப்புத் தாக்குதல், அழித்தொழிப்பு நவடிக்கைகள் யாவும் நில மீட்பு நடவடிக்கையாக இருக்கும் வாய்ப்புக்கள் அதிகமாகும் எனவும், இது விடுதலைப் புலிகள் தமது இலட்சியத்தை நோக்கி விரைந்து முன்னேற வாய்ப்பளிப்பதாக மாறும் எனவும் கருதுகின்றனர்.

இந்த வகையில் இன்று விடுதலைப் புலிகளின் ஆளணி பெருக்கமானது – சிறீலங்கா இராணுவத்துடனான போர் முறையில் பெரும் திருப்புமுனைகளையும் – தமிழீழ விடுதலைப் போரின் விரைந்த முன்னேற்றத்திற்கும் வழிவகுப்பதாக அமையும் ஒன்றாக இருக்கக் கூடியதாகும். அதாவது, விடுதலைப் புலிகளின் ஆளணிப் பெருக்கம் எவ்வளவு விரைவுபடுகின்றதோ அந்தளவிற்கு தமிழீழ விடுதலைப் போரில் பல படிகள் விரைவிலேயே தாண்டப்படும் வாய்ப்புண்டு.

www.tamilarangam.net



# எங்கள் தாயகத்தின் நெற்றிப் பொட்டில் கைவைத்த வரலாறு தாயினும் இனிய தேசம் உருக்குலைக்கப்பட்ட சரித்திரம்

- வ.யோ.பற்றிமாகரன் Special Diploma (Oxford),BA,BSc.-

## இது கட்டுரையல்ல படித்தெறிய -உண்மைகளின் விண்டுரை விரைந்து செயற்பட அழைக்கும் உங்கள் தாயின் குரலொலி

முன்னுரை

*" அழகுக்கு இலக்கணமானவள் எம் அன்னை*
*மட்டுநகர் வாவி அவளின் மேனியின் அழகுத்தேமல்*
*கோணமாமலை முகடுகள் அவளின் கேரல மார்புகள்*
*வன்னிக்காடுகள் பரந்த கூந்தல் விரிப்பு*
*மன்னார் வயல்கள் முதுகுப் பரப்பு*
*யாழ்ப்பாணம் அவளின் நெற்றிப் பொட்டு*
*பேரெழிலோடிலங்கினாள் எம் பொன் மகள்"*

எனக் கவி வண்டுகள் ரீங்காரமிட நாம் போற்றித் தொழுத எங்கள் புனித பு+மிகள் எங்கும் சிங்களவன் சிறுநீர் கழிக்க பெரும்பாடு படும் இந்நேரத்தில் வீரமாதேவியுடன் விளையாட நினைத்து தேரெடுத்து வந்த சிங்களச் சிறுவர்கள் சிண்டுடைக்க கைவளையல்களைக் கழற்றி வைத்து விட்டு பண்டாரவன்னியனின் வாளெடுத்து நிற்கின்றாள் எம் வீரத்தாய். பணியேமெனப் பகைக்குணர்த்தும் இத் தருணத்தில் தம் பங்காற்ற தாயகத்தில் மட்டுமல்ல உலகெங்கும் வாழ் தமிழர்கள் உறுதிகொண்டு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இப்புலம் பெயர் தமிழர் பல பணிகளில் ஒன்றாக சிங்கள இராணுவம் எங்கள் தாயகத்தின் நெற்றிப் பொட்டில் யாழ்ப்பாணத் திருநகரில் கைவைத்த 30.10.95 முதல் 30.01.96 வரையான 'ன்று மாதகால தேச நிகழ்வுகளை - யாழ்ப்பாண போர்க்கால நாட்குறிப்புக்களை- இருள் படிந்த நாட்கள் என்ற தலைப்பில் தமிழிலும் ஆங்கிலத்திலும் நூல் வடிவில் வெளியிட்டுள்ளார் அக்கால கட்டத்தில் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து முதியவர்களுக்குப் பணிபுரிந்த அருட்திரு. லூகலாநிதி□ எட்வின் சவுந்தரநாயகம்.

87,000 எறிகணைகளுக்கு எங்கள் யாழ்ப்பாண அன்னை முகம் கொடுத்து பலஅழிவுகளைச் சந்தித்த துயர சரித்திரம். படித்தேன். துடித்தேன். துயரத்தில் அழுதேன். இவ் உணர்வுகளினூடு அந்த வரலாறு விடுக்கும் செய்தியை - அழைப்பை உணர்ந்தேன். அதனை உங்களுடன் பகிர வேண்டும் என்னும் துடிப்பு. இந்த எழுத்துப் பரவல். இது வெறும் எழுத்தல்ல. சத்தியங்களின் தரிசனம். ஆம்! அந்த "இருள் படிந்த நாட்கள்", உலகுக்கு மறைக்கப்பட்டவற்றை உலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டும் எழுத்துத் தொகுதி. உலகுக்கு கேட்காது அமுக்கப்பட்ட மக்களின் குரல் எழுத்தொலியாக உலகெங்கும் வெடித்தெழுந்துள்ளது. சமாதான யுத்தத்தின் உண்மைச் சரித்திரத்தை ஆவண வடிவில் பார்ப்பவர்கள் சந்திரிகாவின் சதியின் நுட்பத்தை விண்டுணரலாம். வேதனையான ஒரு காலகட்டத்தை தரிசிக்கின்றோம். அதனை மக்களின் விடுதலைக்கான சக்தியாக மாற்றும் சாதனையினைச் செய்ய வேண்டிய பொறுப்பை இப் போர்க்கால நாட்குறிப்பு தளது அழைப்பாக விட்டுச் செல்கிறது. ஆதலால்தான், இது அழுவதற்காக எழுதப்பட்ட கட்டுரையல்ல. எழுவதற்கான உடன் பணி செய்வதற்கான நினைவுகளின் மீட்டல். இந்த உண்மை நிகழ்வுகளின் சிற்சில பகுதிகள் எவ்வித மிகைப்படுத்தலோ குறைப்படுத்தலோ இன்றி இங்கே தொகுக்கப்படுகிறது. தொடட்டும் உள்ளங்களை. உலுப்பட்டும் உலகின் மனச்சாட்சியை. உதவட்டும் உண்மை வெல்ல, சத்தியம் நிலைக்க, பாதுகாப்பான சமாதானம் தமிழீழ மக்களுக்கு மீள, தமிழீழத் தாயகம் விடுதலை பெற! நாட்குறிப்பில் சில குறிப்பை படியுங்கள்.

### நாட்குறிப்பில் சில இதழ்கள்

**ஐப்பசி 30, 1995.**

***குடை நீர் குடி தண்ணீராக- 'ன்று குழந்தைகள் உயிர் வாடி வீழ-***

### முதியோர் சிலர் நடை பிணமாக.......

ஐப்பசி மாத இறுதிநாள் - ஓவென்ற இரைச்சலோடு இடைவிடாது இரவு முழுவதும் பெய்கின்ற மழை நிம்மதியாக துயில் கொள்ள விடவில்லை. அது மட்டுமா? மழை வெள்ளத்தில் கழுவப்படும் மக்கள் கூட்டத்தின் நினைவும் அவர்களோடு சேர்ந்து நிற்கும் எங்கள் கல்லூரி மாணவர்களின் சிந்தனையும் நினைவலைகளாக ஒன்றோடு ஒன்று மோதி துயில் கலைந்த இரவை மேலும் நிம்மதி அற்றதாக்குகின்றது.

இரவு முழுவதும் துன்பப்பட்ட மாணவர்கள் சிலர் மறுநாள் காலையில் மீண்டும் கல்லூரி வாசலை வந்தடைகிறார்கள். கடந்த சோகமான இரவில் 'ன்று பச்சிளங் குழந்தைகள் மக்கள் நெரிசலில் அகப்பட்டு உயிரிழந்த சோகக் கதையைச் சொல்லிக் கண்ணீர் விட்டார்கள். அக்கதையைக் கேட்டோரின் கண்களும் கலங்கி நின்றன.

பசி பட்டினியோடு இரவோடு இரவாக ஓடிய மக்கள், குடி தண்ணீர் முதலாய் இல்லாமையால் மழைக் குப் பிடித்த குடையிலிருந்து வடிந்தோடிய நீரைப் பருகி தங்கள் தாகத்தைத் தீர்த்துக் கொண்டனர்.

மழை ஒரு பக்கம், ஆவேசத்துடன் முன்னேறும் இராணுவத்தினர் தீட்டும் இடைவிடாத வேட்டுக்களின் காதைப்பிளக்கும் சத்தம் , அவை தருவிக்கும் பயமும் அதிர்ச்சியும் இன்னொரு பக்கம்- பசி பட்டினி- நத்தை வேகத்தின் நகர்வின் சோர்வு மறுபக்கம். மக்கள் படும்பாடு. இவைகளை எடுத்துச் சொல்ல சொற்கள் எங்கே?

பாதுகாப்புத்தேடி ஓடும் மக்களோடு செல்லும் முதியவர்கள் தங்களால் தொடர்ந்து நடக்க முடியாது என்று கூறி தெருமருங்கில் பிணங்களாயினர். அப்பிணங்களை நல்மனம் படைத்த சிலர் மறுநாள் அடக்கம் செய்தனர்.

### கார்த்திகை 13 , திங்கட்கிழமை *ஏன் இந்த எறிகணைகள்*

பயங்கர யுத்த மிருகம் அண்மித்து வந்து கொண்டிருந்தது. எறிகணை கள் எங்களுக்கு மிகவும் அண்மையில் விழுந்து வெடித்தன. கரும்புகை மண்டலங்களை பல இடங்களில் காணக்கூடியதாக இருக்கிறது. புனித வூசையப்பர் வயோதிப இல்லத்தில் இன்னும் சில இறப்புக்கள். பிரேத பெட்டிகள் இல்லை. பிரேதங்களை கை வண்டியில் சவக்காலைக்கு கொண்டு செல்ல என்னால் செய்யக்கூடிய தெல்லாம் செய்தேன்..

இரவு மிக பயங்கரமாக இருந்தது. 8.45 மணியளவில் கொழும்புத்துறைப் பக்கமாக எறிகணைகள் விழத் தொடங்கின. அப்போது நான் குருத்துவக் கல்லூரி விறாந்தையில் செபமாலை சொல்லிக் கொண்டிருந்தேன். குருத்துவக் கல்லூரிக்கு அருகாமையில் எறிகணைகள் விழுந்து வெடித்தன. எட்டு எறிகணைகள் ஒன்றன் பின் ஒன்றாக வந்து விழுந்து வெடித்தன. கல்லூரியில் தஞ்சம் புகுந்திருந்த நடக்க முடியாத - ஊன முற்றவர்களை பாதுகாப்பாக இன்னும் முடிவுறாத குருத்துவக் கல்லூரி கோவில் சீமேந்துக் கூரைக்கு கீழ் இடம் மாற்றினோம். அந்த நேரத்தில் கடவுள் தான் எமது பதுங்கு குழி. அவரே எங்கள் அரண்.

ஒவ்வொரு எறிகணையும் வெடித்த வுடன் ஒவ்வொருவருடைய பெயர் களை யும் கூப்பிட்டு உயிரோடு இருக்கிறோமா என அறிந்து கொண்டோம். எறிகணைகளும் அதன் வெடிச் சத்தங்களும் ஏற்படுத்தும் சத்தம் இரக்கமற்றதாக இருந்தது. செவிடர்கள் பேறு பெற்றவர்கள் இந்தப் போர் நேரத்தில் மகிழ்வார்கள்.

*ஏன் இந்த எறிகணைத் தாக்குதல்கள்? போராளிகளின் நடமாட்டமோ அல்லது அவர்களின் முகாங்களோ எங்கள் அயலில் இருக்கவில்லை. எறிகணைகளின் நோக்கம் என்னவென்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.*

கொழும்புத்துறை சிறிய குரு மடத்தின் பிரதான கூரை, அமல உற்பவ இல்ல சுற்றுமதில், வயோதிப இல்லத்தின் பின்பகுதி, புதிய இறையியல் பகுதி, குளியல் அறைகள் எறிகணைச் சேதத்துக்கு உள்ளாகியிருந்தன. வயோதிப இல்லத்து வளவுக்குள் எறிகணைகள் வீழ்ந்து வெடித்ததால் முதியோர் இல்லம் அப்புறப்படுத்தப் பட்டது. அந்தச் சுற்றுப் புறத்தில் விடப்பட்ட ஒரே மனிதன் நான் தான். வயோதிப இல்லம் அப்புறப்படுத்தப்பட்டதால் யாழ்ப்பாணத்தில் தொடர்ந்து இருக்க வேண்டும் என்ற கடமையில் இருந்து விடுவிக்கப்பட்டேன்.

### கார்த்திகை 18, சனிக்கிழமை *700,000 பேரில் 450 பேர் மட்டும்*

ஏறத்தாழ 700,000 மக்களைத் தன்னகத்தே கொண்டிருந்த யாழ் நகரம் எல்லோரையும் இழந்து ஆக 450 பேர்களை மட்டும் வைத்துக் கொண்டிருக்கிறது. இவர்களுள் பெரும்பான்மையோர் முதியவர்கள் ஆவர்.

### கார்த்திகை 22 புதன்கிழமை *கோழிக் குஞ்சுகளின் தலை முதலாகத் துண்டிப்பு*

யாழ் பெருந் தெருவில் போராளி ஒருவர் தன்னுடைய தொடர்பு சாதனங்களைப் பழுது பார்த்துக் கொண்டிருக்கக் கண்டேன். தான் போர் முனையில் இருந்து வருவதாகவும் எண்ணுக் கணக்கில்லாத எறிகணைகளை இராணுவம் வீசுவதால் கோழிக் குஞ்சுகளின் தலை முதலாகத் துண்டிக்கப்படுவதாகவும் செம்மணி வீதிக்கு இராணுவம் வந்து விட்டதாகவும் அவர் சொன்னார். இராணுவம் செம்மணி வீதிக்கு வந்துவிட்டபடியால் இனிமேல் கண்டி பிரதான வீதியைப் பயன்படுத்த முடியாது என்று உணர்ந்து =>

www.tamilarangam.net



# எங்கள் தாயகத்தின் நெற்றிப் பொட்டில் .....

கொண்டோம். எங்களுக்கும் எங்களை விட்டுப் பிரிந்தவர்களுக்கும் இடையில் பெரிய தடை வந்துவிட்டது. சில எறிகணைகள் யாழ் ஆயர் இல்லத்தினுள் விழுந்து ஆசனக்கோவில் உதவிப்பங்கு குருக்களின் அறைகளை முற்றாக அழித்துவிட்டது.

### கார்த்திகை 23 வியாழக்கிழமை
### குழந்தையின் தலையிலிருந்து சொட்டும் இரத்தத்துடன் ஓலமிட்ட தாய் - ஒரே குடும்பத்தில் 4 பேர் காயம் 2பேர் சாவு

இந்த மாதத்தின் மிகவும் சோகமான வியாழக்கிழமை இதுவாகும். எறிகணை வீச்சும் வெடிச் சத்தமும் இரவு பகலாக தொடர்ச்சியாக கேட்டது. இரவு 8.10 மணியளவில் ஆயரில்லத்திற்கு மேலாக சில எறிகணைகள் போய் கல்லூரியைத் தாக்கியதை உணர்ந்தோம். அகதிகள் முகாம் தாக்கப்பட்டதை அறிந்தோம்.

ஐயோ என்ற அழுகைக் குரல் கல்லூரிப் பக்கத்தில் இருந்து வந்தது. உடனே நாங்கள் அங்கே ஓடிப் போனோம்.. அழுகையும் பரிதாபக் காட்சியும் எங்களை மனம் நெகிழ வைத்தது.

தகப்பனும் மகனும் கொல்லப்பட்டு அதே குடும்பத்தில் மற்றைய நால்வர் காயமடைந்திருந்தனர். வேறு இருவரும் இரத்த ஆற்றில் கிடந்தனர்.. ஒரு தாய் தலையில் ஏற்பட்ட காயத்தினால் இரத்தம் சொட்டச் சொட்ட எனது பிள்ளையைக் காப்பாற்றுங்கள் என அக் குழந்தையைத் தூக்கிப் பிடித்தபடி ஓலமிட்ட காட்சி நெஞ்சைப் பிளந்தது. மற்றைய பெண்பிள்ளைகளும் காயங்களுடன் இரத்த வெள்ளத்தில் காணப்பட்டனர். என்ன கோரக் காட்சி இறந்த உடல்கள் சிதறிக் காணப்பட்டன. லூஇறந்தவரின் . காயப்பட்ட மகள் சிறுமி மீனாவும் கார்த்திகை 26ம் நாள் உயிர் நீத்தார்□.

### கார்த்திகை 29 புதன்கிழமை
### நிமிடத்திற்கொரு எறிகணை சிலவேளைகளில் அதையும் விடக் கூட- தூள் தூளாக்கப்பட்டேனோ என எண்ணினேன்

எறிகணைகளின் வீச்சு எண்ணிக்கை நிமிடத்திற்கு ஒன்று என்ற வீத்தில் இருந்தது. சில வேளைகளில் கூடவாகவும் இருந்தது. பல எறிகண்ணைகள் பத்திரிசியார் கல்லூரிக்கு அருகில் விழுந்து வெடித்தன. ஏற்கனவே எறிகணையால் பாதிக்கப்பட்டிருந்த அங்கிருந்த அகதிகள் பயத்துடன் காணப் பட்டனர். யார் அடுத்து உயிரிழப்பார்கள் என்பது அவர்களது பயமாக இருந்தது.

நான் தங்கியிருந்த ஆயரில்லத்திற்கு மேலால் பல எறிகணைகள் கூவிக்கொண்டு பறந்தன. ஆயர் இல்லச் சிற்றாலாயத்தையும் பக்கத்து அறைகளையும் எறிகணைகள் மோசமாகப் பாதித்தன. கதவுகள் யன்னல்களை எறிகணைகள் துளைத்தன. கண்ணாடித் துண்டுகள் எல்லா இடமும் சிதறியது.

எறிகணை வீச்சின் அகோரம் தாங்க முடியாத இந்த வேளைகளில் நான் தூள் தூள் ஆக்கப்பட்டேனோ என்று கூட எண்ணினேன். சில நிமிடத்தின் பின் நான் நின்ற இடத்திற்கு பக்கத்தில் எறிகணைகள் விழுந்து வெடித்தன.. ஒன்றுமே என்னைத் தாக்கவில்லை. இறைவா உமக்கு நன்றி. இந்த அனுபவத்தின் பின் ஆயரில்லத்திற்கு மேலாக வந்த ஒவ்வொரு எறிகணையும் எனக்கூடாகப் போவது போன்ற உணர்வு என்னை ஆட்கொண்டது. பய உணர்வும் அதிகமாயிற்று. தொடர்ந்து அடிக்கடி எறிகணைகள் விழுந்து வெடித்ததினால் அவ்வுணர்வில் இருந்து விடுதலை பெறுவது கடினமாயிருந்தது.

### மார்கழி 2 , சனிக்கிழமை
### இது எப்பொழுதும் சிங்களவர் நாடு - சமாதானத்திற்கான சந்திரிகாவின் யுத்தத்தின் தீர்ப்பு

புனித ஆரோக்கியநாதர் ஆலய வளவுக்குள் படுத்தபடி முன்னேறிய இராணுவம் அகதிகளின் மோட்சமான பத்திரிசியார் கல்லூரியின் முகப்பை தகர்த்துவிட அதன் கட்டிடம் நோக்கி நிலையெடுத்தது. அவர்கள் தாக்கு தலைத் தொடங்க ஆயத்தம் செய்து கொண்டனர். முதல் வெடி ஒன்றையும் தீர்த்து விட்டார்கள்.. இந்த வெடியைக் கேட்ட அகதிகள் அங்கும் இங்குமாக ஓடத் தொடங்கினர். இதை அவதானித்த இராணுவத்திற்கு கல்லூரியில் அகதிகள் இருக்கக் கூடும் என்ற எண்ணம் உதித்தது போலும். வெடிச்சத்தம் ஓய்ந்து போயிற்று. 11.30 மணியளவில் முதல் இராணுவக் குழு ஆயர் இல்லத்திற்கு வந்தது. பிளாக் என்று அழைக் கப்படும் ஒரு தனவானும் அவனது மனைவியும் சிறிகாந்தா என்ற ஒரு இளைஞனும் இராணுவத்தை அழைத்து வந்தனர்.

பல்வேறு தலைப்புக்களுடன் வெற்றி அறிவிப்புக்கள் வெவ்வேறு தெருக் களில் காணப்பட்டன.

**Daring Determined and Done**
**This is always a Sinhalies Country** லூஇதே எழுத்துப் பிழைகளுடன் காணப்பட்டன.□

இராணுவ வருகையோடு வரலாற்றின் புதிய பக்கம் ஆரம்பமானது. வீதித் தடைகள், பல்வேறு சந்திகளில் இராணுவக்காவல் மையங்கள் என்று புதிய காலக்கட்டம் தொடங்கியது. புதிய அடையாள அட்டை, அடிக்கடி சோதனை, தடுப்பு, கேள்விகள் கேட்டல், தொடர்ந்தது. சுருக்கமாகச் சொன்னால் சிறிலங்காப் பாதுகாப்புப் படைகளில் தங்கி வாழும் நிர்ப்பந்தம் உருவானது.,

### மார்கழி 4 திங்கட்கிழமை
### இராணுவக் கொள்ளைகளுக்குச் சாட்சியம்- இந்த அழிவுகளை வேண்டுமென்றே செய்தோம் என்ற இராணுவ அதிகாரி

கொழும்புத்துறை பக்கமுள்ள எல்லா வீடுகளும் முற்றாக அழிக்கப் பட்டிருந்தன. கட்டிடங்கள் எல்லாம் எப்படித் தூள் துளாக்கப்பட்டிருந்தது என்றால் அந்த அழிவுக்குள் காணப்பட்ட மிக நீண்ட துண்டு 18 அங்குலம் தான்.

விடுதலைப் புலி ஆட்கள் என இளம் சிப்பாய்கள் கேலியாக எங்களைப் பார்த்து கூறினர். நொந்த இதயத் தோடு இவைகளைப் பரவாய்ப் படுத்தாமல் ஆயர் இல்லம் திரும்பினோம்.

பல உழவு இயந்திரங்கள் வீதி வீதியாக ஓடி வீட்டுச் சாமான்களை இரவு பகலாக ஏற்றின. அச்சகப் பக்கமாக வீடுகளிலிருந்து ஏற்றப்பட்ட பிரயாணப் பெட்டிகளுடன் உழவு யந்திரங்கள் போவதைக் கண்டோம். எனது அறைக்குப் போனேன் மக்கள் பாதுகாத்து தரும்படி தந்த பொருட்கள் வைக்கப்பட்டிருந்த நாலு அடி நீளம் இரண்டரை அடி அகலம் ’ன்றடி அகலமான பெட்டி உட்பட பல பொருட்கள் களவாடப் பட்டிருந்தன. அப் பெரிய பெட்டியை அதற்குள் இருந்த பொருட்களுடன் ஒரு தனி நபரினால் தூக்கிச் செல்லவே முடியாது. பாதுகாத்து தரும்படி என்னிடம் ஒப்படைத் தவர்களுக்கு நான் என்ன பதில் கூறப் போகிறேன் என எண்ணி மனம் நொந்தழுதேன். இராணுவ அதிகாரி யிடத்தில் இது குறித்து கூறிய பொழுது தேட இயலாது என அவர் கூறிய பதில் கவலையை அதிகரிக்கச் செய்தது.

பத்திரிசியார் வீதியு+டாக கேணல் ராஜசிங்காவுடன் செல்லும் பொழுது பெரிய கோவில் மணிக் கோபுர அழிவைக் காண்பித்த பொழுது இந்த அழிவுகளை எல்லாம் வேண்டு மென்றே செய்தோம் என அவர் நகைப்புடன் கூறினார்.

பின்னர் யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு குண்டூசி கூட கொண்டு போகப்படாது என அவர் கூறிய பொழுது மன்னாரில் இராணுவம் கைப்பற்றிய பொழுது வங்காலையில் வீட்டு கதவுகள் யன்னல்களில் பெட்டி அடித்து கொள்ளையடித்த பொருட்களை தெற்குக்கு அனுப்பியது எங்களு க்குத் தெரிந்த உண்மை என்று அவருக்குச் சொன்னேன். அது மன்னாரில் எனக் கூறி மழுப்ப முயன்றார்.

### மார்கழி 5 செவ்வாய்க்கிழமை
### ரத்வத்தை சிங்கக் கொடி யேற்ற கோழிக் கள்வராக அவர் இராணுவம் சாதனை

மதியமளவில் பாதுகாப்பு அமைச்சர் புலிக் கொடிக்கு பதிலாக சிங்கக் கொடி ஏற்ற வந்துள்ள செய்தியை அறிந்தோம்.

அதிபரின் அறையிலுள்ள பு+ந் தோட்டத்தில் ’ன்று பேர் ஒளிவதைக் க்ண்டேன். இரண்டு சாக்கு நிறைய களவாடப்பட்ட கோழிகளும் வாத்துக்களும் இருந்தன . நாங்கள் சாக்குகளின் வாயை அவிழ்த்து பறவைகளை விடுவித்தோம். அருள் ஆச்சிரமம் இராணுவத்தின் வேட்டைத் தளமாகியது. இங்கிருந்த பன்றிக ளையும் மயில்களையும் கூட வேட்டை யாடிச் சென்றனர்.

பத்திரிசியார் கல்லூரிக்கு இரா ணுவம் அழைத்ததாக போன பொழுது முன்னறிவித்தல் இன்றி அங்கே பாதுகாப்பமைச்சர் வந்திருப்பதைக் கண்டேன். மிகவும் மோசமான போரினால் கிடைத்த வெற்றியில் அவர்களுக்கு நம்பிக்கை இல்லாமல் ஒளித்து விளையாடுகிறார் போலும்.

### மார்கழி 7 செவ்வாய்க்கிழமை
### கோழி களவெடுத்த சிப்பாய்களின் சண்டித்தனம்

சிங்களச் சிப்பாய் ஒருவன் குருமடத்திற்குள் நுழைவதைக் கண்டு வயதான ஆயர் ஓய்வெடுக்கின்றார் என திருப்பி அனுப்பினேன். சிறிது நேரத்தில் அவன் திரும்பி வந்து கெட்ட வார்த்தைகளால் ஏசினான். இப்பொழுது எங்கள் காலம். உங்கள் காலம் மலையேறிவிட்டது. நான் சுடுவேன் எனத் தன் துப்பாக்கியைக் காட்டினான். இங்கே குறிப்பிட முடியாத வார்த்தைகளைப் பயன் படுத்தி எங்களைத் திட்டினான்.

வெடிகளைப் பலமிழக்க வைக்க வீடுகளைத் தகர்த்தெறிவதே ஒரே வழி என தமிழ் மக்களின் வீடுகளை சிங்கள இராணுவம் தகர்த்தெறிந்த சத்தத்தால் செவிப் பறைகள் செவிடாகின.

### மார்கழி 20 புதன் கிழமை
### மக்களின் மன உறுதி

அச்சுவேலி வூசையப்பர் மடத்தில் தங்கியிருந்த குடும்பங்களில் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு மரண அத்தாட்சிப் பத்திரம் பெறுவதற்கு தேவையான ஆவ ணங்களை வழங்கப்போன பொழுது இங்கு தங்கியிருந்த ஒருவர் தரப்படுகின்ற நிவாரணம் காணாது தனது கால்களை கடற் தண்ணீரில் ஈரமாக்கி மீன் பிடிக்க அனுமதித்தால்தான் பணம் கிடைக்கும் எனக் கூறினார். அப்பொழுது அங்கு வந்த பொலிஸ் அதிகாரி வணிய சேகர, அவர் என்ன சொல்கிறார் எனக் கேட்டு விட்டு உடனடியாக 10 ரூபாவை எடுத்துக் கொடுத்தார். அவர் அதை வாங்க மறுத்து விட்டார். அதனால் திகைத்த அப் பொலிஸ் அதிகாரிக்கு நான் இவர்கள் பிச்சைக்காரர்கள் அல்ல. கடின உழைப்பாளிகள். தம் வருமானத்தில் வாழத் துடிப்பவர்கள் என இடித்துக் கூறினேன்.

### பின்னுரை

இவ்வாறாக, அந்த இருள் படிந்த நாட்கள் யாழ்ப்பாண போர்க்கால நாட்குறிப்பு - எமது தேசம் சிறீலங்கா படைகளினால் சீரழிக்கப்பட்ட வரலாற்றை வெளிப்படுத்துகின்றது. ஒவ்வொரு நாட்குறிப்பும் பல உண்மைகளைக் கூறினாலும் இடப்பிரச்சினை காரணமாக மிகச் சிலவற்றையே இங்கு தொகுத்துள்ளேன். சிறிலங்காப் படைகளின் கொடுமைகளிலும் ஆக்கிரமிப்பிலும் இருந்து நமது உடன் பிறப்புக்களும் நமது தேசமும் விடுதலை பெற ஒரே வழி நமது தேசிய விடுதலை இயக்கமாம் தமிழீழ விடுதலைப் புலிகளின் வலிமையை கூட்டுவது ஒன்றேயாகும். இதற்காக புலம்பெயர் தமிழராகிய நாம் நம் உழைப்பை உதவிகளை இன்றே தாராளமாக வழங்கி நம் இன்னுயிர் தமிழீழ அன்னை விலங்கொடிக்கும் புனித பணியில் பங்கேற்போமாக.

லூஇங்கு உப தலைப்புக்கள் இக் கட்டுரை ஆசிரியரால் இடப்பட்டவை. சரிவான எழுத்தில் உள்ள பகுதிகள் யாவும் போர்க்கால நாட்குறிப்பில் இருந்து அப்படியே எடுக்கப்பட்டவை.

★


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழர் துடுப்பெடுத்தாட்ட விழா - 1998

விளையாட்டுக்கள் மக்களை ஒன்றுபடுத்தி வழிப்படுத்துவதற்கு பெரிதும் உதவும் என்பதை நாம் எவரும் மறக்கக் கூடாது. இந்தவகையில், பிரித்தானியா வாழ் தமிழ் மக்களை ஒன்றுபடுத்தி, தாயகத்தைப் பிரிந்து புலம்பெயர்ந்து வாழும் எமது இளம் சந்ததி தனது ஆற்றலை மேன்மேலும் பெருக்கிடவும் ஓர் அரிய வாய்ப்பாக தமிழர் துடுப்பெடுத்தாட்ட விழா இன்று திகழ்கிறது. மூன்றாவது ஆண்டாக நடைபெற்ற இவ் விழாவில் துடுப்பாட்டம், வலைப்பந்தாட்ட விளையாட்டுக்கள் இடம்பெற்றன.



இருபத்தியேழு தமிழீழக் கல்லூரிகளின் பழைய மாணவர் அணிகளின் பங்கேற்புடன் இவ் விழா மிகவும் சிறப்பாக நடந்தேறியது.

காலை ஒன்பது மணியளவில் முதலாவது சுற்றுப்போட்டிகள் ஆரம்பமாகின. விழா தொடக்க நேரத்தில் மக்களின் வரவு குறைவாகத் தான் காணப்பட்டது. ஐந்து மைதானத்தில் சுற்றுப் போட்டிகள் நடைபெற்றன. மதியம் பன்னிரண்டு மணியின் பின்னர் மக்களின் வரவு தொடர்ச்சியாக இருந்தது.

முதல் சுற்றுப்போட்டிகள் முடிவுற்ற பின்னர், கல்லூரிகளின் கொடியேற்றும் வைபவம் இடம்பெற்றது. இதற்கு 'சதக்' (Southwark) நகரசபையின் பிதா பில் ஸ்கெலி (Bill Skelly) சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பங்குபற்றிய விளையாட்டு வீரர்களுக்கு



பதக்கம் வழங்கிக் கௌரவித்தார். தொடர்ந்து அடுத்த கட்ட சுற்றுப் போட்டிகள் நடைபெற்றன. அத்துடன் வலைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டிகளும் ஆரம்பமாகின.

மைதானத்தில் அமைந்திருந்த தமிழீழ உணவகம் மிகவும் நன்றாக செயற்பட்டது. பல வகை உணவுப் பண்டங்கள் விற்பனை செய்யப்பட்டு அனைத்து மக்களையும் கவர்ந்திழுத்திருந்தது. மைதானத்தில் மிகவும் நெரிசலாகக் காணப்பட்ட பகுதியில் இவ் தமிழீழ உணவகமும் அடங்கும்.

பிற்பகல் 2.30 மணியளவில் விழாவின் பிரதம விருந்தினராக இங்கிலாந்தின் முன்னாள் துடுப்பாட்ட வீரர் அலன் லாம்ப் அவர்கள் வருகை தந்திருந்தார். அவருடன் இங்கிலாந்தின் முன்னாள் துடுப்பாட்ட வீரர் டேவிட், கேபல், மேற்கிந்திய தீவுகள் அணியைச் சேர்ந்த ஜிம்மி அடம்ன்ஸ், பாகிஸ்தான் அணியைச் சேர்ந்த மொகமட் அக்ரம், அலி நாகே, அரில் ரகுமான், சிம்பாவே அணியைச் சேர்ந்த பிறைன் ஸ்ராங் ஆகியோர் தமிழீழ அணியுடன் கண்காட்சிப் போட்டியில் பங்கு பற்றுவதற்காக வந்திருந்தனர். பிற்பகல் 4 மணியளவில் கண்காட்சிப் போட்டி இடம்பெற்றது. தமிழீழ அணியை ரவிராஜ் அவர்கள் தலைமை தாங்க, அவருடன் மனோ, விஜய், கோகுலன், பிரதீபன், செல்வம், நவநீதராஜா ஆகியோர் பங்கெடுத்தனர். விறுவிறுப்பாக இடம்பெற்ற இப்போட்டியில் சர்வதேச அணி வெற்றி பெற்றது.

வலைப் பந்தாட்ட போட்டியில் இறுதிப் போட்டிக்கு சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, இளவாலை புனித கன்னியாஸ்திரிகள் தெரிவாகின. மிகவும் திறமையாக ஆடி சுண்டிக்குளி மகளிர் கல்லூரி வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்தது. சுண்டிக்குளி வீராங்கனை விஜிதா கிரிதரன் இறுதியாட்டத்திற்கான சிறந்த வீராங்கனையாகவும், இளவாலை ஜீனா சண்முகலிங்கம் சுற்றுப்போட்டிக்கான சிறந்த வீராங்கனையாகவும் தெரிவானார்கள்.



பிரதம அதிதியாக்க் கலந்துகொண்ட இங்கிலாந்து துடுப்பெடுத்தாட்ட அணியின் முன்னாள் அணித்தலைவரான அலன் லாம் உரையாற்றுகையில்.....

துடுப்பாட்ட இறுதிப் போட்டிக்கு யாழ். பரியோவான் கல்லூரியும், யாழ். இந்துக் கல்லூரியும் தெரிவாகின. முதலில் துடுப்பெடுத்தாடிய பரியோவான் அணி ஒரு விக்கட் இழப்பிற்கு 72 ஓட்டங்களைப் பெற்றது. தொடர்ந்து ஆடிய இந்துக் கல்லூரி அணி 3 விக்கட் இழப்பிற்கு 54 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் 98ஆம் ஆண்டிற்கான வெற்றிக் கிண்ணத்தை யாழ். பரியோவான் கல்லூரி பெற்றுக் கொண்டது. இவ் அணியைச் சேர்ந்த சொரூபன் பசுபதி இறுதியாட்டத்திற்கான சிறந்த வீரராக தெரிவானார்.

யாழ். இந்துக் கல்லூரியைச் சேர்ந்த பிரபானந்தன் சுற்றுப் போட்டியின் சிறந்த துடுப்பெடுத்தாட்ட வீரராகவும்,



பரியோவான் கல்லூரியைச் சேர்ந்த ப. செந்தூரன் சுற்றுப் போட்டியின் சிறந்த பந்து வீச்சாளராகவும், யாழ். மத்திய கல்லூரியைச் சேர்ந்த விஜயநாதன் சுற்றுப் போட்டியின் சிறந்த வீரராகவும் தெரிவானார்கள்.

தொடர்ந்து பரிசளிக்கும் வைபவம் இடம்பெற்றது. பிரதம விருந்தினர் அலன் லாம்ப் அவர்கள் வெற்றியீட்டிய அணி மற்றும் இறுதிப் போட்டிக்கு தெரிவான அணி வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும் கேடயங்கள் வழங்கிக் கௌரவித்தார். போட்டியில் நடுவர்களாகக் கலந்து கொண்டவர்களுக்கு பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து பிரதம விருந்தினர், தான் இவ் விழாவில் கலந்து கொண்டதையிட்டு பெருமகிழ்ச்சி அடைவதாகவும், விழாவின் எதிர்கால வளர்ச்சிக்கு தனது வாழ்த்துக்களையும் தெரிவித்து சில நிமிட நேரம் உரையாற்றினார்.

நல்வாய்ப்புச் சீட்டிழுப்புக்கான வெற்றி இலக்கம் கணனி மூலமாக தேர்வு நடாத்தப்பட்டு தெரிவு செய்யப்பட்டது.

இதனைத் தொடர்ந்து போட்டியின் இறுதி நிகழ்வாக வாணவேடிக்கை நடாத்தப்பட்டது, சுமார் 20 நிமிட நேரம் நடாத்தப்பட்ட இக் குதூகலமான நிகழ்வுடன் கலந்து கொண்ட மக்கள் மனநிறைவுடன் சென்றனர்.

96ஆம் ஆண்டில் தொடக்கி வைக்கப்பட்ட இவ் தமிழர் துடுப்பெடுத்தாட்ட விழா, இம் மூன்றாவது ஆண்டில் மேன்மேலும் புதுமெருகேற்றியுள்ளது. கலந்து கொள்ளும் மக்கள் தொகையும் அதிகமாகியுள்ளது. இவ் விழா அடுத்து வரும் ஆண்டுகளில் தொடர்ந்தும் பல முன்னேற்றங்களைக் கண்டு நிலையான ஓர் இடத்தை எம் மக்களிடையே பெற்றுக் கொள்ளும் என்பதை இம்முறை இடம்பெற்ற விழா கட்டியம் கூறுகிறது. ★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# பெருமை சுமக்கும் தலைமுறை எமது தலைமுறைதான்


## தமிழீழ தேசத்தின் மக்களே ! மண்ணின் தற்கால சந்ததியே!

எங்களுடைய நாட்கள் வரலாற்றில் மிக முக்கியமான ஒரு காலகட்டம். தமிழரின் சரித்திரத்திலே அதிசிறப்பு வாய்ந்த ஒரு காலப்பகுதி இது. பழம்பெரும் பாரம்பரியப் பெருமைகள் நிறைந்த எங்கள் இனம், தனக்கென ஒரு அரசை நிறுவப் போர் செய்கின்ற ஒரு பொற்காலத்தில் பிறந்ததும், வாழக் கிடைத்ததும் எமது தலைமுறை பெற்ற ஒரு பெரும் பேறு என்றுதான் சொல்ல வேண்டும்.

இந்த நேரத்தில் – இனத்துக்காகவும், நாட்டுக்காகவும் எங்களால் ஆற்றக்கூடிய ஆகக்கூடிய தேசப்பணியை வழங்குமாறு வரலாறு எங்களை அழைக்கின்றது.

எங்களைப் பெற்றெடுத்த அன்னை நிலம், ஒரு தமிழனாக அல்லது தமிழச்சியாகப் பிறந்ததற்கான கடமையைச் செய்யுமாறு எங்கள் ஒவ்வொருவரது மனச்சாட்சியை நோக்கியும் அறைகூவல் விடுக்கின்றது.

எமது இனம், எமது மொழி, எமது பண்பாடு, எமது கலை, எமது பாரம்பரியம், எமது விழுமியங்கள், எமது வீரம் இவை எல்லாவற்றினதும் ஒட்டுமொத்தமான பாதுகாவலர்களாக அழிவின் விளிம்பிலிருந்து இவை



அனைத்தையும் மீட்டெடுக்கும் இரட்சகர்களாக சரித்திரம் எமது சந்ததியைத் தான் தேர்ந்தெடுத்திருக்கின்றது.

எமது மக்களின் வாழ்வியல் எதிர்பார்ப்புக்கு மத்தியில் அவர்களின் உறுதியான நம்பிக்கை தான் தேசத்தின் போரியல் பலத்தை உறுதிப்படுத்தும். எமது இனத்தின் அரசியல் தலைவிதியை நிர்ணயிக்கும் கிடைத்தற்கரிய ஒரு பெரும் பாக்கியம் எமது தலைமுறைக்குத்தான் கிடைத்துள்ளது. இது ஒரு சரித்திரப் பெருமை.

தமிழினத்திற்கென்றொரு தனி இராட்சியத்தை நிர்மாணிக்கும் வரப்பிரசாதத்தை – வரலாற்றுப்பணியை – எமது சந்ததிதான் பெற்றுள்ளது. இது ஒரு சாதாரண விடயமல்ல. இன்றைய காலம் எங்களுடையது. இந்தப் புதுயுகத்தின் நாயகர்கள் நாங்களேதான்.

நாங்களே எம் தேசத்தின் பலம். நாங்களே எம் தேசத்தின் மீட்சி. நாங்களே எம்மக்களின் சுபீட்சம். வரலாறு எமது தலைமுறைக்குக் கொடுத்துள்ள கொடை இது:

> "இப்போது நாங்கள் விழிப்புடன் செயற்படத் தவறினால், இத்தனை ஆண்டு காலமாக நாம் செய்த தியாகங்கள், நாம் புரிந்த சாதனைகள், நாம் அடைந்த வெற்றிகள், நாம் அனுபவித்த துன்ப – துயரங்கள், நாம் கொடுத்த உயிர் விலைகள், பொருள் இழப்புகள் எல்லாமே அர்த்தமற்றவைகளாகிப் போவதுடன், நாம் மீண்டும் அடிமை வாழ்வுக்கு தள்ளப்பட நேரும்."
>
> - தேசியத் தலைவர்.

எமக்கு முன்னால் வாழ்ந்துவிட்டுப்போன அந்தச் சந்ததிக்குக் கிடைக்காத – எமக்குப் பின்னால் வந்துதித்து வாழப்போகும் சந்ததிக்கும் கிடையாத ஒரு பெறும் பேறு எமது சந்ததிக்குக் கிடைத்துள்ளது என்றுதான் சொல்ல வேண்டும்.

விடுதலைக்காக உழைத்தல் என்பது ஒரு தேசியக் கடமை. அதில் ஒவ்வொருவருக்குமே பங்குண்டு. அது ஒட்டுமொத்தமாக எங்கள் இனத்திற்கு உள்ள ஒரு கூட்டுப்பொறுப்பு. தமிழர்களாகப் பிறந்த ஒவ்வொருவரின் மீதும் வரலாற்றின் நிர்ப்பந்தமாக இது பதிந்துள்ளது. இந்தத் தேசியக் கடமையை எம்மில் எவருமே தட்டிக்கழித்து விடமுடியாது. தலையாய பணியாக ஏற்று, அதனை ஆற்றி முடிக்க வேண்டிய கடப்பாடு எங்கள் ஒவ்வொருவரையுமே தான் சாரும்.

தேச பக்தியோடும், இனப்பற்றோடும் சுதந்திர வேட்கையோடும் அனைவரையும் தமிழீழ விடுதலைப் போரின் முக்கிய காலகட்டமான இந்நேரத்தில், உங்கள் அனைவரது உதவியினையும் தமிழீழத் தேசம் எதிர்பார்த்து நிற்கின்றது.

தமிழினத்தின் தேசியப் படையாய் வீரமிகு தியாகங்களைப் படைத்து, முழுத் தமிழினத்தின் சார்பிலும் இந்தச் சுதந்திரப்போரை தலைமை ஏற்று வழி நடத்தும் நமது படை, உங்கள் அனைவரினதும் ஆத்மார்த்தமான உதவியை வேண்டி நிற்கிறது. 'தமிழீழம்' என்ற ஒரே இலட்சியத்தின் கீழ் முழுத்தமிழினமும் ஒன்றிணைய வேண்டியதே இன்றைய தேவை. காலத்தின் சர்ச்சனையாக அந்த அசரீரி முழங்குகின்றது.

இந்தத்தருணம் தவறவிடப்படுமானால், வரலாறு எங்களைத் தூற்றும். சரித்திரத்தின் பழிச்சொல்லுக்கு நாங்கள் ஆளாகுவோம்.

நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் எமது இனத்திற்கு போராட்டமே எம் வாழ்க்கையாகவும், வாழ்க்கையே எம் போராட்டமாகவும் ஆகிவிட்டது. இந்த நியதியை எம்மில் எவருமே அசட்டை செய்து ஒதுக்கிவிட முடியாது.

எமது இனம் சுதந்திரத்தை நாங்கள் வென்றெடுக்காது போனால் அடிமைகளாக அவமானப்பட்டு வாழ வேண்டும். கையேந்தி நின்று, தலைகுனிந்து வாழவேண்டும். பயந்து பயந்து பதற்றத்துடன் வாழவேண்டும். படிப்படியாக அழிந்து போகவேண்டும். ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமிழர் நிலம் மட்டுமல்ல, தென் இலங்கை வாழ் தமிழர்களின் நிலைமையும் இதற்கு நல்ல உதாரணம். ஆகவே எமது இனம் சுதந்திரத்தைப் பெற்றெடுக்க நாம் முன்வந்து உதவ வேண்டியதைத் தவிர வேறு மார்க்கம் எதுவுமே இல்லை.

> எமது இனம், எமது மொழி, எமது பண்பாடு, எமது கலை, எமது பாரம்பரியம், எமது விழுமியங்கள், எமது வீரம் இவை எல்லாவற்றினதும் ஒட்டுமொத்தமான பாதுகாவலர்களாக அழிவின் விளிம்பிலிருந்து இவை அனைத்தையும் மீட்டெடுக்கும் இரட்சகர்களாக சரித்திரம் எமது சந்ததியைத் தான் தேர்ந்தெடுத்திருக்கின்றது.

சிங்கள பேரினவாதப் பிசாசு இரங்கி வந்து ஒரு போதுமெ எமக்கு உரிமைகளைத் தந்து விடப்போவதில்லை என்பதைத்தான் வரலாறு எங்களுக்குத் திரும்பத் திரும்ப கற்பித்து நிற்கின்றது. எனவே எது நடந்தாலும் நமது தாயகத்தை மீட்கும் வரை எமது இனம் போராடி இத் தலைமுறையின் காலத்திலேயே வென்றெடுக்க வேண்டும்.

எங்களது இலட்சியம் 'தமிழீழம்' தான். சிங்களப் பேரினவாதத்துடன் 'சமரசம்' அல்ல. எங்களது நோக்கம் தனியரசு தான். சிங்கள ஆட்சிக்குகீழ் ஒரு சிற்றரசு அல்ல.

ஒன்றிணைந்து செயற்படுவோம். துணிந்து செயற்படுவோம். இடைவிடாமல் செயற்படுவோம். இலட்சியத்தை அடையும் வரை தொடர்ந்து செயற்படுவோம்.

"மற்றவர்கள் செய்கிறார்கள்: நாம் எதற்கு? அடுத்தவர்கள் எல்லாம் செய்கிறார்கள் தானே," என்று எமது கூட்டுப் பொறுப்பிலிருந்து விலகி பின்னடிக்கும் இழிவான மனநிலையை நாம் விட்டொழிக்க வேண்டும்.

எதிரியின் பலத்துக்கு இணையான பலத்தை பெறும்பொழுதே நிலங்களை மீட்டெடுக்க முடியும். போரில் வெற்றி பெற இதுதான் சரியான தருணம்.

எதிரி களைத்துப் போயுள்ளான். அவனின் படைகள் வலுவிழந்து கிடக்கின்றன. அவனின் இராணுவத் தலைமை சிக்கலில் மாட்டியுள்ளது. அதனால் அரசியல் தலைமை குழப்பத்தில் சிக்கியுள்ளது. அவனது போர்இயந்திரத்தின் பொருளாதாரபலம் ஆட்டங் கண்டுள்ளது. எனவே, வெற்றிக்கனி பறிக்க திரண்டெழுந்து உதவி வேண்டிய தகுந்த சந்தர்ப்பம் இதுதான்.

எனவே, எமது தேசத்தின் படை வலுவுக்கு மேலும் பலம் சேர்க்க நாம் ஒவ்வொருவரும் உதவ வேண்டும். தாயகத்தை மீட்க உதவும் பணி, நாம் பெற்றுள்ள ஒரு மகோன்னதமான பாக்கியம்.

எமக்காகச் செயற்படுவோம்

எம் பெற்றோர்களுக்காகப் செயற்படுவோம்.

எம் சகோதரர்களுக்காகப் செயற்படுவோம்.

எம் பிரியமானவர்களுக்காகப் செயற்படுவோம்.

எம் வீட்டுக்காகப் செயற்படுவோம்.

எம் ஊருக்காகப் செயற்படுவோம்.

எம் நாட்டுக்காகப் செயற்படுவோம்.

எம் இனத்துக்காகப் செயற்படுவோம்.

தன்னைத்தானே ஆளுகின்ற தலைகுனியாத தமிழீழத்திற்காகப் செயற்படுவோம்......

தேசப்பற்று மிக்கவர்கள் என்று நாளைய பரம்பரை எம்மை நினைவுகூரும்.

www.tamilarangam.net

www.tamilarangam.net



# இரு வாரத்துக்கொருமுறை கடிதம் மூலம் சந்திப்போம்!

*அன்புச் சகோதரமே!*

*எமது தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு புலம்பெயர் தமிழராகிய நாம் வலிமையினைப் பெருக்குதல் நம் கடமை என நாம் அடிக்கடி குறிப்பிடுகிறோம். அது குறித்து சிறிது விரிவான விளக்கம் அளிக்கும்படி தமிழீழ உடன்பிறப்பு ஒருவர் கேட்டுக்கொண்டதன் பேரில் இன்று இவ் வலிமை என்பது பற்றிச் சிறிது சிந்திக்கலாமென எண்ணுகிறேன். சர்வதேச தொடர்புகளைப்* (International Relations) *பொறுத்த மட்டில் வலிமை (* Power) *என்பது ஒன்றுடன் ஒன்று தொடர்பான மூன்று பரிமாணங்களைக்*(Dimensions)*கொண்டுள்ளது. மக்களோ அல்லது ஒரு கூட்டத்தவரோ அல்லது ஒரு அரசாங்கமோ ஒரு எல்லைப்பட்ட பிரதேசத்தை தமக்குச் சொந்தமாக அல்லது தாம் இயங்குவதற்கு தடையின்றி வைத்துக் கொள்ளுவதற்கான இயல்பு* (attitude) *என்பது முதல் பரிமாணம். இரண்டாவது பரிமாணத்தில் வலிமையென்பது சர்வதேச சமுகத்தவருடன் தொடர்புகளை வைத்துக் கொள்வதற்கான உறவுமுறையாக*(Relationship) *விளங்குகின்றது. வலிமையென்பதின் இவ்விரு பரிமாணங்களும் ஒன்றுடன் ஒன்று பிரிக்கப்பட முடியாதவை. மூன்றாவது பரிமாணம் இவ் வலிமையானது ஒரு பாத்திரத்திற்கூடாகவோ அல்லது முகவர்க்கு*(Actor or Agent) *ஊடாகவோ வெளிப்படும் தன்மையைக்குறிக்கின்றது.*

*வலிமை குறித்த் இவ்விளக்கத்தின் அடிப்படையில் முதன்மை பெறுவது எமது தாயகத்தை எமது எனப் பேணுவதற்கான பலம். வேறுவார்த்தைகளில் கூறுவதானால் தமிழீழத் தேசத்திற்கு தேசிய பாதுகாப்பினை வழங்குவதற்கான எமது விடுதலை இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவ வலிமையைப் பேணுவது. இந்த இராணுவ வலிமை தான் தமிழீழ மக்கள் மேல் சிங்கள பௌத்த பேரினவாத அரசாங்கங்கள் காலனித்துவ காலம் முதல் தொடர்ச்சியாக நடாத்தி வரும் இனஅழிப்பு நோக்குடனான ஒடுக்குமுறைகளை எதிர்த்து தமிழ் மக்கள் தம் தமிழீழத் தாயகத்தை மீளப்பெறுவதற்கான ஒரே வழியாகத் திகழ்கிறது. ஆதலால்தான். தமிழீழ விடுதலைப் புலிகளை அழிப்பதன் மூலம் தமிழ் மக்களின் தாயக உரிமையை அழித்தொழித்து தமிழ் மக்களை அடிமை கொள்ளலாம் எனக் கருதும் சந்திரிகா அரசாங்கம் தமிழீழ விடுதலை புலிகளை அழித்தல் என்ற நோக்குடனான இராணுவ நடவடிக்கைகளுக்கு சமாதானத்திற்கான யுத்தம் என பெயரிட்டு நடாத்துகின்றது. அதாவது. தமிழீழ விடுதலைப் புலிகளை அழித்தொழிப்பதினால் தமிழ்மக்கள் மீதான தமது அடக்குமுறைகளை எதிர்க்கும் வலிமையினைத் தமிழ் மக்களை இழக்கவைப்பதின் மூலம் தாம் தொடுத்த போர் ஓய்ந்து சமாதானம் சிங்களவர்க்கு தோன்றும் என்பதை மையக்கருவாகக் கொண்டு சந்திரிகா அரசாங்கம் சமாதானத்திற்கான யுத்தம் எனப் பெயரிட்டு தமிழர் தாயகம் மீதான ஆக்கிரமிப்புப் போரை நடாத்துகின்றது. தாயகத்தில் கொடிய யுத்தமும் முற்றுகைகளும் பொருண்மியத் தடைகளும் சிறிலங்காவால் கட்டவிழ்த்து விடப்பட்டு எமது மக்களின் தொழில் வழி வருமானங்கள் எல்லாமே முடமாக்கப்பட்டுள்ள இந்நேரத்தில் - தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவ வலிமையை மேலும் மேலும் பலப்படுத்த வேண்டிய கடமை புலம் பெயர் தமிழ்மக்கள் ஒவ்வொருவரதும் தேசக்கடமையாக மாறி நிற்கின்றது. சர்வதேசத் தொடர்புகளை வலுப்படுத்தல் என்று சொல்லும்பொழுது அதற்கு அடிப்படைத் தேவையான தாயகத்தைப் பேணுவதற்கான. இயல்புக்கு உதவுதல் முக்கியமான முதன்மைப் பணியாகின்றது.*

*இரண்டாவது பரிமாணத்தில் வலிமை என்பது சர்வதேச சமுகத்தவருடன் தொடர்புகளை வைத்துக் கொள்வதற்கான உறவுமுறைகளைக் குறிக்கின்றது. இதனை முதல் பரிமாணத்திலிருந்து பிரிக்க முடியாது எனக் கூறுவதற்கு காரணம் ஒவ்வொரு நாடும் இரண்டாவது உலக யுத்தத்தை அடுத்து பூரண இறைமையுள்ளனவாக ஐக்கிய நாடுகள் சபையினாலும் சர்வதேச சட்டங்களினாலும் பேணப்பட்டு வருகின்றன. இந்நிலையில். ஒரு நாடானது தனது இறைமைக்கு உட்பட்ட ஒரு தொகுதி மக்கள் மேல் ஆக்கிரமிப்பினை அல்லது அடக்குமுறையினைச் செய்யும் பொழுது பாதிக்கப்படும் மக்களுக்கு அந்நாட்டின் இறைமையை மீறி நேரடியாக உதவமுடியாத நிலைக்கு ஐக்கியநாடுகள் சபையும் சர்வதேச சட்டங்களும் உள்ளாகின்றன. ஆயினும் ஐக்கிய நாடுகள் சபை சாசனம் "மக்களாகிய நாங்கள்" என்றே தொடங்குகின்றது. ஆதலால். நாடுகளின் கட்டமைப்பை பேணுவதற்கு அல்ல மக்களின் அமைதியையும் பாதுகாப்பினையும் பேணுவதே ஐக்கிய நாடுகள் சபையினதும் சர்வதேச சட்டங்களினதும் முக்கிய பணியாக கருதப்படுகிறது. இதனால். ஐக்கிய நாடுகள் சபையின் 2(7) பிரிவு ஐக்கிய நாடுகள் சபையினை ஒரு நாட்டின் இறைமைக்குள் நுழையிடுவதை தடை செய்தபோதிலும் அத்தியாயம்* VII *உலக சமாதானத்திற்கும் பாதுகாப்பிற்கும் ஆபத்துக்களை ஏற்படுத்தும் எந்த நாட்டின் மேலும் அதனது இறைமையை பொருட்படுத்தாது தலையிடும் அதிகாரத்தை ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபைக்கு அளிக்கிறது. ஆயினும். ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு சபை வலிமைமிக்க நாடுகளின் செல்வாக்குகளுக்கு ஏற்ப தீர்மானங்களை நிறைவேற்றும் யதார்த்த நிலையினால் ஐக்கிய நாடுகள் சபையினால் பிரச்சினைகளுக்கான நீதியான நேர்மையான தீர்வுகளை ஏற்படுத்துவதில் நீண்ட தாமதங்கள் ஏற்படுவது உலக வரலாறு. ஆயினும். ஐக்கிய நாடுகளின் மேல் செல்வாக்குச் செலுத்தும் நாடுகள் தாம் விரும்பிய நேரத்தில் தலையீடுகளை மேற்கொள்வதற்கு ஏற்ப சில விளக்கங்களை அளித்து வந்துள்ளன. ஒரு அரசாங்கம் அமைதியையும் பாதுகாப்பையும் வழங்க ஆற்றல் அற்றுக் காணப்பட்டால் அந்நேரத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் சார்பாக ஐக்கிய நாடுகள் சபையின் தலையீடு சட்டபூர்வமானதாகின்றது. இந்நிலையை வெளிப்படுத்துவதற்கு -அதாவது தமது அரசாங்கம் தமக்கு அமைதியையும் பாதுகாப்பையும் வழங்கவில்லை என்பதை நிரூபிப்பதற்கு- மக்கள் தம் மேல் ஆட்சி செய்யும் அரசாங்கத்திற்கு எதிராகப் போராடுவதற்கு வலிமை வேண்டும். அந்தப் போராட்ட வலிமையூடாக தம் மேல் ஆக்கிரமிப்பு செய்யும் அரசாங்கத்தின் இறைமையை மக்கள் செயலிழக்க வைக்க முற்படும் அல்லது செயலிழக்கவைத்த நிலையிலேயே சர்வதேச தொடர்புகள் சாத்தியமாகும். இதனாலேயே முதலாவது பரிமாணமும் இரண்டாவது பரிமாணமும் பிரித்துப் பார்க்க முடியாதவையாக உள்ளன. ஐ.நா.வின் அத்தகைய தலையீடும் இரண்டு வகையானதாக உள்ளது. ஒன்று இராணுவத் தலையீடு. அடுத்தது மனிதாபிமானத் தலையீடு. இதில் முதலாவது மிக சிக்கலான ஒன்று. ஆதலால் இரண்டாவதே - அதாவது மனிதாயத் தலையீடே பெரும்பாலும் இன்றைய காலகட்டத்தில் நடைமுறைச் சாத்தியமானதாகின்றது. இதற்கு அம் முரண்பாட்டில் சம்பந்தப்பட்ட பாதிக்கப்பட்ட மக்களின் இயக்கத்தை அங்கீகரிப்பதே முதல் அணுகுமுறையாக அமைகிறது. இதன் மூலம் பாதிப்புற்ற மக்களின் குரல் சர்வதேச உலகில் தெளிவாக கேட்கச் சந்தர்ப்பம் கொடுக்கப்படுகின்றது. அத்துடன் ஆக்கிரமிப்பாளர்களினால் உருவாக்கப்படும் போலியான மக்கள் பிரதிநிதித்துவங்களுக்கும் இதன் மூலம் முடிவு ஏற்படுத்தப்படுவதினால் பிரச்சினை குறித்த சரியான வடிவத்தை ஆழத்தை உலகு இனங்கண்டு பிரச்சினைகளுக்கான தீர்வினை விரைவுபடுத்த இது உதவியாக அமைகின்றது. அதே நேரத்தில் பாதிப்புற்ற மக்களுக்கான உதவிகளை பாதிப்பினை ஏற்படுத்தும் கரங்களுக்கு ஊடாக வழங்குவதினால் ஏற்படும் சிக்கல்களை நீக்கி பாதிக்கப்பட்ட மக்களுக்கு அடிப்படை உதவிகள் வழங்கப்பட்ட நிலையிலேயே தீர்வுக்கான முயற்சிகள் வளர இது பேருதவியாக அமைகிறது. ஆதலினால். தமிழீழ மக்களின் எல்லாவித பிரதிநிதித்துவ முறைமைகளும் சிறிலங்காவால் மறுக்கப்பட்டு சிறிலங்காவால் உருவாக்கப்பட்ட பொம்மைத் தமிழ்ப் பிரதிநிதித்துவங்கள் உலகெல்லாம் சிங்கள சிறிலங்காவின் பிரச்சார பீரங்கிகளாக செயற்பட்டுக் கொண்டிருக்கும் இக்கால கட்டத்தில் புலம் பெயர் தமிழீழ மக்களே தமிழீழ மக்களின் சர்வதேச உறவுகளை நிறைவேற்ற வேண்டியவர்களாக உள்ளனர். இவ்வாறு புலம்பெயர் தமிழர்கள் சர்வதேச உறவுகளை ஏற்படுத்துவதற்கான வலிமை - தமிழீழத்தில்- தமிழீழ விடுதலைப் புலிகள் -தமிழீழத் தேசத்தினைப் பேணி -அங்கு இருந்து சிங்கள ஆக்கிரமிப்பு அரசின் இறைமையினைச் செயலிழக்க வைக்கும் வலிமையிலேயே தங்கியுள்ளது. அதனால் தான் முதலாவது பரிமாணத்தையும் இரண்டாவது பரிமாணத்தையும் ஒன்றுடன் ஒன்று பிரிக்கமுடியாதவை எனக் குறிப்பிட்டேன்.*

*மூன்றாவது பரிமாணம்-செயற்பாட்டிற்கு மிகமிக முக்கியமானது. அதாவது ஒரு பாத்திரத்தினூடாகவோ அல்லது முகவர் ஊடாகவோ வலிமை வெளிப்படும் பொழுதுதான் சர்வதேசத் தொடர்பு என்ன நோக்கிற்காக ஏற்படுத்தப்பட வேண்டுமோ. அந்த நோக்கினை எய்த முடியும். தமிழீழ மக்களைப் பொறுத்த மட்டில் அவர்களது வலிமையினை வெளிப்படுத்தும் முகவராக தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச பணிமனைகளும் அந்த முகவருடன் சேர்ந்து இயங்கும் பாத்திரங்களாக ஒவ்வொரு புலம்பெயர் தமிழனும் உள்ளான். இதனை நாம் உணர்ந்து எமது தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் எம் தேசத்திற்காக எம்மால் இயலுமான எல்லாவற்றையும் காலதாமதமின்றி செய்வதினையே தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு வலிமையூட்டுதல் என்பதினால் அடிக்கடி நினைவுறுத்த விரும்புகின்றோம். நாம் வெற்றிகரமான சர்வதேச தொடர்புகளை ஏற்படுத்த தமிழீழ விடுதலைப் புலிகள் மேலும் மேலும் வலிமை பெற்று வெற்றி மேல் வெற்றியாக குவிக்கும் காலம் நம்மால் விரைவுபடுத்தப்பட வேண்டும். சந்தைப் பொருளாதாரத்தினால் இயக்கப்படும் இன்றைய உலகில் பணமே எல்லா செயற்பாட்டிற்கும் அச்சாணியாக உள்ளது. ஆதலால் நிதியளிப்பு என்பதே இன்று தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு முதல் வலிமையூட்டலாக அமையமுடியும். அதனோடு கூட எங்கள் மக்கள் மேல் சிறீங்கா ஆக்கிரமிப்பு அரசாங்கம் நாளும் பொழுதும் செய்யும் இனஅழிப்பு நோக்கிலான அனைத்துக் கொடுமைகளையும் வெளிப்படுத்தி அதற்கு தமிழ் மக்களுக்கு பாதுகாப்போ அல்லது அமைதியோ ஏற்படுத்தும் நோக்கோ என்றும் இருந்ததில்லை என்பதினை தெளிவுபடுத்தி பாதிப்புற்ற மக்களின் இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகளை உலகு அங்கீகரித்து இதன் மூலம் தமிழீழ மக்களின் குரல் உலக அரங்கில் தெளிவாக ஒலித்து அவர்களது பிரச்சினைக்குப் பாதுகாப்பான அமைதித் தீர்வு விரைவு பெற சர்வதேச சமுகத்தின் உதவிகளைக் கேட்போமாக!.*

*அன்பின் ஆசிரியர்.*

# வெள்ளைக் கொடி பிடித்து வந்த சந்திரிகாவின் வெள்ளை வான் பயங்கரவாதம்

**யு**த்தத்தை நிறுத்தி அமைதி வழித் தீர்வு காண்பேன் என ஆட்சிக்கு வந்த சந்திரிகாவின் ஆட்சி முன்னைய ஆட்சியை விட மோசமான யுத்தங்களையும் மனிதாபிமானத்திற்கு எதிரான சட்டவிரோத நடவடிக்கைகளையும் கட்டவிழ்த்து விட்டு வருவதை யாவரும் அறிவர்.

இவ்வகையில், கடந்த ஆட்சியில் காணப்பட்டு, மனித உரிமை அமைப்புக்களால் கடுமையாக விமர்சிக்கப்பட்ட ஆட்கடத்தும் வெள்ளை வான் வவுனியாவில் மீண்டும் ஆட்களைச் சட்டவிரோதமாக கடத்தும் கைங்கரியத்தில் இறங்கியுள்ளது.

இலக்கத் தகடுகளோ அல்லது வேறெந்த இனங்காணக் கூடிய அடையாளங்களோ இல்லாத வெள்ளை வானில் வவுனியாவில் வந்து இறங்கிய சிறீலங்கா இராணுவத்தினர் நாற்பது வயதான சந்தானம் அன்ரனி என்னும் இரு குழந்தைகளின் தந்தையையும் முப்பந்தைந்து வயதான பி. ராசா என்பவரையும் அவர்களது வீடுகளிலிருந்து தமது வானுக்குள் தூக்கிப்போட்டுக் கொண்டு தலைமறைவாகியுள்ளனர்.

அவர்களது உற்றார் உறவினர்கள் சிறிலங்கா இராணுவ முகாம் அதிகாரிகளை அணுகி இது குறித்து தகவல் விசாரித்த பொழுது இக்கைதுகள் குறித்து தமக்கு எதுவுமே தெரியாது என மறுத்துவிட்டனர். ஆயினும் சிறீலங்கா இராணுவமே அவர்களைக் கைதுசெய்து கொண்டு சென்றது என பொது மக்கள் ஆணித்தரமாக எடுத்துக் கூறியதை அடுத்து அவர்கள் தமது காவலிலேயே கைதிகளாக தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக பின்னர் வெளியிட்டுள்ளனர். இவர்கள் கடும் சித்திரவதைப்படுத்தப் பட்டுள்ளதாக வவுனியாச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையே, சந்திரிகாவின் படைப் பாசறையாக மாற்றப்பட்டுள்ள வவுனியாவை சிறீலங்காப் படைகளுக்கான வழங்கல் நிலையமாக்குவதிலேயே சிறீலங்கா அரசாங்கம் வேகமாகச் செயற்படுவதினால் அங்கிருந்து பெரும் திரளான தமிழர்கள் வெளியேறுவதுடன் அங்கிருக்கும் தமிழர்களும் பலத்த அச்சத்துடன் காணப்படுகின்றனர். இவர்களின் அச்சத்தை சிறீலங்கா இராணுவத்தின் துணைப்படைகளாக இயங்கும் புளட் ரெலோ குழுக்களின் நடமாட்டம் மேலும் மோசமாகியுள்ளது. நள்ளிரவு வேளைகளில் மக்களின் வீடுகளுக்குள் புகும் சிறீலங்காப் படைகள் துணைப் படைகளின் தலையாட்டுதலுடன் கூடிய கைதுகளை வேகப்படுத்தி வருகிறது. இந்நிலையில் வெள்ளைவான் பயங்கரவாதமும் தலைதூக்கியுள்ளதால் மக்கள் இனங்காணக் கூடிய அச்சத்தால் தவிக்கின்றனர். கடைசியாக கிடைத்த தகவலின் படி மே மாதம் 26ம் திகதி சாந்தசோலைப் பகுதியில் 12 பொதுமக்களை கைதுசெய்து கொண்டு சென்ற சிறீலங்காப் படைகள் ஒரு தமிழ் இளம் பெண்ணை நிரந்தரக் கைதியாக்கி மற்றவர்களை துன்புறுத்தி விடுதலை செய்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இவரது கணவரையும் மூன்று மாதங்களுக்கு முன்னதாக சிறீலங்காப் படை கைதாக்கி சிறையில் அடைத்துள்ளது. கணவனையும் மனைவியையும் தனித்தனியாக சிறையில் அடைத்து வைத்துச் சித்திரவதை புரிவதாகச் செய்திகள் கூறுகின்றன. ★

www.tamilarangam.net



# வெற்றி நிட்சயத்திற்கு மற்றுமொரு நெற்றியடி!! வேதாளம் மீண்டும் முருங்கைமரம் ஏறும்.

விக்கிரமாதித்தன் வழங்கிய சரியான பதிலால் திருப்தி கொண்டு 'வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிக்கொண்டது' என்ற அம்புலிமாமாக் கதையாகிப் போய்விட்டது ஜெனரல் ரத்வத்தையின் ஜெயசிக்குறு விவகாரம். ஒவ்வொரு தடவையும் ஏதாவது சந்தேகத்துடன் தோன்றும் வேதாளம், விக்கிரமாதித்தனை, கேள்விகேட்டு மடக்க நினைப்பதும், விக்கிரமாதித்தன் சரியான பதிலை வழங்கி, வேதாளத்தை மீண்டும் முருங்கை மரத்தில் ஏறப்பண்ணுவதும் சின்னவயதில் படித்தவை.

இரண்டாவது இராணுவ அணி, அம்பகாமம் பகுதியில் விடுதலைப் புலிகளால், தடுத்துநிறுத்தப்பட்டது.

தடுத்து நிறுத்தப்பட்ட இராணுவ அணி, குந்தியிருக்கச் சந்தர்ப்பம் கொடுக்காமல், சடுதியான திடீர் தாக்குதலை மறுநாள் மாலையே விடுதலைப் புலிகள் மேற்கொண்டனர். அம்பகாமத்தில் இருந்து தலை தப்பினால் போதும் என ஆயுதங்களையும் போட்டுவிட்டு இரு திசைகளாகப் பிரிந்து ஓடிய இராணுவத்தினரை விடுதலைப் புலிகள் விடுவதாக இல்லை. ஓடிய இராணுவத்தின் ஒரு அணிக்கு

> **இத்தகையதொரு நகர்வை சிங்களப்படை மேற்கொள்வர் என முன்னரேயே எதிர்பார்த்து, இந்த நோய்க்கு எந்த வைத்தியம் கைமேல் பலன்தரும் என ஆய்ந்தறிந்து, புதிய புதிய இராணுவத் தந்திரோபாயங்களை வகுத்துக்கொண்டு, காத்திருந்த விடுதலைப் புலிகளும் சரியான சந்தர்ப்பம் பார்த்து உக்கிரமான தாக்குதலைத் தொடுத்தனர்.**

சிலகால அமைதிக்குப்பின், 28ம் திகதி மீண்டும் பெரும் எடுப்பில், மாங்குளத்தைக் கைப்பற்றும் முயற்சியை, சிங்களப் படை மேற்கொண்டது. அமைச்சர் ரத்வத்தை, ஜெயசிக்குறு படையணி நிலைகொண்டுள்ள பகுதிகளுக்கு, இராணுவத்தளபதி மற்றும் முன்னணி தளபதிகளுடன் விஜயம் செய்து, இராணுவத்தினரை ஊக்கப்படுத்தி கதைகள் சொல்லி உசார்படுத்திவிட்டு திரும்பி வந்ததும் இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. இம்முறை பிறிதொரு யுக்தியை மேற்கொண்டு, மாங்குளத்தைக் கைப்பற்றுவது திட்டம். மாங்குளம் நோக்கி, இரு திசைகளில் சமாந்தரமான இராணுவ நகர்வை மேற்கொண்டு, விடுதலைப் புலிகளின் கவனத்தை இரு திசைகளில் சிதைத்து, தமது திட்டத்தை வெற்றி கொள்வது என்பது ரத்வத்தையினதும் இராணுவத் தளபதிகளினதும் திட்டம். திட்டமிட்டதுபோல இருமுனைகளில் படையினர் புறப்பட்டனர். விமானப்படை குண்டுகளைப் பொழிய ஆட்டிலறிகள் நெருப்பை உமிழ்ந்து பாதையேற்படுத்திக் கொடுக்க, கந்தகப்புகை பரவி எழுந்த மண்ணை உறுமிக் கடந்தபடி டாங்கிகள் செல்ல..... அந்த இயந்திர அரக்கனின் பின்னால் பதுங்கிப் பதுங்கி சிங்கள ஆக்கிரமிப்புப் படை முன்னேறியது.

இத்தகையதொரு நகர்வை சிங்களப் படை மேற்கொள்வர் என முன்னரேயே எதிர்பார்த்து, இந்த நோய்க்கு எந்த வைத்தியம் கைமேல் பலன்தரும் என ஆய்ந்தறிந்து, புதிய புதிய இராணுவத் தந்திரோபாயங்களை வகுத்துக்கொண்டு, காத்திருந்த விடுதலைப் புலிகளும் சரியான சந்தர்ப்பம் பார்த்து உக்கிரமான தாக்குதலைத் தொடுத்தனர். மூன்று முறிப்புக்கூடாக மாங்குளத்தை ஆக்கிரமிக்கப் புறப்பட்ட படை, பெரும் இழப்புக்களுடன் முதல்நாளிலேயே அடித்து விரட்டப்பட்டது.

கெடுகாலம்போலும். விடுதலைப் புலிகள் சுற்றிவளைத்து தாக்குதல் தொடுத்தனர். பலர் கொல்லப்பட்டனர் பலர் காயப்படுத்தப்பட்டனர். ஏராளமான ஆயுதங்களை, ரவைகளை, இராணுவ உபகரணங்களை இச்சண்டைக் களத்தில் சிங்களப்படையினர் இழந்தனர்.

இறுதியானதும் உறுதியானதுமான மாங்குளத்தைக் கைப்பற்றும் நடவடிக்கை எனக்கூறிக்கொண்டு புறப்பட்ட சிங்களப் படைக்கே இந்தக்கதி ஏற்பட்டுள்ளது.

இதில் ஒரு வேடிக்கையை குறிப்பிட்டாகவேண்டும்.

இந்த வருடத்தில் மூன்று தடவைகள், பொதுமன்னிப்பு அறிவிக்கப்பட்டு, தலைமறைவான இராணுவத்தினரை மீண்டும் படையில் இணைத்துக் கொள்ளும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இப்பொதுமன்னிப்பைப் பயன்படுத்தி பெருமளவு இராணுவத்தினர் மீண்டும் படையில் இணைந்து கொண்டுள்ளனர் என சிறீலங்காப் பாதுகாப்பமைச்சகம் தெரிவிக்கின்றது. மே மாதம் 5ம் திகதியில் இருந்து 10ம் திகதிவரை வழங்கப்பட்ட ஐந்துநாள் பொதுமன்னிப்புக் காலத்தின்போது, தலைமறைவான பதினையாயிரம் படையினரில் ஐயாயிரத்தி எண்ணூற்றி தொன்னூற்றிரண்டு பேர் மீண்டும் படையில் இணைந்துகொண்டனர் எனவும், பின்னர் 24ம் திகதி வழங்கப்பட்ட ஒருநாள் பொது மன்னிப்பின்போது நாலாயிரத்து நானூற்றி நாற்பத்தியொரு படையினர் மீண்டும் இணைந்து கொண்டனர் எனவும் சிறீலங்காப் பாதுகாப்பமைச்சகம் தெரிவிக்கின்றது. ஆயிரத்தி எழுநூற்றி அறுபத்தியெட்டுப் பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் அது தெரிவிக்கின்றது. ஆக, சிறீலங்காத் தரப்புச் செய்தியை சரியென எடுத்துக்கொண்டு பார்த்தால், இரண்டாயிரத்து எண்ணூற்றி எண்பத்தியொன்பது படையினரே தொடர்ந்து தலைமறைவாகியிருக்கின்றனர். இதன்படி பன்னீராயிரத்து நூற்றியொரு படையினர் மீண்டும் படையில் இணைந்துள்ளனர் அல்லது இணைக்கப்பட்டுள்ளனர்.

ஆக, பன்னீராயிரத்துக்கு மேற்பட்ட படையினர், மீண்டும் சண்டைக் களத்திற்கு அனுப்பப்பட்ட நிலையிலேயே, இப்புதிய தரைநகர்வு முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆறாயிரம் படையினர் திரும்பி வந்தாலே போதுமானது, ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கையை விரைவாக பூர்த்தி செய்துவிடுவோம் என, இரண்டு வாரங்களிற்கு முன், சிறீலங்கா இராணுவத் தளபதி ரோகான் தலுவத்தை சொல்லியிருந்தார். அவர் சொன்னதுக்கு மேலாக, இரண்டு மடங்கு படையினர் படையில் மீண்டும் சேர்ந்துள்ளனர். ஆகவே, மிகமிக விரைவாக ஜெயசிக்குறு முடிவடையக்கூடும் என்ற எதிர்பார்ப்புடன், பௌத்த சிங்களப் பேரினவாதிகள் அதீத நம்பிக்கையுடன் வாய்பிளந்து பார்த்திருக்க, தொடங்கப்பட்ட இந்த இராணுவ நடவடிக்கையை, நன்கு குறிபார்த்து நெத்தியடி கொடுத்துள்ளனர் விடுதலைப் புலிகள். சிங்களத்தின் ஆக்கிரமிப்பும் அடக்குமுறையும் வெறும் படை எண்ணிக்கையுடன் சம்பந்தப்பட்டதாக அவர்கள் எண்ணிக் கொண்டிருக்கின்றனர். ஆனால் யதார்த்தம் அதுவல்ல என்பதை விடுதலைப் புலிகள் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மிகத் தீர்க்கமாக தமது தாக்குதல்களின் மூலம் எடுத்துச் சொல்லிவருகின்றனர்.

மாங்குளத்தை கைப்பற்றுவதே பெரும் பாடாய் இருக்கின்ற நிலையில், ஜெயசிக்குறுவை எப்படி விரைவில் பூர்த்திசெய்வது என்பது விடை தெரியாத கேள்வி. ரோகான் தலுவத்தை இன்னும் மேலதிகமாகப் படையினர் தேவை என கேட்கக்கூடும். ஒருவருடத்திற்கு மேலாக, பெரும் எண்ணிக்கையிலான படையினர் இடைநடுவில் சிக்கியுள்ளனர். சிறீலங்காவின் பொருளாதாரத்தை மிகவும் தீவிரத்துடன் உறிஞ்சிக் கொண்டிருக்கும் இந்த ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கை, பெரும் உயிர்விலையை தினமும் கொடுத்துக்கொண்டே இருக்கின்றது. பல ஆயிரக்கணக்கில் படையினர் காயமடைந்து அப்புறப்படுத்தப்பட, புதிய இராணுவத்தினரை தேடி ஜெயசிக்குறு தன் கரங்களை நீட்டிக் கொண்டிருக்கின்றது. சிங்களத்தை சிறுகச்சிறுக அரித்துத் தின்னும் கொடிய நோய்போல், அது

**சுப்பு**

முற்றியுள்ளது. மாவீரர்களின் வித்துடல்கள் வீழ்ந்து, உறுதியும் உரமும் வீரமுமாய் விளைந்து நிற்கும் வன்னிமண், ஆக்கிரமிப்பாளர்களுக்கு சாக்கிடங்கையும் வெட்டி வைத்துள்ளது போலும்.

ஒரு பெரும் பொறியில், தாமாகவே, திமிர்த்தனத்துடன் வந்து நுழைந்து அவதிப்படும் சிங்களம் இனி மீள்வதற்கு சந்தர்ப்பம் இருப்பதாகத் தெரியவில்லை. T

## 32 நாடுகள் கலந்து கொண்ட உலகக் கோப்பை உதைபந்தாட்டப் போட்டியில் தமிழீழம் அணி

இலண்டன் விம்பிள்டனில் (Wimbledon) நடைபெற்ற முப்பத்தி இரண்டு நாடுகள் கலந்து கொண்ட இன்னர் சிட்டி உலக கோப்பைப் போட்டி 98(Inner City World Cup 98) இல் தமிழீழம் அணியும் பங்குபற்றி சிறப்பாக விளையாடி உள்ளது.

முதல் நாள் 30.05.98 இல் நடைபெற்ற போட்டிகளில் தமிழீழ அணி சியாரா லியோன் ( Sierra Leone), மெக்சிக்கோ ( Mexico), இஸ்ரயேல் ( Isreal) ஆகிய நாடுகளுடன் மோதிய தமிழீழ அணி சிறப்பாக விளையாடி எடுத்த எடுப்பிலேயே 2ம் கட்ட சுற்றுப் போட்டிக்குத் தகுதி பெற்று தமிழீழத் தாய் நாட்டிற்கு பெருமை சேர்த்துள்ளது.

தமிழீழத் தேசியக் கொடியின் பின்னால் தமிழீழ அணிவீரர்கள் அணி வகுப்புடன் தமிழீழ அணி விளையாடிய போட்டிகள் அனைத்தும் ஆரம்பமாயின. மைதானத்தில் குழுமிய பல்வேறு நாட்டு மக்களுடன் நூற்றுக்கணக்கான தமிழீழ ஆண்களும் பெண்களும் தமிழீழத் தேசிய உடையில் தமிழீழ அணிக்கு ஆதரவு தெரிவித்து திரண்டிருந்தமை தமிழீழ மக்களின் தேசிய எழுச்சியை எடுத்துக் காட்டுவதாக இருந்தது.

போட்டிகள் சனல் 4 ( Channel 4) தொலைக்காட்சி நிறுவனத்தினால் ஒளிப் படமாக்கப்பட்டது. ★

### மன்னாரில் வெற்றித்தாக்குதல்

மே 18ம் திகதி மன்னார் செட்டியாக்கோட்டை அடம்பனில் இருந்த சிங்கள மினி இராணுவ முகாம் மீது அதிகாலை 545 மணிக்கு விடுதலைப் புலிகள் தாக்குதல் தொடுத்ததும் சுமார் பத்து நிமிடத்தில் கொல்லப்பட்டவர்களையும் தூக்கிக் கொண்டு இராணுவத்தினர் ஓடித்தப்பித்துக் கொண்டனர். அங்கிருந்த ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. இத்தாக்குதலில் விடுதலைப் புலிகளுக்கு எவ்விழப்பும் ஏற்படவில்லை. ★

www.tamilarangam.net



## சிறுகதை

# களத்தின் கதாநாயகி கண்களுக்குள் நின்றாள்



எல்லாச் சத்தங்களும் ஓய்ந்து இறுகிப்போன அமைதிக்குள் காடு மூழ்கிப்போயிருந்தது. இந்த அமைதியான ஓய்வு இல்லையில்லை—இதனை அமைதியான ஓய்வென்பதா? அல்லது ஒரு சுடுகாட்டில் நிற்கின்ற தனிமை என்பதா?

எல்லாவற்றையும் விட பயங்கரமான, வார்த்தைகளால் வரையறுக்கமுடியாத கணப்பொழுதாய், ஒரு கனத்த பொழுதாய் அது இருந்தது. இக் கணப்பொழுதின் நீடிப்பு சிறிது நேரத்துக்குத்தான் என்பது அங்கிருக்கின்ற போராளிகள் அனைவருக்கும் தெரியும்.

அதன்பிறகு எறிகணைகள் வீழ்ந்து வெடிக்கின்ற சத்தங்களினால் காடு அதிரும். எறிகணைத் துண்டுகள் சிதறி காய்ந்த புற்களில் பற்றிக்கொள்ளும் தீ, சரசரவென எல்லாவற்றையும் சுட்டுப்பொசுக்கும். இன்னும் எஞ்சியிருக்கின்ற சின்னஞ் சிறு காட்டு விலங்குகள் அந்தரித்து அலையும்.

இந்தக் கணநேர இடைவெளியை வாய்ப்பாக வைத்து, நிலைகளில் நிற்கின்ற போராளிகள் குடிப்பதற்கு தண்ணீர் அள்ளிக்கொண்டு வருவதற்கு ஒருமைல் தொலைவுக்கப்பால் இருக்கின்ற குடிதண்ணீர் கிணற்றை நோக்கிச் செல்வார்கள். உருமறைப்புச் செய்யப்பட்ட கொள்கலங்களுடன் எவ்வளவு வேகமாக முடியுமோ, அவ்வளவு விரைவாகச் சென்றுவர வேண்டியிருக்கும். இடையில் எறிகணைகளுக்குள் அகப்படாதிருக்கவே அந்த எச்சரிக்கையும் வேகமும். எடுத்து வருகின்ற தண்ணீர் அடுத்த நாள்வரைக்கும் தாக்குப்பிடிக்க வேண்டும். இடையில் சிலவேளைகளில் நிலைமை மோசமடைந்தால், அடுத்தநாள் தண்ணீருக்குத் தவிக்க வேண்டியதுதான்.

"அடுத்த முழக்கத்துக்கு முதல் தண்ணீ எடுத்துக்கொண்டு வருவம்"

அருகில் நின்றவள் கூறிவிட்டு கொள் கலனுடன் வந்தாள்.

பாதை நீளமும் தொட்டாற்சுருங்கி படர்ந்த ஒரு ஒற்றையடிப் பாதை. ஒரு பாம்பின் நெளிவாக அது நீண்டு சென்றது. சிறிது தூரத்தே ஒற்றை ஒற்றையாக வீடுகள் வெறுமையாகக் கிடந்தன. அநேகமாய் அந்த வீடுகள் கட்டப்பட்டு ஒரு வருடத்துக்குள்ளேதான் இருக்கவேண்டும். சிலவீடுகள் அழகாக மண் சுவர்கள் மேல் சுண்ணாம்பு அடிக்கப்பட்டு, பூச்சுக்கள் கொட்டுப்படாமல் இருந்தன. சிலவற்றின் கூரைகள் பலத்த காற்றுக்கு மேற்கிளம்பி, அலங்கோலமாக இருந்தன. அந்த வீடுகளில் வாழ்ந்த மக்களுக்கு இது எத்தனையாவது தடவையான இடப்பெயர்வோ? யாழ்ப்



பாணத்தின் ஏதோ ஓர் அழகிய கிராமத்தில் இனிதாக ஒரு வீட்டில் அவர்கள் வாழ்ந்திருக்கலாம். வன்னி மண்ணின் செழித்த தோட்டங்களுக்கு சொந்தக் காரர்களாய், இவ்வூர் மக்களாயும் இருந்திருக்கலாம். வெறுமை குடிகொண்ட அந்த வீடுகள் துரத்தித் துரத்திக் கல்லெறியப்பட்ட கூடுகளாய் கிடந்தன.

முற்றத்தே சிறுசிறு தோட்டங்களாக்கும் முயற்சியில் – வாடிக்கிடந்த மரவள்ளிக் கன்றுகள், தண்ணீரின்றி பிஞ்சும் பூவும் காய்ந்துபோன புடோலங்காய்ப் பந்தல், முற்றத்தே சிந்தப்பட்ட நெல்மணிகள், கதிர்கள் – இன்னும் வாழ்ந்து காயாத அம்மக்களின் எச்சங்களாய், சுவடுகளாய்த் தென்பட்டன.

முன்பென்றால் இப்படித்தான் அவள் தண்ணீர் எடுக்கப்போகும் நாட்களில் நீலாம்பரி தவறாது வருவாள். அந்த இடங்களைச் சுற்றிப் பார்ப்பதில் நீலாம்பரிக்குச் சரியான ஆவல். அவள் கூட வருகின்ற நாட்களில் அந்த இடங்களைப் பற்றியும் அங்கு வாழ்ந்த மக்களைப் பற்றியும் வாய் ஓயாமல் சொல்லிக்கொண்டே வருவாள். இந்த வன்னி மண்ணின் அநேக பகுதிகள் அவளுக்குத் தண்ணீர்பட்ட பாடாக இருந்தன.

"இந்த அருவிக் கரையாலை போய் அந்தக் குளக்கட்டுக்குப் போகலாம். இந்தப் பாதையாலைபோய் அந்தக் கிராமத்திலை ஏறலாம்."

அவள் வழிகாட்டிச் செல்கின்ற பாதைகள் சிறிது நேரத்தில் அவ்வவ் இடங்களை அடையக்கூடிய குறுக்குவழிப் பாதைகளாய் இருக்கும். அக்காலத்தில் அப்பிரதேசங்களில் அவள் அரசியல் வேலை செய்தபடியால் அப்பிரதேசங்களைப்பற்றி நன்கு அறிந்திருந்தாள். அக்கிராமத்து மக்களைப்பற்றி கதைக்கும்போது அவள் கண்களில் புதியதொரு ஒளி தென்படும். அந்த மக்கள் தம்முடன் எப்படியெல்லாம் நெருங்கியிருந்தார்கள் என்பதை அவள் சொல்லும்போது, இப்போது ஏற்பட்டிருக்கும் நிலைபற்றியும் வருந்துவாள்.

தண்ணீர் அள்ளும் கிணற்றுக்கு அருகே இருந்த பெரிய வேப்பமரத்தை எறிகணையொன்று பதம் பார்த்திருந்தது.

ஜெயசிக்குறு சண்டை தொடர்வதால் காட்டு மரங்களின் ஒருபகுதி அழிந்து கொண்டு போகிறது.

"இந்த மரங்களைப் பாரன் எவ்வளவு பாவம்"

எறிகணைகள் பட்டு பச்சை மரங்கள் முறிந்தும், சன்னமாகக் கிழிக்கப்பட்டும், பட்டை பட்டையாகக் கிளம்பிய அந்த மரங்களைப் பார்த்து அவள் சொன்னாள். அந்த நேரத்தில் அவளது இயல்பான கலகலப்பு எங்கோ ஓடி ஒளித்துவிட அவளிடம் வெளிப்பட்டுத் தெரிகின்ற மென்மை, இரக்கம் கண்களில் உருகித் தெரிகின்ற சோகத்துடன் உணர்ச்சிப் பிழம்பாகத் தெரிவாள். இறுதியாக நடந்த கிளிநொச்சி படைத்தளம் மீதான தாக்குதலில் ஓய்ந்துபோனாள்.

அவளை நினைக்கும்போது ஜெயசிக்குறுவின் மன்னகுளம் சண்டை நினைவுக்கு வரும். அந்தச் சண்டையின் வெற்றிப் பெருமிதத்தோடு ஒன்றாகக் கலந்து, அள்ளப்பட்ட ஆயுதங்களைக் கணக்கெடுத்த போதெல்லாம் எங்கள் நினைவுக்குள் கும்மாளமிட்டு ஒரு சின்ன நட்சத்திரமாய் நிறைந்து போனாள்.

குளிர்காற்று உடலைச் சிலிர்க்கவைக்க அந்தச் சண்டை நடந்தநாளின் விடிகாலையும் எந்தவித ஆரவாரங்களுமின்றி விடிந்தது. வழமைபோல விடிகாலையில் எழும்பி எல்லாம் ஆயத்தமாகி நிலைகளுக்குச் சென்று இனிய காலை உறக்கத்தை மிகுந்த சிரமத்துடன் விரட்டி, விழிகளால் இருளை ஊடறுத்தபடி நின்றோம். நிலம் வெளிக்கத் தொடங்கியது. இப்போதைய காலைகள் எல்லாம் குருவிகளும் காகங்களும் ஆர்ப்பரிக்க விடிவதில்லை. சண்டை தொடங்கிய நாட்களிலிருந்து அந்தப் பறவைகளும் இடம்பெயர்ந்த எமது மக்களைப்போல அழகிய காட்டின் கூடுகளைவிட்டு இடம்பெயர்ந்து போயின போலும். சண்டைக்களங்களின் வெம்மையினால் எரிந்துபோன அவற்றின் கூடுகளையும், முறிந்துபோன அவற்றினது மரக்கிளை இருப்பிடங்களையும் விட்டு அவை பறந்துபோயின.

அன்று காலை இராணுவத்தின் முன்னேற்றத்துக்கான அறிகுறிகள் தென்பட்டன. எந்தக் கணமும் எதிரி வரவை எதிர்பார்த்தபடி எல்லோரும் தயார்நிலையில் நின்றனர். அடர்ந்து பரவியிருந்த பற்றைகள் ஆட்களை மறைத்தபடி மண்டிக் கிடந்தது. அந்த மறைவினுள் எல்லோரும் உருமறைத்தபடி பதுங்கியிருந்தோம்.

புதூர் பகுதியில் இருந்து மன்னகுளம் நோக்கியும் கனகராயன்குளம் நோக்கியும் இரு முனைகளூடாக நகர்ந்த படையினர் எமது நிலைகளுக்கப்பால் மன்னகுளத்தில் நிலை அமைத்துக் கிடந்தனர். அது அவனது பெரிய படைநகர்வு. எங்களின் பக்கத்தில் எந்த அசைவுகளுமில்லை. காற்றில் சருகுகள் அள்ளுப்பட்டு கலைந்து போகின்ற சிறு சத்தங்களைத் தவிர எந்தவித ஆரவாரங்களுமின்றி நிலையெடுத்தபடி கிடந்தோம். ஒவ்வொருவரது மூச்சுக் காற்றுகளும்கூட எங்கே எதிரிக்கு தங்களின் நிலைகளைக் காட்டிக் கொடுத்துவிடுமோ என்ற எச்சரிக்கையோடு அசைவற்றபடி இருந்தோம்.

காலை ஆறுமுப்பது மணியிருக்கும். கண்ணிவெடி ஒன்று அதிர்ந்தது. சருகுகள் மேலெழுந்து மண் கட்டிகள் காட்டு மரங்களில் மோதி உதிர்ந்தன.

படையினரின் நகர்வுக்கான எச்சரிக்கையாக எங்களுக்குப்பட்டது அதேதான்.

இருவர் மெதுவாக ஊர்ந்தனர். தரையோடு தேய்ந்துதேய்ந்து மிக மெதுவாக கண்ணிவெடி வெடித்த காரணத்தை அறிந்துவரச் சென்றனர். எதிரியின் மூன்று எல். எம். ஜி. நிலைகளையும் தாண்டிச் சென்றபோது இராணுவத்தினரின் தலைக் கவசம் முதலாவதாகச் சென்றவளின் கண்ணில்பட, அவளது கைகளில் இருந்த துப்பாக்கி முழங்கத்தொடங்கியது. அந்த இடத்தில் நின்று சண்டை பிடித்தபடி வந்துவிழுந்த எறிகணைகளுக்குள்ளாலும் ரவை மழைகளுக்குள்ளாலும் நிலையெடுத்தபடியே மீண்டும் பழைய இடத்துக்கே வந்தபோது சண்டை வலுக்கத் தொடங்கியது.

எதிரியின் இலக்கு எங்கள் நிலைக்குப் பின்னால் தெரிந்த பெரியகல் வீடாகவே இருந்தது. அந்த வீட்டில் புலிகளின் முக்கிய தளம் ஒன்று இருக்கின்றதாக எதிரிக்கு தகவல் போக, அந்தத் தளத்தை முற்றுகை செய்வதற்கு முன்னேறிக் கொண்டிருந்தது இராணுவம்.

நாங்கள் பதுங்கியிருந்தோம். எந்தவித அசைவுகளுமில்லை. எல்லோரது ஆயுதங்களும் தயாராக. விசைவில்லை எப்போது அழுத்துவது என்ற மிகுந்த எதிர்பார்ப்போடும் எச்சரிக்கையோடும் காத்துக்கிடந்தன.

இராணுவம் எமது நிலைகளைத் தாண்டி முன்னேறிக்கொண்டிருந்தது. வரிசையாய் குவியல் குவியலாய் சென்று வீட்டைச் சுற்றிக் குவிந்தனர்.

பதுங்கியிருந்த எம்மவர் இராணுவத்தை மேவிச் சுற்றிவளைத்தனர். நெருப்புக் கோளங்களாய் ரவைகளும் எறிகணைகளும் முழங்கத்தொடங்கின. கட்டளைக்குக் காத்திருந்தவர்களாய் அனைவரும் தங்கள் தங்கள் நிலைகளில் நின்றபடியே சண்டை பிடிக்கத் தொடங்கினர்.

பற்றைக்காடு – குரலை வைத்தே ஆளை அடையாளம் காணக்கூடிய அடர்ந்த பற்றைகள். ஒவ்வொரு நிலைகளுக்கு மிடையே ஏகப்பட்ட தூரம். பயங்கரமான காட்டின் நடுவுக்குள்ளே சண்டை நடைபெற்றுக் கொண்டிருந்தது.

ஒரு நிலையில் நின்று சண்டை பிடிப்பவரின் நிலையை, அவர்களின் தேவைகளைக் கூட மற்ற நிலையில் நின்று சண்டை பிடிப்பவர்கள் அறிய முடியாதிருந்தது. உதவிக்கென யாரும் வரமுடியாத அளவுக்கு நெருக்கடியான சண்டை. நீலாம்பரியின் நிலையில் உக்கிரமான சண்டை. அவளுக்குப் பக்கத்து நிலை வெகுதூரம் – காட்டுக் கத்தலாய் கத்தினால் சிலவேளை அடுத்த நிலைக்கு மெலிதாக கேட்கலாம். அவள் தனியே நின்று சண்டை பிடித்துக்கொண்டிருந்தாள். தனது ரவைகள் முடியுமட்டும் சண்டை செய் கொண்டிருந்தாள்.

ரவை முடிந்தால் என்ன செய்வது? யாரையும் உதவிக்கு கூப்பிடுவதற்கும் வாய்ப்பில்லை. ஆனால், பலமாக நடைபெற்றுக்கொண்டிருக்கும் அந்தச் சண்டைக் களத்தை விட்டுச் செல்வதற்கும் அவள் தயாரில்லை. ஒரு சிறு பகுதி பலவீனமாக இருப்பினும், இராணுவம் எம் சுற்றிவளைப்பிலிருந்து தப்பிச் செல்கின்ற நிலை ஏற்படலாம்.

ஒரு கணப்பொழுதில் தனது குப்பியை வெளியே எடுத்து விட்டுக்கொண்டாள். இருக்கின்ற ரவைகளை ஒவ்வொன்றாக அவ்தானமாக இலக்கு நோக்கி செலுத்தத் தொடங்கினாள். இடைவிடாதபடி சண்டை நடைபெற்றது. இராணுவம் தான் கொண்டுசென்ற எறிகணைகளைத் தாராளமாக ஏவிக் கொண்டிருந்தது. மூர்க்கத்தனமான சண்டைக்களம். சில மணித்தியாலங்களின்பின் நாங்கள் உதவி அணியாகப் போய்க் கொண்டிருந்தோம். சிறிது தூரத்தே கனரக ஆயுதம் ஒன்று எதிரியின் இலக்கு நோக்கி தனியாக இயங்கிக்கொண்டிருந்தது. அந்தப் பற்றையின் ஒரேயொரு வீரை மரத்தினைப் பாதுகாப்பாகக் கொண்டு அவள் சண்டை பிடித்துக் கொண்டிருந்தாள். முகத்தின் வியர்வைத் துளிகள் சாக்குத் தொப்பிக்குள்ளால் வழிந்தபடி இருக்க, அந்த நிதானமும் தனித்த உறுதியும் அவளிடம் வெளிப்படையாக தெரிந்தது. அவளின் நிதானமும் உறுதியும் அந்தச் சண்டையை வெற்றிச் சண்டையாக்கியது.

மன்னகுளச் சண்டையின் கதாநாயகி... அல்ல, அல்ல களநாயகியாக எங்கள் கண்களுக்கு அவள் தெரிந்தாள். அன்னையாய் தந்தையாய் எழுந்த அந்தப் பெருவீரனின் கைகளால் பரிசு கொடுக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டாள். நேற்று அவள் காவியமானாள். ★

www.tamilarangam.net






பசித்திட்டால் ஓரிடம் படுத்திட ஓரிடம்
பாடி மகிழ்ந்திட ஓரிடம் கண்டுவிட்டோம்–பாரிலின்று.
வாழவழிகாட்டியவள் வாடுகிறாள் அங்கே
வாய்விட்டு அலறுகிறாள் வயிற்றுக் கஞ்சிக்கு
நெல்லுகள் மட்டுமா புல்லுகளாயின–எம்
சந்ததி கூட இன்று சரிந்த சிற்பங்கள்
கைகட்டி, வயிற்றுக்கு வழிதேடலை மறந்து
சுதந்திரவழி தேடி வாழ்ந்திட எழுக தமிழினமே!

- கௌசிக் நோர்வே.

வேளையிது உனக்கு வேறென்ன வேலை இங்கு
எழுந்திடு தாயகம் காக்க துணிந்திடு தமிழா!
உன் இனம் கூனிக்குறுகி அடிமையாவதோ?
தமிழ் மண்ணில் தினம் ஒருகுழந்தை
இறக்கின்றதே
இன்னும் இரக்கமில்லையா உனக்கு
காவிய நாயகர் கரங்களுக்கு கைகொடுப்போம்
கணமேனும் தாமதியாதே எழுந்திடு தமிழா!

- திருமதி சாரதாதேவி மகேந்திரன்.

எண்ணத்தில் ஒருமித்து
எழுக தமிழா–நம்
மண்தனை மீட்டிட
வருக தமிழா
திண்ணமாய் திரண்டு–நம்
மன்னவன் வழிசெல்ல
எழுக தமிழா! எழுக தமிழா!

- திருமதி ராஜேஸ்வரி லோகநாதன்
யேர்மனி.

கண்களில் தூக்கமில்லாமல்
கைகளில் ஓய்வில்லாமல்
கால்களில் தளர்வில்லாமல்.
உடலில் சோர்வில்லாமல்
உள்ளத்தில் சலிப்பில்லாமல்
படைநடத்தும் எங்கள் வீரர்க்காய்
எழுக தமிழா எழுக!
ஈண்டு ஈகை செய்க!

- திருமதி விஜயநாதன் யேர்மனி.

தாத்தாவும் பாட்டியும் தவழ்ந்த மண்ணிலே–உன்
தந்தையும் மிதக்கிறார் குருதி வெள்ளத்திலே
நெல்லும் மணியுமாய் விளைந்த நிலத்திலே–உன்
சகோதரர் நிற்கிறார் போர்க்களத்திலே
வீரப்பால் குடித்த தமிழனே!
தூக்கம் ஏன் இன்னும் உன்னிடத்திலே
கோழையென்றுன்னை அன்னை கூறுமுன்
எழுந்திடு! ஈழத்துக்கு உன் தோளைக் கொடுத்திடு!

- சந்திரவதனா செல்வகுமாரன்
யேர்மனி.

# எழுக தமிழா.....

இனமான உணர்வுள்ள
இனிய எம் மனிதங்களே
இன்னும் ஏன் தாமதம்?
ஈனப் படைகளின் இனவழிப்பால்
இன்னலுறும் எம்மினத்தின் இடர்நீங்க
நல்ல சமயமிது நழுவவிடல் நியாயமில்லை
மேன்மைமிகு தலைவன்வழி பற்றிடுவோம்.

-சங்கையூரான் யேர்மனி.

வெற்றுடலும் வறுமை பிணியும்
வதைக்குது எந்தையர் நிலத்தை
சிதைப்பவன் குவிந்து நெரிக்கிறான் பார்.....
எத்தனை நாட்கள் ஏதிலியாய்
தங்குவாய் அந்நிய நிலத்தில்
செங்களத்தில் குருதி சிந்திடும் வேங்கைகள் –
செருக்கரை அடக்கிட எழுக நீயும் தமிழா.

- கரவை கலர் யேர்மனி.

செந்தமிழா உன் மண்
செந்நீரால் நனையுதடா
எம்மவர் ஆண்ட ஈழக்கடலிலே
எம்மினத்தின் குருதி கலக்குதடா
காலமெல்லாம் நாம் காத்தநெறி
கயவரினால் கசங்குதடா
எட்டிநின்று பார்க்காதே
எழுந்திடு தமிழா இக்கணமே!

- திருமதி சிவனேஸ்வரி றொபேட்கெனடி
டென்மார்க்.

எழுக தமிழா!
நழுவ விடலாமா
நல்ல இத்தருணத்தை
கடந்துவந்த பாதைகளை
கருணையுடன் பார்த்திடுவோம்
சூரியன்போல் ஓர்தலைவன்
எங்களுடன் இன்றிருக்க
காரியங்கள் பாராமல் காலமெல்லாம்
கழிப்போமா?

- கோமதி முருகப்பன்
இங்கிலாந்து.

உறவுகளே....
பகைவனை நிம்மதியாக உலவவிட்டு
நாங்கள் மட்டும் ஏன் அகதியாய்.....?
பிஞ்சுடன் பூக்களும் செருக்களம் ஆடும்போது
நீங்கள் உறங்குவது என்னதான் நியாயம்?
இனியும் உறங்கினால் வரலாறு மன்னிக்காது
தலைவன் வழிகாட்டுகின்றான்....
விரைக தமிழா....விரைக!

- சோ. மதீஷன் யேர்மனி.

அலைந்தது போதும்
அகதியாய் உள்நாட்டில்
தொலைந்தது போதும்–நம்
இயல்புகள் வெளிநாட்டில்
உலைந்தது போதும்
உறவுகள் பலநாட்டில்
இப்போதாயினும் கனவுகள் கலைந்து
எழுக தமிழா...

- அமலா ஜெயந்தன்.

சூரியப்புதல்வன் செய்த
சிந்தனைப் புரட்சியினால்
பாரினில் தமிழரெல்லாம் என்றோ
விழித்துக்கொண்டார் – இன்னும்
ஓரிரு சிலபேர் மட்டும்
உறக்கத்தின் பாவனையில் – எங்கள்
காரியம் ஆனபின்பே இவரும்
கண்களை திறந்து கொள்வார்!

- பரதன் இலண்டன்

ஆக்கங்கள் அபிப்பிராயங்கள் அனுப்பிய
அனைவருக்கும் நன்றி

www.tamilarangam.net



# தாயகம் நோக்கிய பயணம்

## முதலாம் பாகம்

### அத்தியாயம் இருபத்தியிரண்டு

(தொடர்ச்சி)



**எ**ப்போதும் சொற்பொழிவுகளும் விவாதங்களும் நடந்த வண்ணம் இருந்தன. சேரியுள் ஒரு புதினப் பத்திரிகை வெளிவந்து கொண்டிருந்ததோடு சேரிப்பணம் சாமான்களை வாங்க விற்கக் கூடியதாக சட்டபூர்வ சாதனமாயிற்று. இரகசிய மதச்சடங்குகள் நிறைவேற்றப்பட்டன. இப்படியான மதச்சடங்குகள் நிறைவேற்றத்திலும் மற்றைய நடவடிக்கைகள் தொடர்ந்து நடக்க வைப்பதிலும் மீட்பாளர் குழு முக்கிய பங்கு வகித்தது. டொவ் மீட்பாளர் குழுவின் நடவடிக்கைகளில் முக்கிய தீவிர பங்கேற்க விரும்பினாலும் அவனால் பெற்றுக்கொள்ளக்கூடிய கல்வியைப் பெற்றுக்கொள்ள மற்ற 'லன்டவ்' குடும்ப அங்கத்தவர்களால் வற்புறுத்தப்பட்டான்.

**1941 பங்குனி**

போலந்தைக் கைப்பற்றி 18 மாதங்களுக்குப் பிறகு யூதர்களின் பிர்ச்சினைக்கு இறுதித் தீர்வொன்று அடொல்ப் கிட்லரினால் (ஜேர்மன் சர்வாதிகாரி) கையளிக்கப்பட்டது. இந்த உத்தரவு வாய் மூலமாகவே வந்தது. 6 வாரங்களுக்கு பிறகு எஸ்.எஸ்.எஸ்.டி மற்றும் நாசி அதிகாரிகட்காக குறொஸ்வான்சியில் நடந்த இரகசியக் கூட்டமொன்றில் எஸ்.டி இன் தலைவனான கெயிற்றிச், தங்கள் தலைவனின் (Fuhrer) –கிட்டத்தட்ட சக்கரவர்த்தி என்று பொருள்படும் முடிவை வெளியிட்டான்.

இன ஒழிப்புத்தான் அந்த இறுதித் தீர்வு. மீள் குடியமர்த்தல் நிபுணனான எஸ்.எஸ்.கேணல் ஈச்மன் ஐரோப்பாவில் இருந்து யூதர்களை ஒழித்துக்கட்டும் வேலைக்குப் பொறுப்பாக நியமிக்கப் பட்டான்.

சில மாற்றங்களுக்கிடையில் இன்சறீஸ் கொமாண்டோஸ் அதாவது துரித நடவடிக்கை அதிரடிப்படையினர் – இன்சறீஸ் குறூப்பென் எனப்பட்ட விசேட நடவடிக்கைக் குழுக்களாகச் செயலில் ஈடுபடுத்தப்பட்டனர். அவர்கள் தங்கள் இன ஒழிப்பு வேலைக்காக போலந்து பால்டிக் நாடுகள், ஆக்கிரமிக்கப்பட்ட ரஸ்யப் பகுதிகள் எங்கும் பிரவேசித்தனர். இந்த விசேட நடவடிக்கைக் குழுக்களின் செயற்பாடுகள் ஆரம்பத்தில் ஒரு குறிப்பிட்ட வடிவத்தில் இருந்தன. யூதர்களைச் சுற்றி வளைத்துப் பிடித்து ஒரு தனிமையான இடத்திற்குக் கொண்டு சென்று அவர்களைக் கொண்டே அவர்களுக்கான சவக்குழியை வெட்டச் செய்வர். அவர்களின் ஆடைகளைக் கலைந்து விட்டு அந்தக் குழிகளின் அருகில் மண்டியிட்டு இருக்கப்பண்ணித் தலையிற் சுட்டுக் கொன்றனர்.

விசேட நடவடிக்கைக் குழுக்களின் செயற்பாடுகள் ஆரம்பத்தில் ஒரு குறிப்பிட்ட வடிவத்தில் இருந்தன. யூதர்களைச் சுற்றி வளைத்துப் பிடித்து ஒரு தனிமையான இடத்திற்குக் கொண்டு சென்று அவர்களைக் கொண்டே அவர்களுக்கான சவக்குழியை வெட்டச் செய்வர். அவர்களின் ஆடைகளைக் கலைந்து விட்டு அந்தக் குழிகளின் அருகில் மண்டியிட்டு இருக்கப்பண்ணித் தலையிற் சுட்டுக் கொன்றனர். இரண்டே நாட்களில் 30,000 யூதர்கள் சுற்றிவளைக்கப்பட்டு பெரும் குழிகளில் சுட்டுத் தள்ளப்பட்டார்கள்.

இந்த விசேட நடவடிக்கைக் குழுக்களின் வெறியாட்டத்தின் உச்சக் கட்டம் ரஜ்ய நகரமான கிவ் இன் புறநகர் பகுதியான பபியார் இல் அரங்கேற்றப்பட்டது. இங்கே இரண்டே நாட்களில் 30,000 யூதர்கள் சுற்றி வளைக்கப்பட்டு பெரும் குழிகளில் சுட்டுத் தள்ளப்பட்டார்கள்.

இன்சறீஸ் குறூப்பென் இந்த விடயத்தில் மாபெரும் வெற்றியைப் பெற்றது. ஏனெனில் உள்ளூர்வாசிகளிடமிருந்து இதற்கு எதிர்ப்புக் கிளம்பாதது மட்டுமல்ல, ஓரளவுக்காவது யூதர் களைப்பற்றி யேர்மனியர்கள் கொண்டிருந்த அதே அபிப்பிராயங்களை அவர்களும் பகிர்ந்து கொண்டிருந்தனர். பபியாரில் நடந்த இனப்படுகொலை, அதை ஆமோதிப்பது போலிருந்த யூக்ரோனியர்களின் ஆரவாரங்களிடையே நிகழ்த்தப்பட்டது.

இந்த இன்சறீஸ் கொமாண்டோக்களின் வேகம், இனஒழிப்புக்கான பிரதான திட்டத்தின் எதிர்பார்ப்புகளுக்கு காணாதது போல தோன்றியது. சுடுவது மிகவும் மெதுவானதும் அசிங்கமான வழியும்போல் அவர்களுக்குத் தோன்றியது மட்டுமல்லாமல், யூதர்கள் பட்டினியால் பெரியளவில் செத்துத் தொலையவுமில்லை. ஈச்மன், போல் புளொபெல், கிம்லர் ஸ்றெய்ச்சர் மற்றும் டசின் கணக்கான வேறு நாசி உயர் அதிகாரிகளும் சேர்ந்து ஒரு மாபெரும் திட்டம் ஒன்றைத் தீட்டினர். இத்திட்டப்படி ரயில் பாதைகளுக்கும், யூதர்களைக் குடியமர்த்தியிருந்த இடங்களுக்கும் அருகே நடமாட்டமற்ற இடங்கள் கவனமாக தெரிவு செய்யப்பட வேண்டியிருந்தது. இந்த இடங்களில் நிறுவப்படும் முகாம்கள் தலைசிறந்த பொறியியலாளர்களால் வடிவமைக்கப்பட்டு குறைந்த செலவில் விரைவாக ஒரு தொழிற்சாலையில் இயந்திரங்கள் இணைக்கப்படும் வேகத்திற்கு ஒத்ததாக இனப்படுகொலைகள் நிகழ்த்தப்படக் கூடியதாக இருக்கவேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

யேர்மனுக்குள்ளேயே நிறுவப்பட்டிருந்த இவ்வகைச் சித்திரவதை முகாம்களில் பணியாற்றி அனுபவம் வாய்ந்தவர்களை இம்முகாம்களில் பணியாற்றச் செய்வதெனவும் முடிவாயிற்று.

**1941 முன்பனிக்காலம்.**

வார்சோவின் யுதசேரி, பாபியார் மரணங்களை விட மோசமானவற்றைக் கண்டது. 10, 100, 1000 என ஆட்கள் குளிரில் உறைந்தும் பட்டினியாலும் மடிந்தனர். அழுவதற்குக்கூட சக்தியில்லாமல் குழந்தைகள் நூற்றுக் கணக்கிலும் செபிக்கக்கூட சக்தியில்லாமல் வயோதிபர்கள் நூற்றுக்கணக்கிலும் செத்து மடிந்தனர். ஒவ்வொரு காலையிலும் யூதசேரியின் தெருக்களில் புதிய சடலங்கள் கிடக்கும். சுகாதாரக் குழுக்கள் காலைவேளைகளில் தெருக்களினூடே சென்று இறந்து கிடந்த சடலங்களை வண்டிகளில் அடுக்கித் தள்ளிச் செல்வர். பச்சிளங்குழந்தைகள் சிறுபிள்ளைகள் பெண்கள் ஆண்கள் யாவருமே தள்ளுவண்டிகளில் அடுக்கப்பட்டு எரிப்பதற்காக தகன மையங்களுக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

டொவ்வுக்கு அப்போது 11 வயது. மண்டெக்கின் பேக்கரி மூடப்பட்டு விட்டதால் பாடசாலை செல்வதை விட்டுவிட்டு உணவு தேடித்திரியத் தொடங்கினான். "மீட்பாளர்கள் குழு"வைப் போன்றவர்களுக்குக் கூட பிரச்சினை உருவாகியிருந்தது. யூதசேரி ஒன்றில் எப்படி உயிர் வாழ்வதென்று தந்திரங்கள் டொவ்வுக்கு கை வந்த கலை ஆகின. அவனொரு தந்திரமான மிருகத்தின் உள்ளுணர்வோடு ஊடாடி உற்றுக் கேட்டுச் செயற்பட்டு வந்தான். லன்டவ் குடும்பத்தினரின் அடுப்பு பலநாட்கள் எரியவே இல்லை. எப்போதாவது மீட்பாளர் குழுவினரோ அல்லது குடும்பத்தவரோ உணவைப் பெற்றுக்கொள்ள முடியாதிருக்கும் போது, லியா தான் சேமித்து ஒளித்து வைத்துக் கொண்டிருந்த நகைகளில் ஒன்றை உணவுக்காக வெளியில் எடுத்து பண்டமாற்றுச் செய்து விடுவாள்.

அதுவொரு நீண்ட கொடூரமான முன்பனிக்காலம். ஒருமுறை தொடராக 5 நாட்கள் லன்டவ்கள் உணவின்றி இருந்தபின் லியா எப்படியோ ஒரு வேளை உணவை தயார் படுத்திமிருந்தாள். ஆனால் அவள் விரல்களிலிருந்த திருமண மோதிரம் காணமற் போயிருந்தது.

**லியோன் யூறிஸ்**

தொடரும்...


## வாசகர் கவனத்திற்கு !

இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ள தலைப்பிற்குப் பொருந்தக்கூடிய வகையில் எட்டுவரிகளுக்கு மேற்படாமல் உங்கள் சிந்தனையில் எழும் கருத்துக்களை கவிதை வடிவில் தாருங்கள். உங்கள் ஆக்கங்களை **03- 07 - 1998** இற்கு முன்பாக எமக்குக் கிடைக்கக்கூடியவாறு கீழ்தரப்பட்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

இதுவே சந்தர்ப்பம்...

கவிதை அனுப்ப வேண்டிய முகவரி:

**'Kalathil',**

**Eelam House, 202Long Lane, London SE1 4QB.**


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இராணுவத்தின் கைமீறிச் செல்லும் வடக்கு - கிழக்கு யுத்தமுனை!

சிறீலங்கா இராணுவம் தனது அண்மைய வரலாற்றில் என்றுமில்லாததொரு நெருக்கடியான காலகட்டத்தில் நிற்கின்றது என்பது மிகையான கூற்றோ அன்றி தவறானதொரு மதிப்பீடோ அல்ல. சிறீலங்கா அரசும், இராணுவத்தரப்பும், போர் ஒரு முடிவுக்கு வரவுள்ளது எனப் பிரச்சாரம் செய்து கொண்டிருக்கையில், இவ்வாறானதொரு கருத்தை வெளியிடுவதோ அன்றி முன்வைப்பதோ பலருக்குத் தவறானதாகப்படலாம். ஆனால், உண்மையில் சிறீலங்கா இராணுவம், முன்னும் – பின்னும் நகர முடியாத ஒரு பொறியினுள் சிக்கித் தவிக்கிறதென்பதே யதார்த்த நிலையாகவுள்ளது.

> *"வரலாற்றிலேயே என்றுமில்லாதவாறான தோல்விக்கு நாம் முகம் கொடுக்க வேண்டி நேரிட்டமை, முல்லைத்தீவு முகாம் அழிக்கப்பட்டமையாலேயாகும்."*
> *"சமகாலத்தில் எந்தவொரு இராணுவமும், பாரிய வனாந்தரத்திற்குள் இருக்கும் நூறு கிலோமீற்றர் நீளமான பாதையைப் பாதுகாக்க முயற்சிகளை மேற்கொள்ளாது. இது தொடர்பாக இந்தியாவையோ அன்றி அமெரிக்காவையோ கேட்டால் இது ஒரு பைத்தியக்காரத்தனம் என்பர்"*
>
> **– ரணில் விக்கிரமசிங்க**

1995இல் மூன்றாம் கட்ட ஈழப்போர் ஆரம்பித்தபோது சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான பாதுகாப்பு அமைச்சு, ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் இரண்டாம் கட்ட ஈழப்போரில் கடைப்பிடித்த யுத்த மூலோபாயத்தை, "மாட்டை வண்டிலின் பின்னால் கட்டுவது போன்றது" எனப் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த கிண்டலடித்தார்.

இதேசமயம், "புலிகளின் தலையை நசுக்குவதன் மூலம் வால் பாகம் செயலிழக்கும்" என்றார்.

இதன் அடிப்படையில் யுத்தத்திற்கான மூலோபாயமும் வகுக்கப்பட்டது. இதன் அடிப்படையில், விடுதலைப் புலிகளின் 'தலைப்பகுதி என வர்ணிக்கப்பட்ட யாழ். குடாநாட்டின் மீது படையெடுக்கவும் பட்டது. இப்படையெடுப்பானது, யுத்தத்தின் பெரும் பகுதியை முடிவிற்குக் கொண்டுவந்து விடும் என அரசாங்கத்தரப்பினால் கருதவும்பட்டது.

ஆனால் யுத்தமானது, சந்திரிகா அரசு எதிர்பார்த்த மாதிரிச் செல்லவில்லை. தமிழர் தாயகத்தின் இருதய பூமியாகக் கருதப்படும் வன்னிப் பெருநிலப்பரப்பு சந்திரிகா அரசின் யுத்த மூலோபாயம் – தந்திரோபாயம் இரண்டையும் கேள்விக்குரியதாக்கியுள்ளது. உண்மையில் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிடுவது போல், "ரிவிரெச நடவடிக்கையின் பின் யுத்தமானது வன்னிக்குப்போய் கொழும்பிற்கு வந்தது. ஆனால், 'ஜெயசிக்குறுய்' நடவடிக்கையின் பின்னர் யுத்தமானது முழு இலங்கைக்கும் பரவியுள்ளது" எனலாம்.

மறுவழமாக இதனைக் கூறுவதானால், விடுதலைப் புலிகளின் தலைப்பகுதியை நசுக்க முற்பட்ட சந்திரிகா அரசு – தனது தலைப்பகுதியைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவும், தனது இதயப் பகுதியில் அடிவிழாது பார்த்துக் கொள்வதற்காகவும் பெரும் பிரயத்தனங்களை மேற்கொள்ளவேண்டி ஏற்பட்டுள்ளது.

இத்தனைக்கும் சிறீலங்கா இராணுவம் ஓர் திறமையற்ற – வசதிகள் அற்ற இராணுவம் என்று கூறுவதற்கில்லை. சிறீலங்கா இராணுவத்தரப்பினரே தம்மை இஸ்ரேல் இராணுவம் போன்று நன்கு பயிற்றப்பட்ட இராணுவத்திற்கு ஒப்பிட்டுப் பேசுவதுண்டு. இதனைத் தவறானதொன்றாகவும் பெரிதும் மிகைப்படுத்தப்பட்டதொன்றாகவும் கருதிவிட முடியாது.

ஒருபுறம், சிறீலங்கா இராணுவம் உள்நாட்டிலும், வெளிநாட்டிலுமாக பெரும் பயிற்சி பெற்றதொன்றாக மாறியுள்ளது. இப்பயிற்சிகள் மரபுவழிப்போர், கெரில்லாப் போர் போன்றவற்றில் பெரும் அனுபவம் பெற்ற அமெரிக்கா, இஸ்ரேல் போன்றவற்றில் இருந்துகூட பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அத்தோடு, சுமார் 15 வருடங்களுக்கு மேலாக போராடும் அனுபவம் கொண்டதாகவும், தேவைக்கேற்ற விதத்தில் அரசின் நிதியும், ஏனைய வசதிகளும் கிடைக்கப்பெற்ற இராணுவமாகவும் உள்ளது. இதன்மூலம் நவீன ஆயுத தளபாடங்களையும் அதனால் பெற்றுக்கொள்ள முடிகிறது. இந்த வகையில், சிறீலங்கா இராணுவத்தின் போரிடும் வலுவை எவருமே குறைத்து மதிப்பிட முடியாது.

அவ்வாறு இருந்தும் கடந்த இரண்டு ஆண்டிலும் சிறீலங்கா இராணுவம் சந்தித்த தோல்விகள் பல்வேறுபட்டவையாகவும் – சிறீலங்கா இராணுவ வரலாற்றிலும் – உலக இராணுவ வரலாற்றிலும் குறிப்பிடத்தக்க வரலாற்றுப் பதிவுகளாக இடம்பெற்றனவாகிவிட்டன. அதாவது, புலிகளுடனான போரை இராணுவத்தால் தனது மூலோபாயத்திற்கு ஏற்ப நகர்த்திச் செல்ல முடியவில்லை என்பது மட்டுமல்ல – புலிகளின் போர்முறை யுக்திகளுக்கும் அவர்களால் ஈடுகொடுக்கவும் முடியவில்லை.

கடந்த இரண்டு வருட காலத்திற்குள் புலிகள் பல வகையிலான நோக்கில் அமைந்த தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். விடுதலைப் புலிகளின் இன்றைய தாக்குதல்கள், தாயக நில மீட்பு, எதிரிகளை அழித்தொழித்தல், எதிரியின் படைநடவடிக்கையை முறியடித்தல் என்ற ரீதியில் அமைந்துள்ளன. அதேபோன்று களநிலைக்கு ஏற்ற வகையிலும் தமது பலத்திற்கு ஏற்றவகையிலும், போர் யுக்திகளைக் கைக்கொண்டுள்ளனர். இந்தவகையில், சிலசமயம் மரபுப் படையணி போன்றும், சிலசமயம் கெரில்லாப்படையணி போன்றும் சிலசமயம், கெரில்லாப் படையணியில் இருந்து சிறிது மேம்பட்ட அளவிலும் தமது யுக்தியை வகுத்துக் கொண்டுள்ளனர்.

மூன்றாம்கட்ட ஈழப்பேரில் புலிகளின் முனைப்பான நடவடிக்கை முல்லைத்தீவுப் படைத்தளம் மீதான தாக்குதலுடன் ஆரம்பமானது. இந் நடவடிக்கை ஒருபுறம் ஓர் அழித்தொழிப்பு நடவடிக்கையாக அமையப் பெற்ற அதேவேளை, ஓர் நிலமீட்பு நடவடிக்கையாகவும் இருந்தது. இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் உலக இராணுவ வரலாற்றில் முதன்மை பெற்ற தாக்குதலில் ஒன்றாக மதிப்பிடப்படும் இத்தாக்குதலை – வியட்நாமில் பிரெஞ்சு இராணுவத்திற்கு 1953இல் இயன்பியன் பூ நகரத்தில் ஏற்பட்ட தோல்விக்கு ஒப்பிட்டுப் பேசப்படுகின்றது. இத்தாக்குதலில் 1300க்கு மேற்பட்ட சிறீலங்கா இாணுவத்தினர் கொல்லப்பட்ட அதேவேளை, பெரும் அளவினதான ஆயுததளபாடங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டது. பெரும் பிரதேசம் ஒன்றும் விடுவிக்கப்பட்டது.

இவ்வாறான நடவடிக்கையை ஒத்ததே கிளிநொச்சி நகர் மீது விடுதலைப் புலிகளால் இவ்வருடம் பெப்ரவரி மாத ஆரம்பத்தில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலும் ஆகும். இத்தாக்குதல் முல்லைத்தீவு முகாம் மீதான தாக்குதல் அளவுடன் ஒப்பிடுகையில் சிறியதாயினும் – மேற்கொள்ளப்பட்ட காலகட்டம், பிரதேசம் என்ற ரீதியில் முதன்மை பெறுகின்றது. இத்தாக்குதலானது, சிறீலங்கா இராணுவத்தின் மீது பெரும் அழுத்தம் ஒன்றைக் கொடுத்ததாகவும் உள்ளது.

அடுத்ததாக, கடந்த ஆண்டில் பல வெற்றிகரமான ஊடறுப்புத் தாக்குதல்கள் விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்பட்டன. 1997 ஜனவரியில் ஆனையிறவு – பரந்தன் படைத் தளங்கள்மீது மேற்கொள்ளப்பட்ட ஊடறுப்புத் தாக்குதலில் இருந்து, கரப்புக்குத்தி – விஞ்ஞானகுளம் வரையிலான பல ஊடறுப்புத் தாக்குதல்கள் இதில் அடங்குகின்றன. இதில் தாண்டிக்குளம், பெரியமடு, ஓமந்தை ஆகிய பகுதிகளில் ஜெயசிக்குறுய் துருப்புக்கள் மீது நடத்தப்பட்ட ஊடறுப்புத் தாக்குதல்களும் அடங்குகின்றன.

இவ்வாறான ஊடறுப்புத் தாக்குதல்கள் ஒவ்வொன்றிலும் நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் கொல்லப்பட்டதோடு, பல நூற்றுக்கணக்கான துருப்புக்கள் காயமும் அடைந்துள்ளனர். மேலும் பெருந்தொகை இராணுவத் தளபாடங்கள் புலிகளினால் கைப்பற்றப்பட்டும், அழிக்கப்பட்டும் போயுள்ளது.

மேலே கூறப்பட்ட புலிகளின் இருவகைத் தாக்குதல் நடவடிக்கைகளும் ஒருபுறம் கெரில்லாப்படை நடவடிக்கையாகவும், மறுபுறம் மரபுப்படை நடவடிக்கையாகவும் இரண்டும் கலந்த மாதிரியில் அமைந்ததாகவும் இருக்கையில் – மூன்றாவது வகை நடவடிக்கையாக – 'ஜெயசிக்குறு' துருப்புக்களின் நகர்வு முயற்சியை முறியடிக்கும் நடவடிக்கைகள் பெரும்பாலும் மரபுப் படையணிகளின் செயற்பாட்டை ஒத்ததாக இருந்தது.

ஜெயசிக்குறுய் படை நடவடிக்கையை சிறீலங்கா ஆரம்பித்ததில் இருந்து புலிகள் சிறீலங்கா இராணுவத்தினரின் நகர்வு முயற்சிக்கு எதிரான பல பதிலடி நடவடிக்கைகளை மேற்கொண்டே வந்தனர். இதில், இராணுவத்தினரின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்துதல் என்ற வகையிலும் இராணுவத்தினர் ஊடுருவிய பகுதிகளில் இருந்து துரத்தியடித்தல் என்ற ரீதியிலும் அமைந்த தாக்குதல்கள் இருந்தன. இவ்விரண்டு தாக்குதல்களின் போதும் பெரும்பாலும் மரபுப் படையணிகளின் செயற்பாட்டை ஒத்த ரீதியிலேயே விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் இருந்தன. இவற்றிற்கு புளியங்குளம், கனகராயன்குளம் பகுதிகளில் இராணுவத்தினரின் முன்னேற்றத்தை பல மாதங்களாகத் தடுத்து நிறுத்திப் போரிட்டமையும், புதூர்ச்சந்தி, கனகராயன்குளம் பகுதிகளில் இராணுவம் ஊடுருவியபோது பதிலடி மூலம் விரட்டியடித்தமையையும் சுட்டிக்காட்ட முடியும்.

இதன் அடுத்த கட்டமாக, சிறீலங்கா இராணுவத்தின் நகர்வு முயற்சியை மரபுப் படையணிக்கே உரிய ரீதியில் முறியடித்துள்ளமை அமைகின்றது. இதன் முதல் நடவடிக்கையாக கடந்த ஆண்டு டிசம்பரில் மன்னகுளத்திலும் – கனகராயன்குளத்திலும் இடம்பெற்றது. இதில் சிறீலங்காவின் விசேட கொமாண்டோப் படையணியே சிதறடிக்கப்பட்டது. அதன் பின்னர் இவ்வாண்டில், மூன்றுமுறிப்புப் பகுதியிலும், ஒலுமடுப் பகுதியிலும் இடம்பெற்றுள்ளது. புலிகளின் இந்நடவடிக்கையானது, புலிகள் ஓர் மரபுப் படையணிக்குரிய பண்புகளை விரைவாகவே பெற்றுச் செல்வதையும், வளர்ந்து செல்வதையுமே காட்டுகின்றது என்று மதிப்பிட வைக்கிறது.

இந்த நிலையில், சந்திரிகா அரசாங்கம் யுத்தம் இன்னும் சில மாதங்களில் முடிவடையும் – இவ்வாண்டிற்குள் முடிவடையும் எனக் காலக்கெடுக்களை விதித்துக் கொண்டிருந்தாலும் சரி – 90 வீதத்திற்குமேல் யுத்தம் முடிவடைந்துவிட்டது. யுத்தத்தின் இறுதிக்கட்டம் நடந்து கொண்டு இருப்பதாகக் கூறிக் கொண்டாலும் சரி யுத்தத்தின் போக்கும், பரிமாணமும் சிறீலங்கா அரசின் கைமீறிவிட்டதொன்றாக

> வீடுதலைப் புலிகளின் இன்றைய தாக்குதல்கள், தாயக நில மீட்பு, எதிரிகளை அழித்தொழித்தல், எதிரியின் படைநடவடிக்கையை முறியடித்தல் என்ற ரீதியில் அமைந்துள்ளன. அதேபோன்று களநிலைக்கு ஏற்ற வகையிலும் தமது பலத்திற்கு ஏற்றவகையிலும், போர் யுக்திகளைக் கைக்கொண்டுள்ளனர். இந்தவகையில், சிலசமயம் மரபுப் படையணி போன்றும், சிலசமயம் கெரில்லாப்படையணி போன்றும் சிலசமயம், கெரில்லாப் படையணியில் இருந்து சிறிது மேம்பட்ட அளவிலும் தமது யுக்தியை வகுத்துக் கொண்டுள்ளனர்.

தொடர்ச்சி 05 ம் பக்கம்......

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இதுதான்: இப்படித்தான் எங்களுக்குள்ளேயும் கோபம் எரிகிறது.

தலதா மாளிகை.
வெறும் கல்லாலும் மண்ணாலுமான கட்டிடமல்ல,
ஒரு இனத்தினதும், மதத்தினதும்
உயிரும், உணர்வும் கலந்த உயிர்க்கூடு.
சிங்களச் சிரசின் சொர்ணமுடி.
புத்தமதத்தின் பொற்கோவில்.
பட்டத்துயானையே பணிந்தேற்றும் பாதக்கமலம்.
சிங்கபுரியைச் சிங்களர் ஆண்டாரென்பதைக்
காலம் காலமாகக் கட்டியம்கூறும் தந்தமாளிகை.
பௌத்தனொருவன் தன்னுயிரினும் மேலாகப்
பாதுகாக்க நினைக்கும் புதையற் பொக்கி/ம்.
வெளிச்சுவரில் சின்ன வெடிப்பேற்பட்டாலே....
அழிவு வந்துறுமெனப் பதறும்
நம்பிக்கையின் து/லவடிவம்.
சிங்கள மன்னர்கள் சிம்மாசனமேறியதும்
சந்திரவட்டக் கற்களில் தலைசாய்த்து நிற்பர்.
அந்தளவு பிணைப்பு.
உள்ளே புகும்போதில் பௌத்தனொருவனுக்கு
நரம்புகறீடே ஒளியு+றி உயிர்கிறங்கும்.
மகாவம்சத்தின் மந்திரக்கோவில்.
கண்டிக்கு வனப்பு+ட்டும் கலைக்கூடம்.
யாரெனிலும் பணிந்தேற்றக்கூடிய
பேரெழிற்புரம்.
சிங்கள இனத்தின் சொர்ப்பன மாளிகை மீதுதான்
எங்கிருந்தோ வந்திடித்தது இடியன்.
உள்ளே வெடிசுமந்த ஊர்தி வெடித்ததும்
வெள்ளைமண்டபம் விதிர்விதிர்த்துப் போனதாம்.
உலகம் ஒரு கணம் இருண்டதாம்.
உயிர்மீது எவர்வந்து இடித்தார்களென்று
'சித்தார்த்த கூடம்' திணறியதாம்.
உடலைக்கிழித்து உள்ளே கைவிட்டு
இதயத்தைப் பிடித்து நசித்தது எவர் கைகள்?
அத்தாணி மண்டபத்து அழகிய து/ண்களை
அடித்து நொருக்கியது யார்?
பொன்னோடு வேய்ந்த புனிதத்தின் வாழ்விடத்தில்
கண்வைத்திடித்தவர் எவர்?
'தர்மம்' வந்திடித்ததெனிலும் தண்டிப்போம்.
'வினைப்பயனே' வெடிசுமந்து வந்ததெனிலும்
கண்டிக்க வேண்டிய கைங்கரியமென்று
தமிழர்களைத் தாக்கியது 'சாந்தமார்க்கம்.'
புலிகள்மீது மீண்டுமொரு பழி.
பழிசுமக்கவே பிறந்தவரானார்கள் புலிகள்.
மேட்டுக்குடியின் முந்தானை சரிந்ததென்று
சிங்களத்துக்குக் கோபம் சிரசிலடிக்கிறது.
இந்த நிலத்தின் சொந்தங்கள் மீது
வந்தகுடிகள் வல்லமை காட்டுவதா? என்று
அஸ்கிரிய பீடத்துக்கு ஆத்திரம்.
எல்லாளன் இன்றுமிருக்கின்றான் என்பதறிந்து
இல்லாமற் செய்வேனென எழுகிறது மல்வத்தபீடம்.
தலதாமாளிகையை இடித்தது யாரென்று
எவருக்கும் தெரியாது.
சரி: தமிழனே செய்தானென்று
வெறும் ஒப்புக்கொருமுறை ஏற்றுக்கொண்டு
சரி, பிழையைத் தராசிலிடுவோம்.
எந்தத் தட்டுத் தாழுமோ
அந்தத் தட்டில் தர்மம்.
வெள்ளையனிடமிருந்து விடுதலை பெற்று
சிங்கள இனத்துக்கு ஐம்பது வருடங்களாகின்றன.
பொன்விழாக் காலம் புலர்ந்ததும்
பொன்விழாவை கண்டியில் கொண்டாடென்று
'சீமாட்டிக்கு' சொல்லியவன் எவன்?
அவனே குண்டுவெடிப்பின் ஆணிவேர்.
பரம்பரை ராசதானியின் பஞ்சுக்கதிரையிலிருந்து
எண்கோணமண்டப எழிற்பீடமமர்ந்து
தமிழர்களை வெற்றிகொண்ட சங்கதியை
நாட்டுக்குச் சொல்ல 'நாச்சியார்' நினைத்தார்.
கூட்டையுடைத் துருவியது குண்டுப்பறவை.
வெளிச்சமானது விடயம்.
அம்மையே குண்டுவெடிப்பின் அடிநாதம்,
"பொன்விழாவுக்கு முன்னர் போரிட்டு வெல்வேன்"
வன்னி பிடிப்பேன்,
கண்டிவீதி என்ராஜ உலா காணும்.
யாழ்ப்பாணத்திலிருந்து தமிழனை
ஏற்றிவரும் வாகனத்தை
பொன்விழாவில் வரவேற்பேன்.
பிரபாகரனா யாரவன்?
பொடியன்.
வென்றபின் அவனுக்கும் கைகுலுக்கிவிடுவேன்.
என்று சொன்னவர் எவர்?
சிங்களப் படைகளின் சேனாதிபதி,
பிரசண்ட ராஜமார்த்தாண்டன்.
'ராஜினாமாத் திலகம்' ரத்வத்த.
வெளிச்சமானது விடயம்.
கண்டி வெடிப்புக்குக் காரணமே இவர்தான்.
தலதாமாளிகையை இடித்தது யாரென்று
எவருக்கும் தெரியாது.
எனினும் எங்களையும் கொஞ்சம் பேசவிடுங்கள்.
பிணம் தின்னும் பேயரசின் கோபுரவாசலுள்ளே
ஆராச்சி மணிகளுக்கு ஒரு கேள்வி.
குண்டு வெடித்ததைக் கண்டிக்கின்றவர்களுக்கு

## உலைக்களம்

ஒரு துண்டுக்கடிதம்.
தலதாமாளிகையின் சுவரில் ஒரு கீறல் விழுந்ததுக்கு
இத்தனை கோபப்படும் இரட்சகர்களே!
மனிதம் மனிதமென்று மாரடிக்கின்ற புனிதர்களே!
சிங்களத்தின் தலையில் இடியிறங்கியதும்,
உங்களுக்கு கோபம் வருகின்றதல்லவா?
இதுதான்! இப்படித்தான்
எங்களுக்குள்ளேயும் கோபம் எரிந்தது.
எப்போது?
நவாலி சென்பீற்றர் தேவாலயத்தில்
கூடுகலைந்த குருவிகள் ஓடிவந்து குடியிருந்தபோது
குண்டு போட்டாயே! அப்போது
பு+வும், பிஞ்சும், காயும், கனியுமாக
முழுமரத்தையே உலுப்பிச் சரித்தாயே! அப்போது.
நாகர்கோவிலில் ஒரு நாள்
வெள்ளைவெளேரெனக் கள்ளமில்லாத குஞ்சுகள்
பள்ளிப்பாடங்கள் படித்துக் கொண்டிருந்தபோது
குண்டெறிந்து கொன்றாயே! அப்போது.
புழுபோற் துடிக்கத் துடிக்கப் புதைத்தாயே! அப்போது.
ஒவ்வொரு நாளும்,
ஒவ்வொரு நொடியும்
எத்தனை விடுகளை எரிக்கின்றாய்.
எத்தனை கோவில்களை இடிக்கின்றாய்.
எத்தனை உயிர்களை எடுக்கின்றாய்.
இனத்தின் அடையாளங்கள் ஒவ்வொன்றையும்
ஒத்தியெடுத்து உருக்குலைக்கின்றாயே.
இதுதான்! இப்படித்தான்
எங்களுக்குள்ளேயும் கோபம் எரிகிறது.
தோன்றாப் பொருளாய் எம்மிற்சுடரும்
மாவீரர் துயிலுமில்லத்தைத் துளைத்தபோதும்
வானமரர் எனநாம் வணங்கும் மறவர்கள்
து/ங்குமிடம் உழுது தொலைத்தபோதும்,
கண்மணிகள் நிம்மதி கலைத்த நிமிடமும்,
புதியமரபொன்றின் புனிதர்களின்
நினைவிடங்களை அழித்தநேரத்திலும்
இப்படித்தான் எங்களுக்குள்ளும்
போபம் கொப்பளித்தது.
புத்தபெருமானைப் பேசவிடுங்கள்,
சித்தார்த்தனுக்கு எல்லாம் தெரியும். ★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்